32°c
கூடிய வெப்பநிலை 32°c
குறைந்த வெப்பநிலை 27°c
மேக மூட்டத்துடன் காணப்படும்

# உதயன்

பக்கம் 58

விலை: யாழ் – 30/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 கதிர்: 173 வள்ளுவர் ஆண்டு: 2045 வைகாசி 04, ஞாயிறு 18.05.2014



ஆண்டுகள் ஐந்து கடந்தும் அந்த நினைவழியா நாள்களின் ரணங்கள்

# பல இடங்களிலும் இன்று நினைவேந்தல் ஏற்பாடு

## முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தோரை உணர்வுபூர்வமாக அஞ்சலிக்க அழைப்பு

யாழ்ப்பாணம், மே. 18
இராணுவத்தினரின் தடைகளையும் - அச்சுறுத்தலையும் மீறி வடக்கில் இன்று பல் வேறு இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளிலும் வேறு பல இடங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று உணர்வெழுச்சியுடன் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக மூச்சடங்கிப் போன மக்கள் நினைவாக, நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகப் பகுதிகளிலும் புலம்பெயர் தேசங்களிலும் இடம்பெறவுள்ளன.

வடக்கில் கடந்த 4 வருடங்க

25ஆம் பக்கம் பார்க்க

## போர் வெற்றி விழா இன்று மாத்தறையில்

கொழும்பு, மே. 18
முள்ளிவாய்க்கால் போரின் வெற்றி விழா தெற்கில் இன்று பெரும் எடுப்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 7 ஆயிரத்து 631 படையினர் மற்றும் 191 இராணுவ வாகனங்களின் அணிவகுப்பு இடம்பெறவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளை போரில் தோற்கடித்ததாக அறிவித்த இலங்கை அரசு அன்றைய தினத்தைச் சிங்கள மக்களின் வெற்றி விழாவாகக் கொண்டாடி வருகின்றது.

5 ஆவது ஆண்டாக இந்த வெற்றி விழாக் கொண்டாட்டம் மாத்தறையில் இன்று இடம்பெறவுள்ளது. வெற்றி விழாக் கொண்டாட்டத்தின் காரணமாக தெற்கில் பெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கவுள்ளார். அத்துடன் ஆளும் கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள், முதலமைச்சர்கள்,

25ஆம் பக்கம் பார்க்க

## உயிர் நீத்த எம் உறவுகளுக்காக அனைவரும் நினைவேந்துவோம்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 18
முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் உயிர் நீத்த எமது உறவுகளுக்காக அனைவரும் இன்று உணர்வெழுச்சியுடன் நினைவேந்தலை அனுஷ்டிக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குண்டுபட்டு குருதி கொப்பளிக்கும் தாயின் முலையிலே மிண்டி

25ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையுடன் சுமுகமான உறவு

### நரேந்திர மோடி விருப்பம்



புதுடில்லி, மே 18
இலங்கையுடன் சுமுகமான உறவைப் பேண தான் விரும்புகிறார் என்று பாரதிய ஜனதாக் கட்சி சார்பாக இந்தியப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுப் பிரதமராகவுள்ள நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் தனது டுவிற்றர் குறிப்பில், "இலங்கை ஜனாதிபதி தொலை பேசியில் தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்தது மகிழ்ச்சியளிக்

25ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரனுக்கு வேண்டுமானால் பிதிர்க் கடனைச் செய்யட்டுமாம்

### சொல்கிறார் இராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், மே. 18
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்காக அவரது உறவினர்கள் இன்று பிதிர்கடன்களை நிறைவேற்ற முடியும். அதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியக் கொடியான புலிக் கொடியுடன் எந்த நிகழ்வும் செய்ய முடியாது என்று இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாத்தறையில் நடைபெறும் போர் வெற்றிக் கொண்டாட்டம் ...

25ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - சீனா பாதுகாப்பு உடன்பாடுகள்

கொழும்பு, மே. 18
சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பான மூன்று உடன்பாடுகளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கையெழுத்தாகியுள்ளது.

25ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ.போ.ச பஸ் மோதி படுகாயமுற்றார் யுவதி

யாழ்ப்பாணம், மே 18
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியை அண்மித்த பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் யுவதி ஒருவர் படுகாயமடைந்தார். உரும்பிராயைச் சேர்ந்த அருணாசலம் கங்கா (வயது -27) என்பவரே காலில் பஸ் சில்லு ஏறிப் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
மேட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த யுவதியை அதே பக்கமாக வந்த இ.போ.ச. பஸ் மோதியுள்ளது. மோட்டார் சைக்கிள் கடும் சேதத்துக்குள்ளானது. விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-104)

## யாழ்ப்பாணத்தை சேர்ந்த 20 பேர் மாத்தறையில் கைதாகி விடுதலை




யாழ்ப்பாணம், மே. 18
போர்வெற்றி விழாநடைபெறும் மாத்தறையில் சந்தேகத்துக்கிடமாகத் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 பேர் பொலிஸாரால் நேற்றுத் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
தென்பகுதியில் முன்னெடுக்கப்படும் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களில்தொழில் செய்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 பேர் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர். உன்னெல்லையில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்து தொழிலுக்குச் சென்று வந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தலைமையில் போர் வெற்றி விழா இன்று மாத்தறையில் பெரும் எடுப்பில் இடம்பெறவுள்ளது. இதன் பொருட்டுச் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. சோதனையின்போது சந்தேகத்தின் பேரில் 20 பேரும் பொலிஸாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். தீவிர விசாரணையின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (த-5)

# இலங்கைக்கு மோடி கொடுக்கும் அழுத்தங்கள் இனி பயனளிக்கும்

### தயான் ஜயதிலக சொல்கிறார்

கொழும்பு, மே 18
இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியினால் இலங்கை அரசுக்குக் கொடுக்கப்படும் அழுத்தங்கள் பயன் அளிக்கும் வகையில் இருக்க அதிக வாய்ப்புள்ளது என அரசியல் விமர்சகரும் முன்னாள் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.
இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசை மாற்றும் புரட்சியானது நிச்சயம் இலங்கையிலும் தாக்கங்களை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையின் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா இதுவரை கொடுத்து வந்த அழுத்தங்கள் நரேந்திர மோடியின் ஆட்சியிலும் தொடரும். இதனால் இரு நாடுகளுக்கும் இடையில் நல்லெண்ணத்தைத் தக்கவைத்திருக்க வேண்டுமாயின், காலதாமதம் இன்றி அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
இந்தியா கொண்டுள்ள இந்த நிலைமையின் கீழ் 13ஆவது திருத்தச் சட்டம் செயற்படுத்தப்படுவதை இலங்கை தொடர்ந்தும் தாமதித்தால், நண்பன் பகைவனாகக் கூடும்.
நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி இந்து இனத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பட்ட அரசியல் சக்தி என்பதால், புதிய ஆட்சியின் கீழ் இந்தியா முன்னரை விடப் பலமான இந்து நாடாக எழுச்சி பெறும். இதனால் ஏற்படும் தாக்கங்கள் இலங்கைக்கு மாத்திரமல்லாது, இந்தியா நோக்கிய மேற்குலக நாடுகளின் அணுகுமுறையிலும் இந்தியா - பாகிஸ்தான் உறவுகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார். (த)



சென்னையில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் வை.கோ ஈகைச்சுடர் ஏற்றுகின்றார். (த)

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுக்க புலனாய்வாளர்கள் களத்தில்

யாழ்ப்பாணம், மே. 18
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுப்பதற்காகப் பெருமளவிலான புலனாய் வாளர்களைக் களமிறக்கியுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளதாக பி.பி.சி செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.
வடக்கு மாகாண சபை முன்றிலில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.
மேலும், முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை அவர்களது உறவினர்கள் தமது வீடுகளில் நினைவுகூரலாம், விளக்கேற்றலாம். ஆனால் பொது இடங்களில் கூட்டம் கூடி அஞ்சலி செலுத்தவோ, தீபம் ஏற்றி நினைவுகூரவோ முடியாது என்று இராணுவமும் பொலிஸாரும் மீளவும் அறிவுறுத்தியுள்ளனர்.
பயங்கரவாதிகளையும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் நினைவுகூருவதற்கே இவ்வாறு பொது இடங்களில் ஒன்று கூடுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது என்று குற்றம் சுமத்தியுள்ள பொலிஸார், அவ்வாறு செய்பவர்கள் பயங்கவாதத்தை நாட்டில் மீண்டும் உருவாக்க முயற்சிக்கின்றார்கள் எனக் கூறி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என்றும் எச்சரித்துள்ளனர்.
இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையிலான புலனாய்வாளர்களைக் களத்தில் இறக்கியுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார் என்று பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது. (த-5)

## யாழ். பல்கலை சூழலில் ராணுவத்தினர் குவிப்பு

யாழ்ப்பாணம், மே 18
முள்ளிவாய்க்கால் நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப் படவுள்ள நிலையில் யாழ்.பல்கலைக் கழகத்தைச் சுற்றி நேற்றுப் பிற்பகல் தொடக்கம் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
அந்த வீதியினூடாகச் சென்று வருபவர்களை அவர்கள் பரிசோதனை செய்த பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கின்றனர் என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.
முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தோரின் நினைவேந்தல் நிகழ்வு இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்திலும் அது இடம்பெறலாம் என்பதால் அதனைத் தடுக்கும் வகையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இவ்வாறு தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-4)

## மோடிக்கு தேவையில்லை ஜெயலலிதாவின் ஆதரவு

### இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

புதுடில்லி, மே 18
இந்திய மக்களவைத் தேர்தலில் நரேந்திர மோடி வெற்றி பெற்றதன் மூலம் இலங்கை இந்திய உறவுகள் மேலும் வலுப்படும் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.
பாரதீய ஜனதாக் கட்சி தனித்து ஆட்சியமைப்பதற்குத் தேவையான ஆசனங்களைச் சுவீகரித்துள்ளதால், மத்திய அரசை நிறுவுவதற்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஆதரவைப் பெறவேண்டிய தேவை இல்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.
இந்திய மக்கள் இந்தத் தீர்மானமிக்க வெற்றியையும், காங்கிரஸ் கட்சியின் தோல்வியையும் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையில் மிகவும் பலம் வாய்ந்த மத்திய அரசு உருவாகவுள்ளமை இலங்கைக்கு மகிழ்ச்சியளிப்பதாக காரியவசம் கூறினார்.
பலமான மத்திய அரசு இருப்பது இலங்கையுடனான உறவுகளை பிரச்சினையின்றித் தொடர்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமென எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார். (த)

## கட்டுப்பாடு இழந்த இராணுவ வாகனம் ஆலய வாகன சாலைக்குள் புகுந்தது

### யாழ்.நாச்சிமார் கோவிலடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 18
வேகக்கட்டுப்பாட்டை இழந்த இராணுவ கனரக வாகனம் ஒன்று யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் வாகனசாலையினுள் புகுந்ததால் கோவில் வாகனசாலை மண்டபம், வாகனங்கள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமாகின.
இந்தச் சம்வம் நேற்றுச் சனிக்கிழமை யாழ்.நாச்சிமார் கோவிலடியில் அதிகாலை 4 மணிக்கு இடம்பெற்றுள்ளது.
சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-
யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று அதிகாலை வேகமாக வந்த இலங்கை இராணுவத்தினரின் கனரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வீதியில் நடப்பட்ட சமிக்ஞை குறியீட்டுக் கம்பத்தை இடித்துத் தள்ளி நாச்சிமார் கோவிலின் வாகனசாலை மண்டபத்துக்குள் புகுந்துள்ளது.
இதனால் மண்டபத்தின் உள்ளே இருந்த பசு, குதிரை போன்ற வாகனங்களின் தலை, கால்கள் துண்டாடப்பட்டுக் கோவிலின் மணவறை அலங்காரப், பொருள்களும் சேதமடைந்தன.
இதன்போது வாகனத்தின் சாரதியும் அவருக்கு அருகில் இருந்த இராணுவச் சிப்பாயும் சிறிய காயங்களுக்கு உள்ளானார்கள். காலையில் விபத்துக்குள்ளான கனரக வாகனத்தை மீட்பதற்காக அப்பகுதியில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இருந்தும் வாகனத்தை மீட்க முடியாமல் போனமையால் சுமார் இரண்டு மணி நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது. பின்பு இலங்கை மின்சார சபையின் உதவியுடன் விபத்துக்குள்ளான வாகனம் மீட்கப்பட்டது. (த-21)





நாச்சிமார் கோவில் வாகன சாலையினுள் புகுந்த இராணுவத்தினரின் கனரக வாகனம்

## நாளையும் தானமிடுகின்றனர் படையினர் தமிழர்களை அணிதிரளுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 18
படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டு யாழ். நகரின் மத்தியில் நடத்தப்பட்டு வரும் வெசாக் நிகழ்வில், நாளை திங்கட்கிழமையும் மாபெரும் தானம் வழங்கப்படவுள்ளது என்று இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.
வெசாக்தினத்தையொட்டிகடந்த 14ஆ[illegible] திகதி படையினர் [illegible] தானத்தை ஒரே [illegible] 000 பேர் உண்டிருந்தனர். அதேபோன்று நாளையதினமும் தானத்தில் பங்கெடுத்துக்கொள்ளுமாறு பலாலி இராணுவத் தலைமையக ஊடகப் பேச்சாளர் மேஜர் ரஞ்சித் மல்லவராச்சி அழைப்பு விடுத்துள்ளார்.
படையின்ரால் பெரும் எடுப்பில் வெசாக் ஏற்பாடுகள் யாழ். நகரில் மேற்கொள்ளப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.
வெசாக் வலயத்தின் 6 ஆம் நாளான நாளை திங்கட் கிழமை இரவு, விசேட விருந்தினர்கள் மற்றும் மதத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இதற்காக விசேட ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இதற்காக மாபெரும் தானசாலை படையினரால் அமைக்கப்பட்டுள்ளது. வருகை தருகிறவர்கள் அனைவருக்கும் [illegible] ஏற்பாடுகளைப் படையினர் செய்துள்ளனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை மாபெரும் வெற்றிக்கு இட்டுச்சென்று நாட்டின் புதிய பிரதமராக வரவிருக்கும் நரேந்திர மோடியை, தலைநகர் டில்லியில் பெரும் குதூகலத்துடன் ஆதரவாளர்கள் வரவேற்றுள்ளனர். நரேந்திர மோடி விமான நிலையத்திலிருந்து பெரிய வெற்றி ஊர்வலமாக பா.ஜ.க. கட்சித் தலைமையகத்தை வந்தடைந்திருந்தார்.
வழிநெடுகிலும் பல்லாயிரக்காணக்கான மக்கள் பா.ஜ.க.வின் கொடியை அசைத்தபடியும், கோஷங்களை எழுப்பியபடியும் அவருக்கு வரவேற்பு அளித்தனர். (த)

# என் வாழ்க்கையும், ஆட்சியும் திறந்த புத்தகத்தை போன்றது

***மன்மோகன் சிங் உரை***

புதுடில்லி, மே 18



என் வாழ்க்கையும், காங்கிரஸ் ஆட்சியும் திறந்த புத்தகம் போன்றது என்று பிரதமர் மன்மோகன் சிங் நாட்டு மக்களுக்கு நேற்றுக் காலை ஆற்றிய உரை யில் குறிப்பிட்டுள்ளார். மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதை அடுத்து, காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.
இதையடுத்து நேற்றுத் தனது பிரதமர் பதவியில் இருந்துவிலக முன்புநாட்டுமக்களுக்கு மன்மோகன் சிங் உரையாற்றினார்.
அப்போது, எனது வாழ்க்கை திறந்த புத்தகம்; நான் எனது பணியை திறமையுடன் சிறப்பாக செய்துள்ளேன்; இப்போது பிரதமர் அலுவலகத்தை விட்டு வெளியேற வேண்டிய நேரம் வந்து விட்டது; இந்திய மக்களே, உங்கள் தீர்ப்பை நாங்கள் மனித நேயத்துடன் ஏற்றுக் கொள்கிறோம்; உங்களின் முடிவை மதிக்கிறோம். கடந்த 10 ஆண்டுகளில் நாங்கள் பல சாதனைகளை புரிந்துள்ளோம்; கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்புஇருந்ததை விட நாடு தற்போது மிகவும் பலம் வாய்ந்ததாக உருவாகியுள்ளது.
நாட்டிற்காக எனது பங்களிப்பை தந்தததற்காக நான் பெருமை கொள்கிறேன்; இந்தியா பொருளாதார துறையில் உயர்ந்த நிலையை அடையும் என உறுதி அளிக்கிறேன்; அடுத்து வரும் அரசு வெற்றிகரமாக செயல்பட நான் இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன்; இந்த உயர்ந்த பதவியில் இருந்து விலகினாலும், உங்களின் அன்பை எப்போதும் மறக்க மாட்டேன் என்று கூறினார்.
மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்றுப் பதவி விலகியது. நேற்று சனிக்கிழமை நண்பகல் டில்லியில் கூடிய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் கடைசி அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. பிரதமர் பதவியை மன்மோகன் சிங்கும், அவரது அமைச்சரவை சகாக்களும் துறந்தனர். இதற்கான கடிதத்தை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியைச் சந்தித்த மன்மோகன் சிங் கையளித்தார். (த)

# காங்கிரஸை ஆதரித்ததே எம் தோல்விக்கு காரணம்

மாயாவதி வருத்தம்



புதுடில்லி, மே 18

மக்களவைத் தேர்தலில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஒரு தொகுதியில் கூட பகுஜன் சமாஜ் கட்சி வெற்றி பெறவில்லை. அந்த மாநிலத்தில் மொத்தமுள்ள 80 தொகுதிகளில் 71 தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.
இந்நிலையில் மாயாவதி லக்னோவில் செய்தியாளர்களிடம் நேற்றுச் சனிக்கிழமை கூறியதாவது:-
காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நடைபெறுவதற்காக வெளியில் இருந்து ஆதரவு அளித்த காரணத்தால் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தோல்வி அடைய நேரிட்டது
ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தவறான கொள்கைகளால் நாட்டு மக்கள் கடும் கோபமடைந்திருந்தனர். அந்தக் கூட்டணியின் ஆட்சிக்கு ஆதரவு அளித்த கட்சிகள் அனைத்தும் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்துள்ளன. இதன் காரணமாகத் தான் பா.ஜ.க. அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது-என்றார். (த)

# மோடியின் வெற்றியால் ஈழ அகதிகள் மகிழ்ச்சியில்

## தீர்வு கிட்டும் என நம்பிக்கை

சென்னை, மே 18

எமக்குத் துரோகம் இழைத்த காங்கிரஸின் ஆட்டம் முடிந்து விட்டது. பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்துள்ளதால் எமது பிரச்சினைகளுக்கு இனி நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்று இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.
இலங்கையின் இனப் பிரச்சினை காரணமாக கடந்த 24 ஆண்டுகளாக தமிழகத்துக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து தற்போது 113 இலங்கை அகதிகள் முகாம்களில் சுமார் 69 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். 1லட்சம் பேர் பொலிஸ் பதிவு மூலம் வெளியில் வாடகை வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.
முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு தமிழக அரசு சார்பில் இலவச மானியமாக குடும்பத் தலைவருக்கு 1000 ரூபாவும், 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 750 ரூபாவும், அதற்கு கீழ்பட்ட குழந்தைகளுக்கு 400 ரூபாவும் வழங்கப்படுகிறது.
என்னதான் இலவசத் திட்டங்கள் வழங்கினாலும் இவர்களுக்கு அங்கு குடியுரிமை இல்லை.
இந்தியாவைத் தொடர்ந்து 10 ஆண்டுகள் ஆண்ட காங்கிரஸ் கட்சி இவர்கள் மீது அக்கறை செலுத்தவில்லை என்றே சொல்லப்படுகிறது. முகாம்வாசிகளை பொறுத்த வரைக்கும் பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் இதற்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.
அந்தக் கனவு நனவாகிவிடும் என நினைத்துத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து தொலைக்காட்சிகள் வாயிலாகப் பார்த்துக் கொண்டு இருந்தனர். தனியாக யார் தயவும் இல்லாமல் பா.ஜ.க ஆட்சி அமைக்கப் போகிறது. ஈழத் தமிழர்களுக்கு துரோகம் செய்த காங்கிரஸ் கட்சி இந்தியாவில் திசை தெரியாமல் போனது என்று கூறி ஈழ அகதிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.
இவர்கள் மட்டுமல்லாமல் கனடா, பிரான்ஸ், லண்டன், நோர்வே போன்ற பல்வேறு நாடுகளில் இருக்கும் இலங்கைத் தமிழர் களும் இந்தியாவில் ஆட்சி மாற்றம் வந்து விட்டது என்று மகிழ்ச்சியடைந்துள்ளனர். (த)

# அமெரிக்காவுக்கு வாருங்கள்; மோடிக்கு ஒபாமா அழைப்பு



வாஷிங்ரன், மே 18

இந்திய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி அமெரிக்கா வர வேண்டும் என வெள்ளை மாளிகை அழைப்பு விடுத்துள்ளது.
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், மோடியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.
குஜராத் கலவரம் காரணமாக, மோடிக்கு அமெரிக்கா விஸா அளிக்க மறுத்து வந்தது. மோடி பா.ஜ.க. பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர், அமெரிக்காவின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் மோடியைச் சந்தித்துப் பேசினார். இந்த நிலையில், மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றுள்ளது. நரேந்திர மோடியும் பிரதமராகப் பதவியேற்க உள்ளார்.
இதனையடுத்து வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜே கார்னே கூறுகையில், மோடி தலைமையிலான ஆட்சியில், இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவு மேம்படும் எனத் தெரிவித்துள்ளார். மேலும் தேர்தலில் வரலாற்றுச் சாதனை படைக்கும் வகையில் வெற்றி பெற்ற மோடிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்வதாகவும், மோடி பிரதமராகப் பதவியேற்ற பின்னர், அவருடன் இணைந்து செயற்பட ஆர்வமாக உள்ளதாகவும், ஜனநாயக மாண்புகள் வலுப்பட, இரு தரப்பு உறவை மேம்படுத்த விரும்புவதாகவும், இந்திய பிரதமர் அமெரிக்கா வருவதை தாங்கள் வரவேற்பதாகவும் கூறினார். அதே நேரத்தில், தேர்தலில் வெற்றி பெற்ற மோடியை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து கொண்டார். அப்போது ஒபாமா, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் தீர்மானமான முடிவு கிடைத்துள் ளது. மோடி தலைமையில், உலகுக்கு இந்தியாவின் பங்களிப்பு அதிகமாகக் கிடைக்க வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்வதாகக் கூறினார். உலக பொருளாதாரம் தொடர்பாகவும், இரு நாட்டு உறவு தொடர்பாகவும் மோடியும், ஒபாமாவும் ஆலோசனை செய்தனர். (த)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பெறமுடியாத இக்கட்டில் காங்கிரஸ்

புதுடில்லி, மே 18

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின்படி எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
இந்திய அரசியல் சாசனம் மற்றும் மரபுப்படி நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக ஒருவர் வருவதற்கு அவரது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் குறைந்த பட்சம் பத்து வீத ஆசனங்களாவது இருக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.
ஆனால் தற்போதைய தேர்தல் முடிவுகளின்படி எந்த எதிர்க்கட்சியும் தனித்து அந்த எண்



ணிக்கை ஆசனங்களைப் பெறவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. இந்திய நாடாளுமன்றத்தில் மொத்தம் 542 ஆசனங்கள் உள்ளன. எனவே ஒரு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் என்ற உத்தியோகபூர்வ அந்தஸ்து நிலையைப் பெறவேண்டுமானால் குறைந்த பட்சம் 55 நாடாளுமன்ற உறுப்பினர்களையாவது அவரது கட்சி பெற்றிருக்க வேண்டும்.
தற்போதைய நிலைமையில் பிரதான எதிர்க்கட்சி நிலையில் உள்ள காங்கிரஸ் கட்சி கூட அந்த எண்ணிக்கையைப் பெறவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டட திறப்பு விழாவை கண்காணித்த படையினர்

தொல்புரத்தில் நேற்றுச் சனிக்கிழமை புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட வயோதிபர் இல்லத்துக்கான கட்டடத் திறப்பு விழாவில் சந்தேகம் கொண்ட இராணுவத்தினர் அதனை நேரடியாகச் சென்று கண்காணித்ததுடன் புகைப்படங்களையும் எடுத்து சென்றுள்ளனர்.

கட்டடத்தில் நினைவுக் கல்லுடன் பொருத்தப்பட்டு இருந்த அமரரான இளம் பெண் வைத்திய நிபுணரின் படத்தையும் அவர்கள் புகைப்படம் எடுத்துச் சென்றனர். இதனால் குறிப்பிட்ட நிகழ்வில் கலந்து கொள்ள வந்தவர்கள் பதற்றமடைந்தனர்.


முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுடன் தொடர்புடையதாக இந்த நிகழ்வு நடைபெறுகின்றதா? எனச் சந்தேகம் கொண்டே படையினர் அவ்வாறு செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-86)

## டிப்பர்-மோட்டார் சைக்கிள் விபத்து; சம்பவ இடத்தில் இளைஞர் சாவு

### சங்கானையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 18

சங்கானையில் இடம்பெற்ற டிப்பர்-மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் சுமார் 100 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டுச் சில்லில் நசியுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.



சங்கானையில் இடம்பெற்ற டிப்பர்-மோட்டார் சைக்கிள் விபத்து

சங்கானை கூடத்து அம்மன் கோயிலை அண்மித்து நேற்றுப் பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது. இந்த விபத்தில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த தேவலிங்கம் வசிகரன் (வயது-28) என்பவரே உயிரிழந்தார்.

கொழும்பில் வசிக்கும் அவர் தனது உறவினர் ஒருவரது திருமணத்துக்காகச் சில நாள்களுக்கு முன்னரே யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார் என்றும் காரைநகரிலிருந்து மோட்டார் சைக்கிளில் யாழ். நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோதே டிப்பருடன் எதிரெதிரே மோதி விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தையடுத்து அவர் சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. டிப்பர் சாரதியைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-21)

## கஜேந்திரன் வீட்டருகே இராணுவத்தினர் நிலை

யாழ்ப்பாணம், மே 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரனின் வீட்டிற்கு அருகாமையிலுள்ள சிவசக்தி சனசமூக நிலையத்தில் நேற்று மாலை 5.00 மணி தொடக்கம் இராணுவம் நிலைகொண்டுள்ளது.

குறித்த சனசமூக நிலையம் கந்தர்மடத்திலுள்ள சிவன் -அம்மன் கோவிலின் தெற்குப்புற வீதியில் அமைந்துள்ளது.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினரிடம் சனசமூக நிலையத்தின் திறப் பைப் பெற்றுக் கொண்ட பின்னர் தாம் இரண்டு நாள்கள் அங்கு தங்கப்போவதாக கூறியுள்ளனர்.

குறித்த நிர்வாக உறுப்பினரும் அச்சம் காரணமாக மறுபேச்சுப் பேசமுடியாத நிலையில் சம்மதித்துள்ளார்.

இன்று தமிழ் இன அழிப்பு நாள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரகடனம் செய்துள்ளது. அந்நாளில் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நினைவேந்தல் நிகழ்வை நடத்த தமிழர் தரப்புக்கள் தயாராகியுள்ள நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் வீட்டிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள குறித்த சனசமூக நிலையத்தில் இராணுவம் நிலைகொண்டுள்ளமை அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (த-104)

## 14 வயதுச் சிறுவனை 'மொங்கினர்' மூவர்

14 வயதுச் சிறுவனை மூன்று பேர் தாக்கி காயப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை நுணாவிலில் இடம்பெற்றது.

வீதியில் சென்றுகொண்டிருந்த சுற்றிவளைத்து மூவர் தன்னை தாக்கியுள்ள தாகவும் தாக்கப்பட்டதன் காரணம் தெரியவில்லை எனவும் பாதிக்கப்பட்ட சிறுவன் தெரிவித்தார்.

நுணாவில் வைரவர் கோயிலடியைச் சேர்ந்த ஞானப் பிரகாசம் ஞானேஸ்வரன் (வயது - 14) என்னும் சிறுவன் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ- 9)



யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் தொடர்ச்சியாக ஐந்து நாள்கள் இடம்பெறும் இயல் இசை நாடக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வில் நேற்று பாசையூர் சென். அன்ரனிஸ் கலைக்கழகம் வழங்கிய வீரபாண்டிய கட்டப்பொம்மன் தென்மோடி நாட்டுக் கூத்து. (த)

## விபத்தில் படுகாயமுற்ற 17 வயது இளைஞர் சாவு

### வைத்தியசாலை தரப்பு அசமந்தம் எனப் பெற்றோர் விசனம்

மன்னார், மே 18

முருங்கன் - சிலாபத்துறை பிரதான வீதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்து ஒன்றில் 17 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞரின் மரணத்துக்கு மன்னார் பொது வைத்தியசாலை அதிகாரிகளின் அசமந்தப்போக்கே காரணம் என உயிரிழந்த இளைஞரின் பெற்றோரும், உறவினர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்.

முருங்கன் மருதமடு கிராமத்தைச் சேர்ந்த தே. சுலைக்சன் (வயது-17) என்ற இளைஞரே குறித்த விபத்தில் உயிரிழந்தார்.

நேற்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் தனது வீட்டில் இருந்து பரிகாரிக்கண்டல் பகுதியில் உள்ள பண்ணைக்கு பால் கொடுத்து விட்டு வீடு நோக்கி சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது முருங்கன் சிலாபத்துறை பிரதான வீதியால் வந்து கொண்டிருந்த சிறிய ரக வாகனம் குறித்த இளைஞர் மீது மோதியுள்ளது.

இதன்போது குறித்த இளைஞர் படுகாயமடைந்தார். இந்த நிலையில் குறித்த வாகனத்தின் சாரதி தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக குறித்த வாகனத்தின் கண்ணாடிகளை உடைத்து விட்டுத் தப்பிக்கொள்ள முற்பட்டபோது சம்பவத்தை நேரில் கண்டவர்கள் சாரதியைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். படுகாயமடைந்த இளைஞர் முருங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் மன்னார் வைத்தியசாலையில் குறித்த இளைஞருக்கு உரிய சிகிச்சை வழங்கப்படவில்லை எனப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

நீண்ட நேரத்துக்குப் பின்னரே குறித்த இளைஞனுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

நீண்ட நேரத்தின் பின் முற்பகல் 11.45 மணியளவில் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் இருந்து கொழும்புக்கு அம்புலன்ஸ் வண்டியில் கொண்டு செல்லப்பட்டபோது புத்தளம் வீதியில் குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞரின் சடலத்தைப் புத்தளம் வைத்தியசாலையில் ஒப்படைத்து விட்டு குறித்த அம்புலன்ஸ் மன்னார் நோக்கி வந்துள்ளதாகவும், சடலத்தை புத்தளம் வைத்தியசாலைக்குச் சென்று பெற்றுக்கொள்ளுமாறு மன்னார் வைத்தியசாலைத் தரப்பினர் பெற்றோரிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர். (த-56)

## மோடிக்கு வாழ்த்துச் சொல்வதற்காக 3 ½ மணி நேரம் செலவிட்ட மஹிந்த

கொழும்பு, மே. 18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவின் புதிய பிரதமராகத் தேர்வாகியுள்ள நரேந்திர மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்தார். இதற்காக அவர் மூன்றரை மணி நேரத்தைச் செலவிட்டதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பெரு வெற்றியீட்டியுள்ள பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளரும், இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ளவருமான நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் முதலாவதாக வாழ்த்து தெரிவித்ததுடன், இலங்கைக்கு வருமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நிலவரங்கள் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கே பா.ஜ.க. ஆட்சியமைப்பதற்கான தெளிவான சமிக்ஞைகளை காண்பித்திருந்தது. உடனடியாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ, நரேந்திர மோடிக்குத் தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவிக்க முயன்றார்.

ஆனால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் தொலைபேசி அழைப்பை நரேந்திர மோடி எடுக்கவில்லை. அவர் தனது தாயாரிடம் ஆசி பெறுவதற்காக அப்போது சென்று கொண்டிருந்தார்.

தாயாரைச் சந்தித்து ஆசி பெற்று விட்டுத் திரும்பிய பின்னர், பிற்பகல் 2.30 மணியளவிலேயே ஜனாதிபதி மஹிந்தவால், நரேந்திர மோடியுடன் பேச முடிந்தது. (த-5)

## இந்திய அரசுடன் இனிமேல் புதிய அணுகுமுறை தேவை

### ரணில் வலியுறுத்தல்

கொழும்பு, மே 18


இந்தியாவில் புதிதாக ஆட்சி ஏறும் பாரதீய ஜனதா கட்சியின் அரசுடன் ராஜதந்திரத் தொடர்புகளை மேற்கொள்ளும் போது, புதிய நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தியாவில் புதிய மாற்றம் ஒன்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய வெளிவிவகார கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்த நிலையில் இலங்கை அரசும் புதிய அணுகு முறைகளைப் பயன்படுத்தி பாரதீய ஜனதா கட்சி அரசுடன் ராஜதந்திர உறவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய மத்திய அரசின் அங்கமாக இல்லாவிட்டாலும், இலங்கை விடயத்தில் இரண்டு தரப்பினரும் ஏறத்தாழ ஒரே கருத்தைக் கொண்டுள்ள நிலையில், ஜெயலலிதாவுடனான நல்லுறவும் இலங்கைக்கு முக்கியமா[illegible] [illegible]. (த)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சுப்பையா சண்முகநாதன்

ஆண்டு மூன்று ஆனது அப்பா
உங்கள் முகம் பார்த்து
எந்நேரமும் உங்கள் நினைவு
நித்தம், நித்தம் கவலையுடன்
வாழும் பிள்ளைகள் மீண்டும்
பிறப்புடன் வருவீர்கள் என்று
எதிர்பார்க்கிறோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தண்ணீருக்கு அலையும் மாணவர்கள்

முள்ளியவளை,மே 18

முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட குமுழமுனை மகா வித்தியாலயத்தில் போருக்கு முன்னர் 2005ம் ஆண்டு அமைக்கப்பட்ட கிணறு சென்ற வாரம் உள்பக்கத்தால் இடிந்து மண் இறங்கியுள்ளது.

இதனால் மாணவர்கள் கிணற்றில் நீரை பருக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் 522 மாணவர்கள் கல்வி கற்கும் தரம் 1 தொடக்கம் 13 வரை மாணவர்கள் கற்கின்ற இப்பாடசாலையில் குடிதண்ணீருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.



கோப்புப் படம்

மாணவர்கள் வாளிகளுடன் அயல்வீடுகளில் உள்ள கிணறுகளில் குடி தண்ணீருக்காக செல்கின்ற காட்சி காலை தோறும் காணக்கூடியதாக உள்ளது. இது தொடர்பில் வலயக் கல்விப் பணிமனைக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளது. நல்ல முடிவுக்காக மாணவர்களும், ஆசிரியர்களும் காத்திருக்கின்றனர். (ஒ-433)

# சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் வெடிச் சத்தம்

## சிகிச்சை பெற வந்தவர்கள் ஓட்டம்

தென்மராட்சி, மே 18

சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் நேற்றுக்காலை பெரிய வெடிச் சத்தம் கேட்டதால் சிகிச்சை பெற காத்திருந்த மக்கள் சிதறி ஓடினர்.

மருத்துவமனை வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்மாற்றி வெடித்ததாலேயே இந்தச் சத்தம் ஏற்பட்டது.

மின்மாற்றி வெடித்ததில் மருத்துவமனைக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டது.

இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் இலங்கை மின்சார சபைக்கு அறிவித்ததை அடுத்து அங்கு வந்த ஊழியர்களால் சீர் செய்யப்பட்டது. (ஒ-9)

# யாழ்.இந்து சமயப் பேரவை நரேந்திரமோடிக்கு வாழ்த்து

யாழ்.இந்து சமயப் பேரவை நரேந்திர மோடிக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை இந்திய துணைத் தூதரகம் ஊடாக அனுப்பி வைத்துள்ளது.

இந்தச் செய்தியில் - நடைபெற்று முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத மாபெரும் வெற்றியீட்டி பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தங்களுக்கு இலங்கை வாழ் இந்துக்கள் சார்பில் நல் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இலங்கைத் தீவில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு பிரதமராக பதவி ஏற்கவுள்ள தாங்கள் துணிவான நடவடிக்கைகளை மேற்கொண்டு அனைவரின் பாராட்டுக்களைப் பெற்றுக் கொள்வீர்கள் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர். இந்தச் செயற்பாடு தமிழர்களினதும், சிங்களவர்களினதும் சகோதர உணர்வை மேம்படுத்துவதாக அமையட்டும்.

இந்தியத் திருநாடு புதிய தலைமையில் மாபெரும் சாதனை களைப் புரிந்து உலகிற்கு முன்னுதாரணமாகத் திகழ்வதோடு, உலகை ஆன்மிக பாதையில் வழி நடத்த தங்களுக்கு எல்லாம் வல்ல ஞானப் பெருங்கூத்தனின் திருவருள் அபரிமிதமாக சொரிய பிரார்த்திக்கின்றோம் - என்றுள்ளது. (ஓ)

# எம்மவருக்கு அஞ்சலி செய்ய எமக்கு ஏன் எதற்குத் தடை?

## கேள்வி கேட்கிறார் டெனீஸ்வரன்

மன்னார், மே 18

கடந்த இறுதிப் போரில் மக்களின் இருப்புக்கள் மீது கொத்துக் கொத்தாக வீசப்பட்ட குண்டு மழையினால் கொல்லப்பட்ட எமது மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு எமக்கென்ன தடை என வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

**மீண்டும் தமிழ் மக்களின் உரிமைகள் மீது அடக்கு முறைகள் கட்ட விழ்த்து விடும் நிகழ்வாகவே அமைகின்றது.**

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் போது கொல்லப்பட்ட எமது தமிழ் மக்கள், போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தவோ அல்லது துக்கம் அனுஷ்டிக்கவோ கூடாது என அரசு கட்டளையிட்டுள்ளதும், அவ்வாறு ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என எச்சரித்துள்ளமையும் மீண்டும் தமிழ் மக்களின் உரிமைகள் மீது அடக்கு முறைகள் கட்ட விழ்த்து விடும் நிகழ்வாகவே அமைகின்றது.

இலங்கை அரசமைப்பில் இல்லாத ஒரு புதிய சட்டமே இறந்த ஆன்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தக் கூடாது என்பதாகும்.

இவைகளையும் சர்வதேசம் கண்கூடாகக் கண்டு கொள்ளட்டும். அத்தோடு நடு நிலைமை வகித்த இந்தியாவும் இனியாவது விழிப்படையட்டும்.

மக்கள் பொது இடங்களில் அஞ்சலி செலுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த போதும், மக்கள் மனமுவந்து தமது வீடுகளில் தீபமேற்றி அஞ்சலி செலுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (ஓ-56)



தெல்லிப்பழை கட்டுவன் வீதியில் அமைந்துள்ள ரயில் பாதை திருத்தியமைக்கப்பட்டு வருவதால் வீதிக்குக் குறுக்காகச் செல்லும் மின் விநியோகக் கம்பிகளுக்குக் கீழே பாதுகாப்புக் கம்பி வலை பொருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள பணிசெய்யும் மின்சார சபை ஊழியர்கள் இருவர். (36)

# உள்ளூராட்சி ஆணையாளர் அனுமதித்தால் ஆயுள்வேத வைத்தியருக்குக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, மே 18

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும் ஆயுள்வேத வைத்தியர் கோரியுள்ள தொடர்பாடல்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதி கிடைத்த பின்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் வலி. தென்மேற்குப் . பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நிதிக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

பிரதேச சபைகளின் கீழுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆயுள்வேதவைத்தியர்களுக்குதொலைபேசி பாவிப்பதற்கான மாதாந்தக் கொடுப்பனவு பிரதேச சபைகளால் வழங்கப்படும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த சுற்றறிக்கைக்கு அமைய தொடர்பாடலுக்கான செலவினங்களை வழங்குமாறு ஆயுள்வேத வைத்தியர் பிரதேச சபையைக் கோரியிருந்தார்.

இவரது கோரிக்கையைப் பரிசீலனை செய்த உறுப்பினர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் உதவியுடன் கொடுப்பனவை வழங்கலாம் என்று தீர்மானித்திருந்தனர்.

இதேவேளை பொதுமக்களுக்கு சேவை செய்ய வந்துள்ள உறுப்பினர்களின் தொடர்பாடல்களுக்கான செலவினங்கள் வழங்கப்படாதது குறித்து உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-115)

# கண்டெடுக்கப்பட்ட பணம் உரியவரிடம் கையளிப்பு

## வற்றாப்பளை அம்மன் கோயில் அன்னதான சபையினருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், மே 18

கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் ஆனைக் கோட்டைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா பணமும் முக்கிய ஆவணங்களும் அடங்கிய பையொன்று அதன் உரிமையாளரிடம் கண்டெடுத்தவர்களாலேயே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோயில் அன்னதான சபையினர் ஆனைக் கோட்டைப் பகுதியில் பார ஊர்தியில் சென்று பணம் சேகரித்துக் கொண்டிருந்தனர். அப்போது வீதியில் கிடந்த பை ஒன்றைக் கண்டெடுத்துள்ளனர். அதற்குள் 50 ஆயிரம் ரூபா பணமும் சில ஆவணங்களும் இருந்தன. உடனடியாக பையில் இருந்த ஆவணம் ஒன்றில் காணப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்ட போது மறுமுனையில் அழைப்புக்குப் பதில் கிடைக்கவில்லை.

அதனை அடுத்து பணப் பொதியைக் கண்டெடுத்த வற்றாப்பளை அன்னதான சபையினர் உதயன் பணிமனைக்கு வந்து விடயத்தைத் தெரிவித்தனர். குறித்த தொலைபேசி இலக்கத்துடன் உதயன் பணியாளர்கள் தொடர்பு கொண்டபோது, பணத்தைத் தொலைத்த உரிமையாளர் அதற்குப் பதிலளித்தார். தகவலறிந்த அவரும் உதயன் பணி மனைக்கு வந்து தனது ஆவணங்களுக்குரிய ஆதாரங்களைக் காட்டிப் பணத்தைப்பெற்றுக் கொண்டார்.

அன்னதான சபையினரின் செயலைப் பாராட்டிய அவர், அவர்களது கோயிலுக்கு 5 ஆயிரம் ரூபா பணத்தையும் அன்பளிப்புச் செய்தார். (ற-5)

# வங்கிகள், நிதி நிறுவனங்களின் பாதுகாப்பு குறித்து ஆராய்வு

வலி .வடக்கு, மே 18

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தலைமையில் நடை பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

சுன்னாகம், கோப்பாய், வட்டுக் கோட்டை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உட்பட மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். (வ-86)

# தார் வீதியாக புனரமைத்து தாருங்கள்

தென்மராட்சி, மே 18

சரசாலை தெற்கில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் உள்ள சன சமூக நிலைய வீதியைத் தார் வீதியாக புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர்.

கனகன்புளியடி - பருத்தித்துறை வீதியிலிருந்து செல்லும் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதியில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

மழை காலத்தில் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதாலும் கோடை காலத்தில் வீதியில் காணப்படும் பெரிய குழிகளால் சைக்கிளில் கூட செல்ல முடியாத நிலை காணப்படுவதாலும் வீதியைத் தார் வீதியாக புனரமைத்துத் தருமாறு கோரியுள்ளதாகவும் தெரிவித்தனர். (ஒ-9)

# சங்கக்கடை உடைத்து திருட்டு



கோப்புப்படம்

வரணி, மே 18

கொடிகாமம் ப.நோ.கூ. சங்கத்தின் கீழ் இயங்கும் கரம்பைக் குறிச்சிக் கிளை கடந்த வியாழன் இரவு உடைக்கப்பட்டு பெறுமதியான நுகர்ச்சிப் பொருள்கள் திருட்டுப் போய் விட்டன. கொடிகாமம் பொலிஸார் விசாரணையை நடத்தி வருகின்றனர். (ஓ-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

தேனுஷா செல்வகுமார் என்பவரது இல. 3483554 கொண்ட கடவுச்சீட்டு 11.05.2014 அன்று யாழ் நூல் நிலையத்திலிருந்து பஸ் நிலையம் வரையுள்ள இடைப்பட்ட தூரத்தில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 470 2219 (48188) (7.6.3)


## சார மரம் முறிந்து வீழ்ந்ததில் காயம்

கட்டடத்தின் சாரமரம் முறிந்து வீழ்ந்ததில் கட்டடத் தொழிலாளிக்கு தலையில் காயமேற்பட்டது.

இந்தச் சம்பம் நேற்றுமுன்தினம் தனங்களப்பில் இடம்பெற்றது.

அதேயிடத்தைச் சேர்ந்த துரைராசா ரஜீபன் (வயது - 25) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-9)


## நிரந்தர தொழில் வாய்ப்பு

உங்கள் வருமானப் பிரச்சினையை தீர்க்க இன்றே நிரந்தர தொழில் வாய்ப்பினைப் பெற எம்மோடு இணையுங்கள் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜாம்/டொபி/பிஸ்கட்/PVC/கிளவுஸ்/காமெண்ட்/Paint... மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல் போன்ற பிரிவுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் முதல் மாதம் 18000/=, 24000/=, 2ஆம், 3ஆம் மாதங்களில் 28000/=, 32000/= வரை பெறலாம். உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள், குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில் வருகை அன்றே வேலைக்குச் செல்லலாம்.

தொடர்புகளுக்கு: 077 683 8231 (43307)(7.6.3)

## புரோஸ்ட்ரேட் வருத்தங்கள்

- இருதய நோய்.
- புற்றுநோய் தணிப்பு.
- ஈரல் பாதிப்புகள்.
- மூட்டுவலி, முதுகுவலி.
- புரோஸ்ட்ரேட் பிரச்சினைகள்.
- ஒற்றைத் தலைவலி.
- சைனஸ் பிரச்சினைகள்.
- மன அழுத்தம்.
- இருமல், சளி.
- படுக்கைப் புண்கள்.
- நீரிழிவுப் புண்கள்.
- நரக வைரஸ் பாதிப்பு.
- பாலியல் குறைபாடு.

அழற்சி, வீக்கம் போன்றவற்றுக்கு சத்திரசிகிச்சை அற்ற மருத்துவம்.

**அறிகுறிகள்:**

- அடிக்கடி சிறுநீர் கழிப்பதற்கான உணர்வு
- சிறுநீர் கழிக்க ஆரம்பித்தலில் கடினம்
- முழுமையாக வெளியேற்ற இயலாமை
- சீரமைப்பற்ற வெளியேற்றம்
- எரிச்சல், வலி
- சிறுநீரில் இரத்தம் கலந்திருத்தல்

**Free Consultation**
Daily @ Ceylinco House
Weekdays 9.00 a.m - 5.00 p.m
Saturdays 9.00 a.m - 2.00 p.m
Monthly Clinics are conducted islandwide

Tel: 011 4 388 101
4 388 102

Hotline : 0777 708 310 / 0777 555 600
0777 708 330

Ceylinco House,
11th Floor
69. Janadhipathi Mawatha
Colombo1.

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine
E.mail:fairpharmasrilanka@yahoo.com
Website:www.ayurveda.lk.

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA & BOI
AN ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

(சி/14339)(10.6)

## தேவை

இதோ அரிய சந்தர்ப்பம் கப்பல், விமான நிலையத்தில் (தனியார்)வேலை செய்ய விருப்பமா? அழையுங்கள் கப்பல், புனர்நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்கள், தச்சு, வெல்டர், விமானநிலையத்தில் சுத்திகரிப் பாளர், லொன்றி, காகோ பிரிவுக்கு வயது 18 - 48 ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000/=, 25,000/=, , 38,000/=, உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள் + குழுக்கள் சேரலாம்)

தொடர்பு: 077 556 1883 (43308)(7.6.3)

## வேலையாள்கள் தேவை

விகாஸ்Hotel சாவகச்சேரிக் கிளையில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- சமையல் வேலை தெரிந்தவர்
- உணவு பரிமாறுபவர்
- சுத்திகரிப்பாளர்

ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

தொடர்பு : விகாஸ் Hotel
பழைய பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி.
077 620 0727, 077 717 9494 (43649)(7.6.3)

## KANDY HOMES & Construction

நவீன வடிவமைப்புக்களில் உங்களது விருப்பத்திற்கு அமைய எண்ணம் போல அழகிய வீட்டினை வாஸ்துசாஸ்த்திர முறைப்படி நாம் அமைத்துக் கொடுக்கின்றோம்.



- 15 வருட கால அனுபவம் வாய்ந்த சேவைத்துறையில்
- தற்பொழுது எமது நிறுவனத்தால் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளினையும் கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளையும் நேரில் பார்வையிடலாம்.



81. Pallaly Road,
Illupaiyadi Junction,
Jaffna.
Email :- kandyhomes11@gmail.com
T.P :- 0777462889
0777463469
0217917623

## விற்பனைக்குண்டு

கன்ரர் வாகனங்களுக்குப் பூட்டிப் பாவிக்கக் கூடிய 10½ அடி அளவு கொண்ட அலுமினியப் பெட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 868 9500 (48182)(7.6.3)

## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் 1kg இறைச்சி 430/= மட்டும். 10kgஇற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு 1kg - 410/= மட்டும்.

விஜயகுமார் துளப்பிட்டி வீதி, ஆவைக்கோட்டை.
077 315 1723 (48163)(7.6.3)

## வீடு வாடகைக்கு

G.P.S.றோட் கல்வியங்காடு
8 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (சி.14340)(45.6.3)
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 594 9132/ 077 620 5398

## கார் விற்பனைக்கு

வங்கி முகாமையாளரின் தனிப் பாவனையிலுள்ள Alto Sports Maruthi Car No. NPKK-xxxx விற்பனைக்கு உண்டு. (சி/14012)(7.6.3)

தொடர்பு : 077 314 4578

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பணிநிலை வேண்டுகை

நெவாட் வலை உற்பத்தி தொழிற்சாலை, கியுடெக்கரித்தாஸ் நிறுவனத்தின் கீழ் இயங்கும் ஒரு கம்பனியாகும். கம்பனியானது தரம் வாய்ந்த மீன் வலை உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றது.

**1.விற்பனைமுகாமையாளர்: Sales Manager (1 வெற்றிடம்)**

- வயதெல்லை 35 முதல் 50
- க.பொ.த (உயர் தரம்) சித்தி
- Marketing Diploma அல்லது சந்தைப்படுத்தல் முகாமையாளராக 05 வருட முன்னனுபவம்
- மீன்பிடிவலைகளைச் சந்தைப்படுத்தல் மற்றும் மீன்பிடி பிரதேசங்கள் பற்றிய அறிவு உடையவர்கள் விரும்பத்தக்கது
- கணினியில் Windows O/S இல் MS Office இல் அனுபவம்.
- மும்மொழிகளிலும் தேர்ச்சியுடையவராக இருத்தல். மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனம் செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம்.

**2.கணக்காளர்: Accountant: (1 வெற்றிடம்)**

- வயதெல்லை30முதல் 45
- க. பொ.த (உயர் தரம்) சித்தி
- கம்பனிகளில் கணக்காளராக கடமையாற்றிய அனுபவம்
- HNDA அல்லது CIMA /CA கிரயக்கணக்கியலில்(Cost Accounting) முன்அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- கணினியில் Windows O/S இல் MS Office இல் அனுபவம்.
- கணக்கியலில் தொழில்நுட்ப (Accounting Package) மென்பொருள் Tally இல் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் அத்தியாவசியம்

**3.கணினிதரவுகள் பதியுனர்: Computer Date entry operators: (2வெற்றிடங்கள்)**

**தகைமைகள்**

- வயதெல்லை 18 முதல் 45
- க.பொ.த (சாதாரணதரம்) சித்தி
- கணினியில் Windows O/S இல் MS Office இல் அனுபவம்
- கணக்கியலில் தொழில்நுட்ப (Accounting Package)Tally மென்பொருளில் முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.

**ஆர்வமுடைய பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்**

சம்பளம் தகைமை, முன்அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் நேரில்பேசிதீர்மானிக்கப்படும்
யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
சுய விவரங்களுடன், தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்க வேண்டிய முடிவுதிகதி 2014.05.26

பிரதி பொதுமுகாமையாளர்
நெவாட் வலைஉற்பத்தி தொழிற்சாலை
நெவாட் பௌண்டேஷன் லிமிட்டட்
647, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.
(சி/14010)(3.6.4)

## 29 ஆண்டு கால தனித்துவமிக்க ஒரு பயிற்சி நிலையம்

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடிசீராக்குதலும்)



- முக அழகுக் கலை (Facials)
- Pedicure,Manicure (கைகள், கால்கள், விரல்கள்,நகங்கள் அழகு படுத்துதல்)
- Nail art மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம் வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.


கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 23-05-2014
வெள்ளி காலை 9.30 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-05-2014
ஞாயிறு காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் தையல் பயிற்சிகள் கிழமை நாட்களில் மட்டும் நடைபெறும்.

-இயக்குநர்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



14.05.2014
அன்று சிவபதம்
அடைந்த
ஆன்மீகத்
தலைவர்
சுவாமி
சித்ருபானந்தா
அவர்கள்
நினைவாக

இறைபணி புரியவென்று மனதினிலே ஆசை கொண்டு
ஆச்சிரமம் நீர் அமைத்து அறப்பணி புரிந்தீரே
மக்கள் சேவையே மகேசன் சேவை என்று
மக்கள் பணிபுரிய இம்மண்ணில் பிறந்தீரோ
மாற்றாற்றல் உடையோர் எங்கள் இனிய வாழ்வு இல்லம் வந்து
உலர் உணவுப் பொருள்கள் பல அள்ளிக் கொடுத்துவிட்டு
எம்மோடு உணவுண்டு மகிழ்ந்திருந்த நாள்களதை
மறந்துவிட முடியவில்லை
நற்பணி புரியவென்று வந்த நீர்
நடந்து சென்ற பாதையெல்லாம்
உம் பாதச்சுவடுகளைத் தேடிக்கொண்டிருக்கிறதே
நீர் மறுபடியும் வருவீரா—
புன்னகையின் சிகரமாய் இப்பூமியிலே வாழ்ந்தவரே
நீர் மறைந்த செய்தி கேட்டு துடிக்கிறது எம் இதயம்
புத்தம் புது வாழ்வு தேடி இறைபதம் அடைந்த உங்கள்
ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பயனாளிகள், ஊழியர்கள்,
ஆளுநர் சபை உறுப்பினர்கள், இனிய வாழ்வு இல்லம்,
தேவிபுரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. (41270)(3.6.4)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு தேவபாலசுந்தரன்



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், வியாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தேவபாலசுந்தரன் 16.05.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மற்றும் கனகம்மா தம்பதியினரின் அருமை மகனும், குடிலா (ஜேர்மனி) வின் கணவரும், சந்தாள் (ஜேர்மனி), பாஸ்காள் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2014) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீலகிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வியாவில், காரைநகர். (46159)(7.6.3) தகவல் : சிவா (தம்பி)

## திருமதி கனகம்மா தனபாலசிங்கம்



அல்லாரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் கனகம்மா 16.05.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி (ஜேர்மனி), இராஜநாயகம் (தயா - C.T.B. கோண்டாவில்), பரமேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற இராஜநாயகி, றாகினி (ஜேர்மனி), இன்பேஸ்வரி, உதயகுமாரி (பிரான்ஸ்), ரவிக்குமார் (ஜேர்மனி), றதிக்குமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜேந்திரம் (ஜேர்மனி), சிவசோதி, மகாநிதி (ஜேர்மனி), மகேந்திரம் (ஜேர்மனி), சிவனேஸ்வரன், இராசேந்திரன் (பிரான்ஸ்), கமலரூபி (ஜேர்மனி), செல்வகுமார் (கனடா) ஆகியோரின் மாமியும், கௌதமி (யா/வேம்படி மகளிர் கல்லூரி, முதலாம் வருட க.பொ.த. உயர்தர மாணவி), ஷாமினி, ஜனா, சுகனியா, சரணியா, சுகணன், சுதர்சன், சுமணன் (வெளிவாரி கற்கை நெறி மாணவன்), சுகிர்தன், சுரேஸ் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, முதலாம் வருட க.பொ.த.உயர்தர மாணவன்), சுகிர்தா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ரகுணன், ரதன், ராகுலன், சாஜிராம், சகிராம், ஈழராம், ஐங்கரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கச்சாய் கடற்கரை எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு,மீசாலை. (43161) (45.6.3) தகவல்:குடும்பத்தினர்

## சர்வதேச சுதந்திர கலை எடுத்தாளுநர்களின் வீடியோ காட்சிகள் திரையிடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 18

சர்வதேச சுதந்திர கலை எடுத்தாளுநர்களின் வீடியோக் காட்சிகள் திரையிடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகம் 199, கோயில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது.

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் திரையிடலில் இரண்டாவது நிகழ்வாக சர்வதேச சுதந்திர கலை எடுத்தாளுநர்களின் "செயற்றிட்டம் 35" (Project 35)இன் 2 ஆவது தொகுதியின் 3 ஆவது பகுதியே இன்று திரையிடப்படவுள்ளது.

இந்தப் படைப்பு, 35 சர்வதேச கலை எடுத்தாளுநர்களின் பயணக் கண்காட்சிக்கு ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்ட தெரிவில்வரும் ஒவ்வொரு கலைஞர்களின்வீடியோக்கலைக் காட்சியை அடிப் படையாகக் கொண்டது. அத்துடன் சமகாலக் கலை அனுபவத்தை உலகம் முழுவதற்குமுள்ள பார்வையாளர்களுக்கு கொடுப்பதன் முக்கியத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டது.

இந்தக் கலை எடுத்தாளுநர்கள் நியூயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்குபவர்கள். (ஒ)

## காணி தொடர்பான இலவச சட்ட ஆலோசனை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 18

வலி.கிழக்குப் பிரதேச சபையால், நீர்வேலி வடக்கு, கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.நீதிமன்ற சட்ட உதவி ஆணைக்குழு சட்ட வல்லுநரால் காணி தொடர்பான இலவச சட்ட ஆலோசனைகளும்-

குடும்ப வன்முறை, தாபரிப்பு, விவாகரத்து, பிறப்பு, விவாக, இறப்புச் சான்றிதழ் தொடர்பான ஆலோசனைகளும், சட்ட உதவியும் வழங்க ஏற்பாடாகியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி உப அலுவலக பொறுப்பதிகாரி தி.தவராஜா கேட்டுள்ளார். (ஒ)

# மரண அறிவித்தல்

## செல்வி நவநீதன் நவ்வியா



'லிங்க பவனம்' கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட நவநீதன் நவ்வியா 16.05.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நவநீதன் (பொறியியலாளர் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்-கொழும்பு)- சிவபானு தம்பதியரின் அன்புப் புதல்வியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் களுபோவில, ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (18.05.2014) ஞாயிற்றுக் கிழமை நல்லடக்கத்திற்காக காலை 9.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 11, இனிசியம் றோட், தெகிவளை.
071 763 2754, 011 273 2414
(45547)(7.6.3) தகவல் : குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# 16ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்:
26.02.1926

மறைவு:
30.04.2014

கடந்த 30.04.2014
இறைபதமடைந்த
எமது குடும்பவிளக்கு

## திருமதி மனோன்மணி நடராஜா

அவர்களின் சபிண்டீகரண நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் இன்று (18.05.2014) ஞாயிற்றுக் கிழமை அச்சுவேலி பத்தமேனி காளிகோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி. குடும்பத்தினர். (48149)(10.6.3)

## தாக்குதலில் மூவர் படுகாயம்

வவுனியா, மே 18

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் மூவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழன் மாலை 6 மணிக்கு உக்குளாங்குளம் வீதியூடாக வந்தவர்கள் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இனந்தெரியாதோரின் தாக்குதலில் சிக்கியவர்களான ப.ரவி (வயது-42), எஸ்.ஜெகநாதன்(வயது-36), எஸ்.ஜெகன் (வயது-35) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

(ஓ-400-402)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
19.02.1958

உதிர்வு
29.05.2013

## அமரர் சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

கடந்த 2013.05.29 சிவபதமடைந்த சோமசுந்தரம் விக்னேஸ்வரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு நாளை (19.05.2014) திங்கட்கிழமை மு.ப.11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.150, வியாசர் வீதி,
தோணிக்கல், வவுனியா. (43285)(12.6) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடைக்கு கணக்கியல் தெரிந்த பெண் வேலையாள் தேவை

நெல்லியடியில் இல.181
பிரதான வீதியில் இயங்கும்
LANKA TILES
காட்சியறைக்கு சந்தைப் படுத்தும் மற்றும் கணக்கியல் துறைக்கு அனுபவமுள்ள பெண்வேலையாள் உடன்தேவை. (45549) (3.6.4)
தொடர்பு: 021 226 4300, 077 857 7243

## வாடகைக்கு

### CABS SERVICE

CABS வாகன வாடகை சேவை.
நெல்லியடி
077 857 7243, 077 360 0630

### அறை வாடகைக்கு

நெல்லியடியில் குளிரூட்டப் பட்ட/குளிரூட்டப்படாத அறைகள் நாளாந்த, மாதாந்த அடிப் படையில் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படும்.
தொடர்பு :
077 857 7243, 077 360 0630

### கடைகள் வாடகைக்கு

நெல்லியடியில் 22'x33'
இரண்டு கடைகள் மேல்மாடியில் வாட கைக்குக் கொடுக்கப்படும்.
181, பிரதான வீதி, நெல்லியடி.
077 857 7243 (45548) (7.6.3)

## PIONEER HOUSE FOR PUBLISHING & DISTRIBUTION (Pvt)Ltd.

### Jaffna & Vavuniya

**Sales & Marketing Executives (Male / Female)**


We offer exciting income potential and career opportunities. We are represented throughout 21 countries in Asia.

* Age 19-30 years.
* Basic Salary + Travelling + Commission.
* Comprehensive Training Provided.
* Management Position within 09 Months
* Overseas travels for achievers
* Given Priority for after A/L's (School Leavers)
* The candidates from Jaffna, Kilinochchi and Vavuniya will be given priority.
* The candidates from Batticaloa, Trincomalee and Kalmunai will be provide Accommodation free.

No.100, 2nd Floor,
Manipay Road, Jaffna.

**Call For an Interview:**
Branch Manager - G.Anthany :
021 567 1130 / 077 356 6835

## அகவை அறுபதில் பிறந்ததின வாழ்த்து




**மாணிக்கம் சிவசுப்பிரமணியம்**
(இரசாயனவியல் ஆசிரியர், யா/சென்ஜோன்ஸ் கல்லூரி)

ஆலம் விழுதுபோல்
அறிவுச் சுடர்கள் பலவற்றை
அகிலத்தில் பரவ வைத்து
அகமகிழ்வுடன் வாழும்
அன்புச் சோதரர் அவனியில்
பல்லாண்டு வாழ பரமனடி பணிந்து
வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டு.

சிவபாதசுந்தரம் குடும்பத்தினர்
திருமதி மா.காசிப்பிள்ளை (தாயார்)
மீசாலை கிழக்கு. மீசாலை.

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)
Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222 (சி/12214)(3.8.4)

## காணி விற்பனைக்கு

நவக்கிரி, விளாத்தியடி, எல்லாளன் வாசிகசாலைக்கு அருகில்(இராசவீதி) அமைந்துள்ள 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (சி/13393) (3.6.4)
பகுதி பகுதியாகவும் விற்கப்படும்.
தொடர்பு:077 614 3278, 077 080 4473

## காணி விற்பனைக்கு

கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் 200m உள்ளே எருவன் பகுதியில் வீடு கட்டுவதற்கு உகந்த மின்சார வசதியுடன் கூடிய 9, 5 பரப்பு தென்னங்காணிகள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 784 6057 (43647) (7.6.3)

## நோய் தீர்ப்பதற்கான வர்மக்கலை

நோய் தீர்ப்பதற்கான வர்மக்கலை கற்பித்துக் கொடுக்கப் படும். தமக்கும் சுயமாக செய்து கொள்ளவும், பிறருடைய நோயைக் குண மாக்கவும் உதவக்கூடிய சித்தர்களுடைய ஓர் அரிய கலையாகும். இன்று பி.ப 4.30 மணிக்கு அறிமுக விளக்கம் தரப்படும். அதன்பின் வகுப்புக்கள் ஆரம்பமாகும். இடம்: நியாகி அறக்கொடை நிலையம்
(TCT Super Market)
No.527, Navalar Road, Nallur, Jaffna. (48158)(5.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## வீடு விற்பனைக்கு

இல. 27/23 (11/1) முதலாம் ஒழுங்கை, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தில் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்) 1¼ பரப்புக்காணியில் 4 அறை களுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 905 0213 கிங்ஸ்லி
077 356 3086 (45005)(4.6.3)

## உடனடி வேலைவாய்ப்பு

நிறுவனம் ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண், பெண் இருபாலாரும் உடன்தேவை.
வயது 18-50 வரை.
தொடர்பு : 024 561 3435 (48160) (7.6.3)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப படித்த 5' 4'' Fair, திருவோணம் கிரக பாவம் குறைந்த, 1969இல் பிறந்த, விவாகரத்தான பட்டதாரி கனடா மணமகனுக்குப் படித்த குடும்ப பாங்கான 30 - 40 வயதுக்குள் மணமகள் தேவை. சீதனம் முக்கியம் இல்லை. (48063)(12.3.6)
தொடர்பு: email: abicanada2014@gmail.com

## READY MIXED CONCRETE PLANT-JAFFNA

Tokyo Cement Company (Lanka) PLC., a prestigious public quoted company with foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufacturers and importers need suitably qualified individuals for the following position.

### ASSISTANT QUALITY CONTROLLER - JAFFNA

The ideal candidate for this position should possess BSc in physical science, chemistry as one subject or equivalent with a minimum of 3 years experience in the similar field. Being in overall supervision, you would see to all functions of quality assurance and production of the plant. Previous exposure in a similar capacity would be an added advantage. All three languages speaking ability is expected.
Age below 30 Years.
The chosen candidate would be entitled to an attractive salary, along with other perquisites.
Applications with names and addresses of 2 non-related referees should be forwarded by post or e-mail to reach the under mentioned within 7 days. (48118)(7.6.3)

General Manager - Factory
**TOKYO CEMENT COMPANY (LANKA) PLC.**
P.O.Box-02, China Bay, Trincomalee.
Fax : 026 223 3612 E-mail : tokyoravi@yahoo.com

## பொன்விழாக் காணும் தம்பதியினரை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி **தம்பிராசா** (இளைப்பாறிய ஆசிரியர்) **தவமணி**

இல்லற வாழ்வில் ஐம்பது வருடங்களை
இனிது நிறைவேற்றும் இந்நாளில்
இன்னல்கள் பலவும் கடந்து எம்மை
இனிதே சிறப்புடன் வாழ வைத்தீர்கள்

ஐந்து பிள்ளைகளைப் பெற்று நல்லறிவு ஊட்டினீர்கள்
சமூகத்தில் பெருமை பெற்று சீரும் சிறப்புடனும்
நோய் நொடியின்றி நீண்டகாலம் நலமாக வாழ
மஞ்சத்தடி அரச சோலை விநாயகர் அருணகிரிநாத
சுப்பிரமணியர் கருமாரி அம்மன்
துணையுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

**மகன்மார்:**
* சரஜென்மன்-அருட்செல்வி, கஜிதா, பகித் — குடும்பம் (லண்டன்)
* சத்தியவண்ணன்-சுதர்சினி, விபூஜா, நிரஜா — குடும்பம் (ஜேர்மனி)
* நவநீதன்-தவமங்களம், சஜீபன் — குடும்பம் (லண்டன்)

**மகள்மார்:**
* சிவகுமார்-உமா, குகப்பிரியன், தனிகன், இராகுலன் — குடும்பம் (மஞ்சத்தடி, இணுவில்)
* மகிழ்ராசா- யாழினி, விசாகன், இன்பகி, கவின் — குடும்பம் (கனடா)

மஞ்சத்தடி இணுவில். T.P:021 224 1856 (4.3.6)

## சிறுநீரகம் தேவை

O+ குருதிவகையைச் சேர்ந்த 49 வயதுள்ள வருக்கு சிறுநீரகம் தேவை.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: (48125) (3.6.4)
077 803 0388, 077 266 9417

## வீடு விற்பனைக்கு

இல.37/8 விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி-யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் கொண்ட மேல்மாடி வீடும் அதனுடன் சேர்ந்த 2 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. (41266) (7.6.3)
தொடர்பு: 077 846 4104, 077 822 2873

## மணமகன் தேவை

வடமராட்சி இந்து கௌரவ 1982 திருவோணம் பாவம் 13, செவ்வாய் இல்லை. பீ.ஏ.பட்டதாரி, அரச திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகம். உயரம் 5' 4'' அசைவ போசனம். அழகிய மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. (சி/14334) (7.6.3)
தொடர்பு :
075 536 1632/077 161 3060/077 828 7793

## டிப்பர் வாகனம் விற்பனைக்கு

LI மொடல்-டாட்டா-
ஐந்து வாகனங்கள்
உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 692 3679 (41269) (7.6.3)

## தவறிவிட்டது

சிறுப்பிட்டி தெற்கு, கலை ஒளி வீதி, நீர்வேலியைச் சேர்ந்த கருப்பு நிதின்ஸன் என்பவரது தேசிய அடையாள அட்டை (953294117V), மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் அடங்கிய பேர்ஸ் கடந்த (14.05.2014) அன்று துரையப்பா விளையாட்டரங் கில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (48152) (7.6.3)
தொடர்பு : 077 556 3082, 077 446 5950

## அற்புத வாய்ப்பு! மனம் போல் வாழ்வு!

இலவச திருமண பதிவு சேவை
**Bride Groom Match**
with traditional touch

உங்கள் வாழ்க்கை துணையை
தேர்வு செய்ய இன்றே பதிவு செய்யுங்கள்!



(C/14336)
www.bridegroommatch.com
Contact:
0755540400 | 0777233401
bgmlanka@gmail.com

# Vacancies

எமது யாழ்.நகர் மற்றும் சாவகச்சேரி கிளைகளில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Reception Duty Officer - Female
- Officer in-charge - Male
- Instructor for C, C++, Java - Male / Female
- Lecturer for AUTO CAD (Part time) - Male / Female
- Instructor for Multimedia - Male / Female

விண்ணப்பதாரிகள் சுயவிபரக்கோவையை மின்னஞ்சல் (e-mail) மூலமாக 22-05-2014ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.
HND & Degree முடித்தவர்கள் Officer Incharge பதவிக்கு விண்ணப்பிக்கலாம். (C-14008)

**ASIAN COMPUTER EDUCATION**
e-mail : asianedu@dialogsl.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகர சபை செயற்பாடுகளுக்கு பிரதேச மக்கள் பாராட்டு

கடந்த முப்பது வருட காலமாக சேதமடைந்து காணப்பட்ட வீதிகளில் சுமார் 90 வீதமான வீதிகளைக் கடந்த 3 வருடங்களில் புனரமைத்து வழங்கியமைக்காக நகர சபையின் ஏழாம் வட்டார (நுணாவில் கிழக்கு) மக்கள் நன்றி தெரிவித்ததுடன் இவ்வருடம் இந்த வட்டாரத்தில் மேற்கொள்ளவுள்ள வீதி புனரமைப்பு வேலைகளைத் தவிர்த்து வேறு வட்டாரங்களில் அத்தியாவசியம் என்று காணப்படும் வீதிகளைப் புனரமைத்துத் தரவும். அடுத்து வரும் வருடங்களில் தற்போது பாவிக்கக் கூடிய நிலையில் உள்ள வீதிகளைப் புனரமைத்துத் தாருங்கள்.

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற சாவகச்சேரி நகர சபையின் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி தேவைகளை அடையாளப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்ட மக்கள் முன்மாதிரியான கருத்துக்களைத் தெரிவித்தனர்.

நகர சபை உறுப்பினர் கா. சற்குணதேவனின் ஏற்பாட்டில் குறித்த வட்டாரத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டு இவ்வாறு தெரிவித்தனர். (வ-9)




## ஒட்டுசுட்டான் உப அலுவலகத்தை தனியான பிரதேச சபையாக்குக

### அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மே 18

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் உப சபையாக இயங்குகின்ற ஒட்டுசுட்டான் உப அலுவலகத்தை தனிப் பிரதேச சபையாக மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவு களையும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின்கீழ் உள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கி சுமார் 968 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட புதுக் குடியிருப்பு பிரதேச சபையை இரண்டு பிரதேச சபைகளாக பிரிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் குறித்த சபையை இரண்டு சபைகளாகப் பிரித்து பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திகளைப் பாரபட்சமின்றி மேற்கொள்ள வழி ஏற்படுத்த வேண்டும் என்று ஒட்டுசுட்டான் பிரதேச மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-55)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணிகள் இடம்பெற்றன. இதில் சண்டிலிப்பாய் தென்னிந்திய திருச்சபை வளாகமும், சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழக விளையாட்டு மைதானமும் துப்புரவு செய்யப்பட்டன. சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத் தலைவர் எஸ்.சனோசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர் க.உஷாந்தன், ஆனைக்கோட்டை இளைஞர் கழகத் தலைவர் , சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழக பொருளாளர் உட்பட பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.(வ-10)

RE World's No.1

இன்று - நாளை - என்றுமே

வசதியாக, இலாபமாக எவ்விதத்திலும் முன்னிலையில் இருக்கும்

பஜாஜ் RE முச்சக்கர வண்டி

இக்காலத்தின் குடும்ப வாகனமாக உள்ள பஜாஜ் முச்சக்கர வண்டி இன்றும், நாளையும் உங்களுக்கு இலாபத்தை மற்றும் வசதியை பெற்றுத்தருவதோடு, வாகனங்களுக்குள் முன்னிலையில் திகழ்வதற்கான பல அம்சங்களையும் கொண்டுள்ளது.

இன்று போல் நாளையும்....

- குறைந்த பணத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய புதிய வாகனம்
- குறைந்த செலவில் பராமரிக்க கூடிய வாகனம்
- டயர், உதிரிப்பாகங்கள், காப்புறுதி, வருடாந்த அனுமதிப்பத்திர பணம் போன்றவற்றுக்கான செலவை மிக குறைவாக கொண்டுள்ள வாகனம்
- லீசிங் முறையில் வாங்கும் போது குறைந்த தவணைக் கட்டணத்தை செலுத்தக் கூடிய வாகனம்
- மேடு, சமாந்திர மற்றும் குறுகிய பாதைகளிலும் இலகுவாக ஓட்டிச்செல்லக் கூடிய வாகனம்
- தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு மேலும் வசதியை பெற்றுத்தரும் வாகனம்
- கூடிய பெறுமதிக்கு மீள் விற்பனை செய்யக் கூடிய வாகனம்



விலை ரூ. 429,500/-

இக்காலத்தின் குடும்ப வாகனம் - பஜாஜ்

(C714328)

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்கள் விடுதியில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தென்மராட்சி, மே 18

சாவகச்சேரிஆதார மருத்துவ மனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கான விடுதியில் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் ஆண்களால் தாக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மற்றும் ஆற்றுப்படுத்தல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள பொலிஸாரும் மருத்துவத் துறையினரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

> பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மற்றும் ஆற்றுப்படுத்தல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள பொலிஸாரும் மருத்துவத் துறையினரும் பல்வேறு சிர மங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த வாரம் 21 வயதுடைய பெண்ணொருவர் கணவனால் கருக்கு மட்டையால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து விடுதியில் சேர்க்கப்பட்டார். குறித்த பெண் சட்டப்படி திருமணப் பதிவு செய்திருக்காததால் எந்தவொரு மேல்நடவடிக்கைகளையும் எடுக்க முடியாதநிலை பொலிஸாருக் கும் மருத்துவத் துறையினருக்கும் ஏற்பட்டுள்ளது. பதிவுத் திருமணம் செய்யாததால் குறித்த பெண் கணவனால் தாக்கப்பட்டாரா அல்லது வேறு ஒருவரால் தாக்கப்பட்டவாரா என்று விசாரணைகளை மேற் கொள்ள முடியாத நிலை பொலிஸாருக்கும். தாக்கிய நபரை அழைத்து ஆற்றுப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலை மருத்துவத் துறையினருக்கும் ஏற்பட்டுள்ளது. தாக்கப்பட்டு சிகிச்சை பெற வருவோரில் பலர் பதிவுத்திருமணம் செய்யாததால் உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு உள்ளாகும் பெண்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படும் நாளில் ஒரு விதமான நான்கு தினங் களின் பின்னர் வேறொரு விதமாகவும், வாக்கு மூலம் வழங்குகின்றனர். இவ்வாறான செயற்பாடு காரணமாக இரு பகுதியினரும் மேல் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

இதேவேளை - ஆண்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் பெண்கள் தொடர்பான விவரங்களைப் பெறுவதற்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர் இல்லாதது பெருங் குறையாக உள்ளது.

பிரதேச செயலகத்தில் மகளிர் விவகாரத்துக்கென உத்தியோகத்தர் கடமையாற்றுகின்ற போதிலும், பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான விவரங்களைப் அவர் பெற்று ஆவணப்படுத்துவதில்லை. பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான விவரங்களைப் பெறுவதற்கு உத்தியோகத்தர் பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்டால் அதன் மூலம் ஆண்களால் தாக்கப்படும்.பெண்களின் எண்ணிக்கை குறைவடையலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# துரிதகதியில் புனரமைக்கப்படும் மருதனார்மடம் ரயில் நிலையம்




மருதனார்மடம் ரயில் நிலையத்தின் புனர் நிர்மாணப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. ஏற்கெனவே சேதமடைந்திருந்த நிலையில் உள்ள கட்டடமே புனரமைக்கப்பட்டு வருகின்றது. (வ-17)

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 168



# சிறுவயது உடற்பருமன் ஆபத்தானது



சிறுபிள்ளைகளில் ஏற்படும் உடற்பருமனடைதலானது உலக அளவிலேயே பெரிய பிரச்சினையாக மாறி வருகின்றது. தொற்றாத நோய்களில் ஒன்றாகக் கருதப்படும் உடற்பருமனடைதல் கடந்த சில தசாப்தங்களாக பெருமளவில் அதிகரித்து வருகின்றது.

பிள்ளையின் உடற்திணிவுச் சுட்டியானது (பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டிலுள்ள வரைபுக்கமைய) 98 ஆவது சென்ரைலை (98 th centile) விட அதிகமாக உள்ள போது உடற்பருமனடைதல் நோயாகவும் 85 ஆவது சென்ரைலை (85 th centile) விட அதிகமாக உள்ள போது அதிக எடையுள்ள பிள்ளையாகவும் கருதப்படும்.

உள்ளெடுக்கப்படும் கலோரியின் அளவுக்கும், செலவிடப்படும் கலோரியின் அளவுக்கும் இடையில் உள்ள சமமின்மை காரணமாகவே உடற்பருமனடைதல் என்னும் நோய் ஏற்படுகின்றது.

பெரும்பாலான பிள்ளைகள் உடற்பருமன் அதிகரிப்பதற்கு அதிக கலோரி அடங்கிய உணவு வகைகளை உள்ளெடுப்பதும், உடற்பயிற்சி செய்யும் வீதம் குறைவடைந்துள்ளமையுமே பிரதான காரணிகள் ஆகும். அதிக கலோரி அடங்கிய உணவு வகைகளாக துரித உணவுகள் (Fast food) சோடா வகைகள், சொக்லேட், இறைச்சி வகைகள், மாப்பொருள் கூடிய சீனிச் சத்துள்ள உணவு வகைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வகையான உணவு வகைகளின் கலோரிப் பெறுமானம் எமக்கு நாளாந்தம் தேவையான கலோரிப் பெறுமானத்திலும் பல மடங்கு அதிகமாகும். மேலதிகமாக உள்ளெடுக்கப்படும் கலோரி எமது உடலில் கொழுப்பிழையமாக சேமிக்கப்பட்டு உடல்நிறை அதிகரிப்புக்குக் காரணமாக அமைகிறது.

தற்போது பிள்ளைகளின் பொழுதுபோக்குகளாகத் தொலைக் காட்சி பார்த்தல், கணினி விளையாட்டுக்களில் ஈடுபடுதல், கைத்தொலைபேசிப் பாவனை போன்றனவே காணப்படுகின்றன. இதனால் பெரும்பாலான நேரத்தை ஓரிடத்தில் இருந்தவாறே செலவழிக்கின்றனர். இதன்போது அவர்களது உடலில் இருந்து இழக்கப்படும் கலோரியின் அளவும் குறைவாகவே உள்ளது.

உடற்பருமனடைதல் நோயினால் பிள்ளைகள் உடல், உள பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். உடற் பாதிப்புகளாக நீரிழிவு நோய், உயர் குருதி அமுக்கம், இதய நோய்கள், ஈரல் மற்றும் சிறுநீரகத்தில் ஏற்படும் பாதிப்புகள், என்புக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள், கூனல் ஏற்படல், தூக்கத்தில் மூச்சுத் திணறல், பித்தப்பையில் கல் உருவாதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். உளப் பாதிப்புகளாக மன அழுத்தம், தன்னம்பிக்கை குறைவடைதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

உடற்பருமனடைதல் நோயானது தடுக்கப்படக்கூடிய ஒன்றாகும். இதற்கான நடவடிக்கைகளை வீடு, பாடசாலை, சமூகமட்டம் என்பவற்றிலிருந்தே ஆரம்பிக்கலாம். பிள்ளையின் உடற்பருமனடைதல் தாயின் கர்ப்பத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. இதனால் கர்ப்பம் தரித்த நாளில் இருந்தே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். கர்ப்ப காலத்தில் ஏற்படும் சலரோக நோயை தகுந்த கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், அநாவசியமாக தாய்ப்பால் தவிர வேறு பால்மா வகைகளைக் கொடுப்பதை தவிர்த்தல், இனிப்பான உணவுகளை அதிகளவில் கொடுப்பதைத் தவிர்த்தல் என்பவை ஆரம்பத்தில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஆகும். வீட்டில் உணவு வேளையில் மாத்திரம் உணவு உண்ணல், உணவு உண்ணாமல் இருப்பதைத் தவிர்த்தல், முக்கியமாக காலை உணவுண்ணும் போது தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்த்தல், அளவுக்கதிகமாக இனிப்பு வகைகளையோ, குளிர்பானங்களையோ வழங்குவதைத் தவிர்த்தல், குழந்தைகள் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தையும், கணினி, தொலைபேசி போன்றவற்றில் விளையாட்டுக்களில் ஈடுபடும் நேரத்தையும் மட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

பாடசாலைகளில் இனிப்பு வகைகள், குளிர்பான வகைகள் என்பன விற்கப்படுவதை தவிர்த்தல், பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம், வாழ்க்கை முறை என்பவற்றைப் பற்றி அறிவூட்டல், பிள்ளைகளை விளையாட்டுக்களில் ஆர்வமூட்டல் (முக்கியமாக பருமனான பிள்ளைகளை) என்பவற்றை மேற்கொள்ளலாம்.

சமூக மட்டத்தில் பொதுவான விளையாட்டுத் திடல்களை உருவாக்கி விளையாட்டுக்களில் ஆர்வமூட்டல், ஆரோக்கியமான உணவுகளையும் பழ வகைகளையும் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

பருமனான பிள்ளைகள் அழகாக இருக்கின்ற போதிலும் அவர்கள் வளர்ந்த பின்னும் அதிக உடற்பருமனை கொண்டவர்களாக காணப்படுவதுடன் சிறு வயதிலிருந்து உடலில் ஏற்படும் மாற்றங்கள் நீண்டகால நோய்களையும் பல்வேறான உடல் சம்பந்தமான பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன. இதனால் சிறு பிள்ளைகளில் ஏற்படும் உடற் பருமனடைதல் எனும் நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து வைத்திய ஆலோசனைப்படி நிவர்த்தி செய்தல் வேண்டும்.

*மருத்துவர் கிந்துஷா ஸ்ரீசெல்வசதீஸ்குமார்*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

# நோய்வாய்ப்பட்டவர்களின் உரிமைப் போராட்டம்

பகுதி- 2

ஒருவரின் உரிமைகளை இன்னொருவர் மதித்து நடக்கும் பொழுது ஓர் ஆரோக்கியமான மகிழ்ச்சியான சமுதாயம் உதயமாகும்.

அந்த வகையில் நோயுற்று இருக்கும் ஒருவரின் உரிமைகள் என்ன?

அது மீறப்படுவதை தடுப்பதற்கு எம்மால் என்ன செய்ய முடியும் என்று சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது. நோயாளர்களின் உரிமை மீறல்களையும் உரிமைப் போராட்டத்தையும் பல பிரிவுகளாக எடுத்து ஆராய முடியும்.

முதலாவதாக "நோயுற்றவரின் நோய் நிலை சம்பந்தமான தகவல்கள் பிறருக்குத் தெரியாதவாறு இரகசியமாகப் பேணப்படுகின்றனவா?" என்ற வினாவை முன்வைத்தால் அதற்கு இல்லை என்பதே பதிலாக வருகிறது. நோயுற்ற ஒ்ருவரின் நோய் சம்பந்தமான தகவல்கள் அனைத்தும் உணர்வுபூர்வமானவை. அது சாதாரண நோயாக இருந்தாலும், கடுமையான நோயாக இருந்தாலும் அல்லது அது அவரின் அந்தரங்கங்கள் சம்பந்தப்பட்ட நோயாக இருந்தாலும் அந்த நோய் சம்பந்தமான தகவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டியது மருத்துவக் குழுவின் கடமையாகும்.

18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் தமது சுகாதார நிலை சம்பந்தமான தகவல்களை வேறு எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் உரிமை இருக்கிறது. சம்பந்தப்பட்டவரின் அனுமதி இன்றி அவரின் நெருங்கிய உறவுகளான பெற்றோருக்கோ, கணவன் மனைவிக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ கூட அவரின் மருத்துவத் தகவல்களை தெரிவிக்கும் உரிமை மருத்துவக் குழுவுக்கு இல்லை. நோயுற்றவர் வைத்தியரிடம் தனிப்பட்ட முறையில் பேச விருப்பப்பட்டால் அதற்கான சந்தர்ப்பத்தை கேட்டு பெற்றுக் கொள்ளும் உரிமையும் அவருக்கு இருக்கிறது.

> 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் தமது சுகாதார நிலை சம்பந்தமான தகவல்களை வேறு எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் உரிமை இருக்கிறது.

வைத்தியத்துறையிலே இவை எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கப்படுகின்றன? இவற்றை கடைப்பிடிப்பதிலே எதிர்நோக்கப்படுகின்ற சிக்கல்கள் எவை? என்பது பற்றி சிந்திப்பது பயன்தரும்.

ஒருவர் நோய்வாய்ப்பட்டு விட்டால் அவ[illegible]றார். உறவின[illegible] எதிரிகள், விடுப்பு விசாரிப்போர் போன்ற பல தரப்பட்டவர்களும் கூட்டமாகவும் தனித்தனியாகவும் நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் மருத்துவக் குழுவிடம் நோயுற்றவரின் நோய் நிலை சம்பந்தமாக வினவுவது ஒரு சாதாரண நிகழ்வாக இருந்து வருகிறது. அத்துடன் நிவாரணம் பெறுவதற்கும் குடும்ப உறுப்பினர்கள் விசா பெறுவதற்கும், குடும்பத்தவரின் தொழில் இடமாற்றம் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கும் நோயுற்றவரின் இரகசியமான மருத்துவத் தகவல்களை கடிதம் மூலம் எழுதித் தருமாறு கேட்டு வைத்தியரிடம் படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

சில சமயம் பத்திரிகைகள் கூட நோயுற்றவர்களின் அந்தரங்கங்கள் அம்பலப்படுத்தப்படுவதற்கு காரணமாக அமைகின்றன. உதாரணமாக "AIDS நோயாளி வைத் தியசாலையின் அனுமதி", "பாலியல் துஷ் பிரயோகத்துக்கு உட்பட்ட சிறுமிக்கு சிகிச்சை" " சட்டவிரோத கருக் கலைப்பு" - பெண் ஆபத்தான நிலையில் அனுமதி" போன்ற செய்திகள் சர்வசாதாரணமாகி வருகிறது.

தமது நோய் நிலை அம்பலப்படுத்தப்பட்டு விடும் என்று அஞ்சி பலர் தமது நோய் நிலையின் உண்மையான வடிவத்தை மருத்துவரிடம் வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். இதனால் பல பாரதூரமான விளைவுகளும் ஏன் இறப்புகளும் கூட ஏற்பட்டு வருகின்றன.

நோயாளர்களின் உரிமைகளின் வெவ்வேறு பரிமாணங்கள் சம்பந்தமாக பேசப்படுவது இது யாரையும் குற்றம் கூறுவதற்காகவோ அல்லது புண்படுத்துவதற்காகவோ அல்ல என்பதனை புரிந்து கொள்வதுடன் இந்த நிலையை மேம்படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய முடியும் என்று சிந்திக்க வேண்டிய தேவையையும் உணர்ந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

(தொடரும்)

*மருத்துவர். சி. சிவன்சுதன்,*
*வைத்திய நிபுணர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மோடியை நோக்கி....

இந்தியத் தேர்தலில் எதிர்பார்த்ததை விடவும் கருத்துக் கணிப்புக்கள் சொன்னதை விடவும் மிகப் பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது பாரதீய ஜனதாக் கட்சி. எதிர்பார்த்ததைப் போலவே மோடி பிரதமராகி இருக்கிறார். அவர் மீதான எல்லா விமர்சனங்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு மோடி அலையில் மூழ்கி எழுந்திருக்கிறது இந்தியத் திருநாடு.

இந்த வெற்றியை பாரதீய ஜனதாக் கட்சி சும்மா அடைந்து விடவில்லை. 1980இல் ஜனதாக் கட்சியில் இருந்து பிரிந்து பா.ஜ.க. உருவாகி 34 ஆண்டுகள் கழித்துத்தான் அதனால் இந்தியாவில் தனித்து ஆட்சியைப் பிடிக்க முடிந்திருக்கிறது. 1984இல் முதன் முதலில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது அந்தக் கட்சிக்குக் கிடைத்த ஆசனங்கள் இரண்டு மட்டுமே.

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னான இந்திய நாடாளுமன்ற வரலாற்றிலே எதிர்க் கட்சி ஒன்று தனிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கும் சாதனையாக இது பார்க்கப்படுகிறது. கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்குப் பின்னர் தனியொரு கட்சியாக ஆட்சி அமைப்பதற்கு வேண்டிய பெரும்பான்மையை அது பெற்றிருக்கிறது. இந்தியாவில் இனிமேல் தனியொரு கட்சி ஆட்சியமைக்க முடியாது; கூட்டணி ஆட்சிதான் சாத்தியமானது என்று கடந்த இரு தசாப்தங்களாகக் கூறப்பட்டு வந்த ஆரூடங்களை எல்லாம் ஊதித் தள்ளி வரலாற்றையே புரட்டிப் போட்டிருக்கிறது இந்த வெற்றி.

இந்தியர்கள் மட்டுமல்ல ஈழத் தமிழர்களும் மோடியின் வெற்றியைக் கொண்டாடும் மனநிலையில்தான் இருக்கிறார்கள். காங்கிரஸ் அரசு தமக்குக் கொடுமையிழைத்தது. தொப்புள் கொடி உறவு என்று நம்பியிருந்தவர்களைக் காங்கிரஸ் அரசு கழுத்தறுத்தது. ஆயிரம் ஆயிரம் பேரின் சாவுகளுக்குக் காரணமாக இருந்தது என்ற கோபம், அறச் சீற்றம், பச்சாதாபம் எல்லாம் சேர்ந்து காங்கிரஸின் தோல்வியை ஈழத் தமிழர்கள் எதிர்பார்த்தார்கள்.

2009ஆம் ஆண்டே பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்றுதான் தமிழர்கள் விரும்பினார்கள். ஆனால் அது நடக்காமல் போனபோதே காங்கிரஸ் மீதிருந்த வெறுப்பு இரட்டிப்பானது. எனவே இப்போது இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொண்டாடும் மனநிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். வெறுமனே பழி தீர்த்தல் உளவியல் என்று இதனைப் புறந்தள்ளிவிட முடியாது. அதையும் தாண்டிய இயலாமையின் வெளிப்பாடு இது. எங்காவது ஓர் ஆதரவுக் கரம், நேசக் கரம் கிடைத்துவிடாதா என்ற நப்பாசையில் உழன்றவர்களுக்கு மோடியின் வெற்றி இறைவனின் கரமாகத் தெரிவதில் வியப்பில்லை.

ஆனால், நம்பிக் கெட்ட வரலாறு தமிழர்களிடம் நிறையவே உண்டு. அதேபோல் நம்பாமல் கெட்ட வரலாறுகளும் சில உண்டு. எனவே மோடியின் வருகையுடன் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வந்து விடும் என்கிற எதிர்பார்ப்பு யதார்த்தமற்றது. மந்திரத்தால் மாங்காய் விழ வைக்க முடியுமானால் மோடியாலும் ஒரேயிரவில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமாக இருக்கலாம். இரண்டுமே நடைபெறப் போவதில்லை என்பது திண்ணம்.

இருந்தாலும், மோடியை நோக்கிய அரசியல் என்ன என்பது தமிழர்களின் தலைமையின் முன்னால் உள்ள கேள்வி. சிங்களவர்களின் முன்னாலும்கூட அதே கேள்வி இருக்கிறது. எனவேதான் மோடியின் வெற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மோடிக்கு அவசர அவசரமாக வாழ்த்துச் சொல்லியிருக்கிறார்.

இந்தியாவுக்கு வெளியே இருக்கும் தமிழர்களின் நலனில் தான் அக்கறை கொள்வார் என்று தேர்தலுக்கு முன்னர் சென்னையில் மோடி கூறியிருந்தார். அதை அவர் காப்பாற்று வார் என்ற நம்பிக்கையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்து அவருடனான தமது உறவுக்குப் பிள்ளையார் சுழி போட்டுள்ளார்கள்.

மோடியின் மீதான தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் அதிகம். ஒருவேளை அவர் மீது இந்தியார்களே கொண்டிருக்காத எதிர்பார்ப்பைக்கூட ஈழத் தமிழர்கள் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். அவற்றை மோடியிடம் எடுத்துச் சென்று அவ்ற்றில் சிலவற்றையாவது பூர்த்தி செய்யும் சமார்த்தியமும் ராஜதந்திரமும் ஈழத் தமிழ்த் தலைமைகளுக்கு வேண்டும்.

இந்தியாவுடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளத்தக்க மற்றொரு சந்தர்ப்பத்தை வரலாறு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. கடந்த காலங்களில் நடந்தவற்றை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு எதிர்காலத்தை நோக்கி முன்னேற வேண்டிய தேவை ஈழத் தமிழர்களுக்கு இருக்கிறது. ஈழத் தமிழர்கள் விடயத்தில் மோடிக்கும் அந்தக் கடமை இருக்கிறது.



*இந்தியாவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த ஒரு வரலாற்றுத் திருப்பம் கொண்ட ஆட்சி மாற்றம் தொடர்பாகத் தினமணி நாளிதழ் நேற்று வரைந்த ஆசிரியர் தலையங்கம் இது.*

# இந்திய வாக்காளர்கள் புத்திசாலிகள்

16 ஆவது மக்களவைக்கான தேர்தல் முடிவுகள், ஒரு நிலையான ஆட்சிக்கு வழி கோலுமானால், கடந்த கால்நூற்றாண்டு கால அரசியல் நிலையின்மைக்கு அது முற்றுப்புள்ளி வைக்க உதவும். 'இந்திய வாக்காளர்கள் புத்திசாலிகள்' என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். தேர்தல் முடிவுகள் நமது எதிர்பார்ப்பை நிறைவேற்றி இருக்கிறது.

1984 க்குப் பிறகு, முப்பதாண்டு இடைவெளிக்குப் பின்னால், தனிப் பெரும்பான்மையுடன் ஒரு கட்சி ஆட்சி அமைக்கிறது என்பதே மிகப் பெரிய ஆறுதல். 16 ஆவது மக்களவை மேலும் பல புதிய சரித்திரங்களைப் படைக்க இருக்கிறது. சுதந்திரத்துக்குப் பிறகு பிறந்த தலைமுறையின் தலைமையில் அமைய இருக்கும் முதல் மத்திய அரசு இதுவாகத்தான் இருக்கும். இதற்கு முன்னால் பதவி வகித்த பிரதமர்கள் அனைவருமே அடிமை இந்தியாவில் பிரிவினைக்கு முன்பு பிறந்தவர்கள். 1950 இல் பிறந்த நரேந்திர மோடி பிரதமராவதன் மூலம், தலைமுறை மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.

அதேபோல, தனிப் பெரும்பான்மையுடன் காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சி ஆட்சி அமைக்கப் போவதும்கூட ஒருவிதத்தில் சரித்திர நிகழ்வுதான். 1977 இல் ஜனதா கட்சி ஆட்சி அமைத்தது என்றாலும், அது கட்சிகளின் கூட்டணியாகக் காட்சி அளித்ததே தவிர, ஒரு கட்சியாக இயங்கவில்லை. கேரள மாநிலத்தையும், ஒரு சில வடகிழக்கு மாநிலங்களையும் தவிர, இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பா.ஜ.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருப்பது என்பதும் முதல் முறை நிகழ்வு.

இந்தியாவின் பல பகுதிகளில் மோடி அலை அடித்தது என்றால், கேரளம், தமிழகம், ஒடிஸா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் நரேந்திர மோடியின் தாக்கம் காணப்பட்டது என்பதுதான் உண்மை. 50 நிமிடமே பிரசாரம் செய்த வதோதராவில், இந்தியத் தேர்தல் வரலாற்றில் சரித்திரம் படைக்கும் 5,70,000க்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்துடன் வெற்றி. தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசக்கூடாது என்று தடை விதிக்கப்பட்ட வாரணாசியில் மௌனப் புரட்சியாக வெற்றி. நரேந்திர மோடி மீது மக்கள் வைத்திருக்கும் எதிர் பார்ப்பையும், நம்பிக் கையையும் இவை வெளிச்சம் போடுகின்றன.

இந்தியாவின் பல பகுதிகளில் மோடி அலை அடித்தது என்றால், கேரளம், தமிழகம், ஒடிஸா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் நரேந்திர மோடியின் தாக்கம் காணப்பட்டது என்பதுதான் உண்மை. 50 நிமிடமே பிரசாரம் செய்த வதோதராவில், இந்தியத் தேர்தல் வரலாற்றில் சரித்திரம் படைக்கும் 5,70,000க்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்துடன் வெற்றி. தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசக்கூடாது என்று தடை விதிக்கப்பட்ட வாரணாசியில் மௌனப் புரட்சியாக வெற்றி. நரேந்திர மோடி மீது மக்கள் வைத்திருக்கும் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் இவை வெளிச்சம் போடுகின்றன.

நரேந்திர மோடியைப் பிரதமர் வேட்பாளராக அறிவித்தபோது, என்னென்ன விமர்சனங்கள், எத்தனை எத்தனை எதிர்ப்புகள். அவை அனைத்தையும் பொய்யாக்கி, இந்தியா முழுவதும் புயல் போலச் சுற்றி அலைந்து, பா.ஜ.கவுக்கு சாதகமான பேரலையை உருவாக்கி மிகப்பெரிய வெற்றியும் பெற்றிருக்கும் நரேந்திர மோடியைப் பாராட்டியே தீரவேண்டும். சுதந்திர இந்திய சரித்திரத்தில் முதல் முறையாக ஒரு மாநில முதல்வரால் தேசியத் தலைவராக, ஒட்டுமொத்த இந்தியாவின் ஏகோபித்த ஆதரவைப் பெற முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி இருக்கிறார் மோடி.

2002 குஜராத் கலவரத்தை நரேந்திர மோடியுடன் இணைத்து, அவர்தான் கலவரத்தைத் தூண்டிவிட்டார் என்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியவர்கள் முகத்தில் கரி பூசியிருக்கிறார்கள் வாக்காளர்கள். உயர்நீதிமன்றம் நியமித்த சிறப்புப் புலனாய்வுக் குழு உள்ளிட்ட அனைத்து விசாரணைகளும் குஜராத் கலவரத்தில் நரேந்திர மோடிக்குத் தொடர்பில்லை என்று உறுதிப்படுத்தியும்கூட, அவரை 'மரண வியாபாரி' என்று வர்ணித்து, சிறுபான்மை இனத்தவர் மத்தியில் பீதியை எழுப்பிய போலி மதச்சார்பின்மைவாதிகளின் பரப்புரையை மக்கள் தீர்ப்பு உடைத் தெறிந்திருக்கிறது.

நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பில்லை என்பது போன்ற தவறான தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது. இந்திய மக்கள்தொகையில் ஏறத்தாழ 17 வீத மக்கள் இஸ்லாமியர்கள். அவர்கள் நம்பிக்கையால் இஸ்லாம் மதத்தினரே தவிர, பிறப்பாலும் உணர்வாலும் இந்தியாவின் மண்ணின் மைந்தர்கள் என்பதை நன்றாகவே உணர்ந்தவர் நரேந்திர மோடி. அவர் பிரதமரானால் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பில்லை என்பது அரசியல் ஆதாயம் தேட சிலர் எழுப்பும் அநாவசிய பீதியல்லாமல் வேறொன்றுமில்லை.

அரசமைப்புச் சட்டம்தான் எனது புனித நூல் என்று நரேந்திர மோடி நமக்களித்த சிறப்புப் பேட்டியில் கூறியதை உறுதிப்படுத்தும் விதமாகத் தனது வெற்றிக்குப் பிறகு ஆற்றியிருக்கும் உரையிலும், அனைத்து இந்தியர்களுக்கும் பொதுவான பிரதமராகத் தான் செயற்படப் போவதாகக் கூறியிருப்பது போலி மதச்சார்பின்மை வாதிகளின் பொய்ப் பரப்புரைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

நரேந்திர மோடியின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் வலிமையான, ஊழலில்லாத இந்தியா உருவாகட்டும். இளைஞர்களின் இந்தியா வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போடட்டும். ஒட்டுமொத்த இந்தியாவின் எதிர்பார்ப்பாக தான் இருப்பதை உணர்ந்து, சப்கா சாத், சப்கா விகாஸ்!'(அனைவருடன் இணைந்து, அனைவரின் வளர்ச்சிக்காக!) என்கிற கோஷத்துடன் ஆட்சியில் அமர இருக்கும் நரேந்திர மோடிக்கு நமது வாழ்த்துகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜய வருட
# புத்தாண்டு பலன்கள்
## குரு, ராகு, கேது, சனிப்பெயர்ச்சி

**இந்தத் தமிழ்ப் புத்தாண்டில் மிக முக்கிய கிரகங்கள் பெயர்ச்சியானவது இந்த ஆண்டின் சிறப்பு அம்சமாகும். குரு பெயர்ச்சி, ராகு, கேது பெயர்ச்சி, சனி பெயர்ச்சி என முக்கிய கிரகங்கள் இடம்மாறுகின்றன. 12.06.2014 வியாழக்கிழமை மிதுன ராசியிலிருந்து தனது உச்சவீடான கடகத்துக்கு குரு பகவான் பெயர்ச்சியாகின்றார். 20.06.2014 வெள்ளிக்கிழமை ராகுபகவான் துலாத்தில் இருந்த கன்னிக் கும், கேது பகவான் மேடத்திலிருந்து மீனராசிக்கும் பெயர்ச்சியாகின்றார்கள். 18.12.2014 வியாழக்கிழமை சனி பகவான் துலாம் இராசியிலிருந்துவிருச்சிக ராசிக்கு பெயர்ச்சியாகின்றார்.**

**நல்லதும் கெட்டதுமான கிரக நிலைக்கும் தமது தனிப்பட்ட ஜாதகத்துக்கும் ஏற்ப பல நிகழ்வுகள் நடைபெற காத்திருக்கின்றன. எனவே வாசகர்கள் தமது ராசிப்படியும் ஜாதகத்தின் படியும் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை அறிந்து எதிர்கால வாழ்க்கையை ஜோதிட ரீதியாகத் திட்டமிட்டுக் கொள்ளலாம்.**

*சோதிட சித்தர் பிரம்மஸ்ரீ கலாநிதி
எஸ்.ராஜராஜகுருக்கள்
(யுனிலங்கா பப்பிளிக்கேஷன் வெளியீடு)*

## தனுசு
மூலம், பூராடம்,
உத்தராடம் 1 ஆம் பாதம்



தூய்மையும் நேர்மையும் மிக்கவர்கள். பல பேர் மத்தியிலும் தனித்துவமாககாணப்படவிருப்பமுடையவர்கள். பிறருக்கு உதவி செய்து மகிழக்கூடியவர்கள். மனதில் பட்டதை தைரியமாகப் பேசவல்லவர்கள். பிறர் விடயத்தில் தலையிட எப்போதும் விரும்பாதவர்கள். பேச்சாற்றல் மிக்கவர்கள். மிடுக்கான தோற்றமுடியவர்கள். எதையும் உடனே சிறப்பாய் செய்து முடிக்க வேண்டும் என எண்ணம் கொண்ட தனுசு இராசி நேயர்களே!

புதுவருடம் முதல் 12.06.2014 வரை 7 ஆம் வீட்டில் குரு இருப்பதால் நன்மைகள் நடைபெறும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். தடைப்பட்ட திருமண நிகழ்வுகள் சரியாகும். சுப நிகழ்ச்சிகள் இனிதாய் நடந்தேறும். பிள்ளைகளால் மகிழ்வுண்டாகும். வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடும். உங்கள் திறமைக்கு உரிய இடம் கிடைக்கும். உறவுகளின் பாராட்டைப் பெறுவீர்கள். புதிய உற்சாகமும் தெம்பும் அடைவீர்கள். விருந்தினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். வீடு, வாகனத்தைத் திருத்தி புதிது படுத்திக்கொள்ளலாம். காத்திருந்த காதல் கைகூடும். கலைப்படைப்புக்கு ஆதரவு கிடைக்கும். தூர தேசத்தில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும்.

13.06.2014 பின் இராசிக்கு 8 இல் குரு வருவதால் (அஷ்டம குரு) தேவையற்ற விமர்சனங்கள் உங்களைப் பற்றி வெளி வரும். பிறர் உங்களைப் பற்றி அவதூறுகளை அள்ளி விடுவார்கள். கவலைப்படாதீர்கள். அவமானமும் கெட்ட பெயர்களும் வந்து கொண்டே இருக்கும். செலவு கட்டுக்கடங்காமல் போகும். சேமிப்பு கரையும். உறவுகளுடனும், பிறர் மத்தியிலும் தேவையற்ற விவாதங்களை முற்றாகத் தவிர்த்து விடுங்கள். ஆரோக்கியத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள். வியாபாரத்தை ஜாக்கிரதையாக செய்யுங்கள். நம்பிக்கைத் துரோகங்கள் நடைபெற இருப்பதால் யாரையும் பெரிதாய் நம்பாதீர்கள். திருட்டுப் போக சந்தர்ப்பம் இருப்பதால் நகை, பணம் என்பன பத்திரம். எதிலும் கையெழுத்திடும் முன் பல முறை சரிபார்த்துக் கொள்ளுங்கள். பிணை, பொறுப்புக்கு துணை போகாதீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வர வாய்ப்புண்டு. காலம் கனியும் வரை கடமை செய்து காத்திருங்கள்.

20.06.2014 வரை 5 ஆம் வீட்டில் கேது இருப்பதால் பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வர வாய்ப்புண்டு. பிள்ளைகளின் நடவடிக்கைகள் உங்களுக்கு கவலைதர வாய்ப்புண்டு. கர்ப்பிணிப் பெண்கள் கவனமாய் இருக்கவும். பூர்வீக சொத்தில் ஏதாவது சிக்கல் வரும். வயிற்றிலும் சில நோய்கள் வந்து போகும். நேரம் தவறாமல் உணவெடுங்கள்.

ராகு இலாபஸ்தானத்தில் இருந்து அதிர்ஷ்டத்தைக் கொடுப்பார். வெளிநாட்டில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். பழைய நண்பர்களைச் சந்திக்கலாம். இனிமையான நினைவுகளை அசைபோடும் சந்தர்ப்பம் கிடைக்கும். தூரதேச பயணம் சிலருக்கு கைகூடும்.

21.06.2014 பின் வருட முடிவுவரை கேது 4 ஆம் வீட்டிலும் ராகு 10 ஆம் வீட்டிலும் இருப்பதால் வீடு, வாகனத்தில் கவனம் தேவை. நேர் முறையான எண்ணங்கள் தோன்றி மறையும். பிற இன, மத, மொழி ஜாதிக்காரர்களால் நன்மைகள் உண்டாகும்.

வருட ஆரம்பம் முதல் 18.12.2014 வரை சனி இலாபஸ்தானத்தில் இருப்பது நன்மையே. வசதிகள், வருமானங்கள், வாய்ப்புகள் அதிகரிக்கலாம். ஜுன் மாதத்துக்கு முன் குருபலம் உள்ள காலத்தில் சிறிய முதலீட்டில் புதிய தொழில் தொடங்கலாம். இலாபம் கிடைக்கும். புது முயற்சிகள் வெற்றியைத் தரும். அதிர்ஷ்டங்கள் கைகூடும். பயணம் சரிவரும். நல்ல பல செய்திகள் வரும். மனதில் உற்சாகம் இருக்கும். தெய்வ வழிபாடு செய்ய உகந்த காலம். வீடு, நிலம் வாங்கும் சந்தர்ப்பம் வர வாய்ப்புண்டு.

18.12.2014 இற்கு பின் சனீஸ்வரன் 12 ஆம் வீட்டுக்கு வருவதால் ஏழரைச் சனியின் ஆரம்பம். விரயச் சனி எனவே அதிக செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. வீண் அலைச்சல்கள் காட்டும். இலாபம் குறையும். குடும்ப உறுப்பினர்களிடையே சண்டை சச்சரவுகள் தோன்றி மறையும். யாரையும் எதற்கும் நம்பவேண்டாம். கடன்சுமை அதிகரிக்க வாய்ப்புண்டு. மனதில் பயம் தோன்றும். உற்சாகம் குறையும். உடல் பலம் குன்றிப் போகும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுங்கள். தீய பழக்கங்களை கைவிடுங்கள். பிணை, பொறுப்பு, கையெழுத்து எல்லாம் பலமுறை யோசித்து முடிவெடுங்கள். எதற்கும் அவசரப்படாதீர்கள். எக்காரணம் கொண்டும் தன்னம்பிக்கையை இழந்து விடாதீர்கள். ஒவ்வோர் காரியத்தையும் காலம் சாதகமாய் இல்லை என உணர்ந்து சிந்தித்து செயற்படுங்கள். உங்கள் பலம் பலவீனத்தை சரியாய் உணர்ந்து கொள்ளுங்கள்.

**வியாபாரிகளுக்கு:**
புதிய முயற்சிகள் வெற்றி. வியாபாரத்தை விரிவுபடுத்தி இலாபம் பார்க்கலாம். புது ஏஜென்சி எடுக்கலாம். வெளிநாட்டு தொடர்பால் அதிக இலாபம் கிடைக்கும். புதிய பங்குதாரர்களை இணைக்கலாம். ஜுன் மாதத்தின் பின் அடக்கி வாசியுங்கள். இலாபம் குறையும். கடன் விடயத்தில் கவனமாய் இருக்கவும்.

**உத்தியோகத்தர்களுக்கு:**
ஜுன் வரை எல்லாம் சுமுகமாய் போகும். பின்னர் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். பதவி உயர்வு, சம்பள உயர்வு தள்ளிப்போகும். சக ஊழியர்களால் சில சிக்கல்கள் வந்து போகும். உழைப்புக்கேற்ற ஊதியம் தாமதமாய் கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:**
கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். பரீட்சையில் சித்தி கிட்டும். போட்டியில் வெற்றியுண்டு. ஜுன் மாதத்தின் பின் ஆசிரியரின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரலாம். கல்வியில் ஆர்வம் குறையும். மனதில் வெறுப்பு, விரக்தியும் உருவாகலாம். எனினும் கடினமான பயிற்சி செய்து வெற்றி பெற முயலுங்கள்.

**பரிகாரம்:**
குடும்பத்துடன் ஒருமுறை குல தெய்வ கோயிலுக்குச் சென்று வாருங்கள். பிரதோஷ வழிபாடுகளைச் செய்யுங்கள். சனி வழிபாடு செய்யுங்கள். குருவழிபாடு செய்யுங்கள். சிவனுக்கு அபிஷேகம் செய்யுங்கள்.

**தானதர்மம்:**
மங்கல பொருள்களை சுமங்கலிகளுக்கு கொடுங்கள். ஏழைகளின் திருமணத்துக்கு உதவிடுங்கள். வறியவர்களுக்கு உணவிடுங்கள். கோ பூஜைகள் செய்து வாருங்கள். சிவனடியார்களுக்கு வஸ்திரம் (உடை) வாங்கிக் கொடுங்கள். மொத்தத்தில் இவ்வருடம் 45 சதவீதம் நன்மைகளைப் பெறுவீர்கள்.

## மகரம்
உத்தராடம் 2,3, 4
திருவோணம், அவிட்டம்
1,2 ஆம் பாதங்கள்



எதையும் துணிவாய் எதிர் கொள்ளும் தைரியம் மிக்கவர்கள். தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடும் சுபாவம் இருக்கும். அடிதடிக்கு அஞ்சாதவர்கள். அதிகார எண்ணமும் தோரணையும் சிறிது காணப்படும். பிறர் செய்யத் தயங்கும் காரியத்தை இவர்கள் தைரியமாய் செய்வார்கள். நிதானமுடையவர்கள். காரியம் கைகூடும்வரை சளைக்காமல் முயற்சிக்கக் கூடியவர்கள். சளைக்காமல் உழைக்கக் கூடிய மகர இராசிக்காரர்களே!

புத்தாண்டு முதல் 12.06.2014 வரை குருபகவான் உங்கள் இராசிக்கு 6 ஆம் வீட்டில் இருப்பதால், தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும். கௌரவம், பெயர் கெட்டுப்போகும். கவனமாய் இருங்கள். கொடுக்கல் வாங்கல்களில் அதிக கவனம் தேவை. கடன் சுமை ஏற்பட வாய்ப்புண்டு. கொடுத்த கடனை வசூல் செய்ய சிரமப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் கவனமாய் இருங்கள். உடம்பை கவனியுங்கள். மறைமுக எதிரிகளால் அவ்வப்போது தொல்லைகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆயினும் 13.06.2014 பின் குரு உங்கள் இராசிக்கும் 7 ஆம் வீட்டில் இருப்பதால் நன்மைகள் பல நடக்கும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை மேலோங்கும். கருத்து வேறுபாடுகள் மறைந்தோடி விடும். குரு உங்கள் இராசியை பார்ப்பதால் உங்களுக்குள் மறைந்து இருந்த முழுத்திறமையும் வெள்ளம் போல் வெளிவரும். உங்கள் திறமைக்கும் உழைப்புக்கும் உரிய [illegible] கிடைக்கும். தடைப்பட்ட சுப நிகழ்வுகள் இனிதே கைகூடும். திருமணத்தை, குழந்தை பாக்கியத்தை எதிர்பார்ப்போருக்கு அவ்விடயங்கள் மகிழ்வாய் சித்திக்கும்.

தூரதேச பயணங்கள் கைகூடும். வெளிநாட்டில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். வரவேண்டிய பணம் வசூலாகும். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. உங்கள் எல்லா முயற்சிகளுக்கும் கைமேல் பயன் உண்டு. உங்களை விமர்சித்த உறவுகள் உங்களைப் பாராட்டுவார்கள். பிரிந்த குடும்பங்கள் மகிழ்வாய் இணையும். நோய்நொடிகள் மறைந்து உடல் ஆரோக்கியம் அடையும். விலையுயர்ந்த பொருள்களோ, நகை ஆபரணங்களோ வாங்கும் சூழ்நிலை உருவாகும். இளைய சகோதர வழியில் நன்மை உண்டாகும். வீடு, வாகனம் வாங்கும் யோகமுண்டாகும். சுபசெலவுகள் காட்டும். குதூகலமாய் இருப்பீர்கள்.

20.06.2014 வரை உங்கள் இராசிக்கு 4 ஆம் வீட்டில் கேதுவும் 10 ஆம் வீட்டில் இராகுவும் இருப்பது தீயவர்களால் உங்கள் பெயர் தவறாகப் பயன்படுத்த வாய்ப்புள்ளது. உங்களைப் பற்றி தேவையற்ற விமர்சனங்கள் வந்துபோகும். வாகனம் ஓட்டுவது கவனம். தனியே வாகனத்தில் தூரதேச பயணத்தைத் தவிர்க்கவும். வீடு வாகனம் பராமரிப்பால் சில செலவுகள் வர வாய்ப்புண்டாகும். இதனால் மனதில் கவலை தோன்றும். கல்வியில் ஆர்வம் குறையும். தாயாரின் உடல் நிலை பாதிப்பும், செலவுகளும் கவலை தரும். மனதில் உற்சாகம் குறையும். காரியத்தடை, அலைச்சல், செலவுகள் மனதில் விரக்தியை தரும். தொழில், வியாபாரத்தில் நிம்மதி பறிபோகும்.

21.06.2014 இன் பின் 3 இல் கேது வருவது புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். எதிரிகளை வெல்லும் பலம் உருவாகும். திடீர் தனலாபம் காட்டும். கோர்ட், கேஸ், பிரச்சினைகளில் தீர்ப்பு சாதகமாய் வரும். இளைய சகோதர வழியில் ஆதரவு உண்டு.

ராகு 9 இல் இருப்பது அதிக செலவு, காரிய நாசம் காட்டும். சேமிப்பு கரையும் தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். பூர்வீக சொத்து சிக்கல் இழுபடும். பிற இன, மொழி, மதத்தவர்களால் ஆதாயமுண்டு. வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும்.

வருட ஆரம்பம் முதல் 18.12.2014 வரை சனிபகவான் உங்கள் இராசிக்கு 10ஆம்வீட்டில் இருப்பதால் இராசிநாதன் ஜீவனஸ்தானத்தில் இருப்பதால், ஓரளவு நன்மையே. உத்தியோகத்தில் சாதிக்க முடியாத பெரிய காரியங்களை எல்லாம் செய்வீர்கள். கடின உழைப்பை வெளிப்படுத்துவீர்கள். ஆயினும், அடிக்கடி இடமாற்றம் காட்டும். உழைப்புக்கேற்ற ஊதியம் இருக்காது. வேலைப்பளு சற்று அதிகமாகவே இருக்கும். எனினும் சமாளித்து விடுவீர்கள். பதவி உயர்வும், சம்பள உயர்வையும் உச்சம் பெற்ற சனி கொடுக்கத் தவறமாட்டார். ஆயினும் 18.12.2014 பின் சனி 11 ஆம் வீட்டுக்கு மாறுவது அதிர்ஷ்டம்தான். அதிர்ஷ்டங்கள் கைகூடும். வெளிநாட்டு யோகம் உண்டாகும். அயல்நாடுகள் சென்றுவருவீர்கள். நல்ல செய்தி வெளிநாட்டில் இருந்து கிடைக்கும். முயற்சிகள் கைகூடும். பெரிய பதவிகள் தேடிவரும். அரசால் ஆதாயமுண்டு. மூத்த சகோதரர்களால் நன்மை உண்டு. வேலை தேடியோருக்கு நல்ல வேலை கிடைக்கும். பதவி, சம்பள உயர்வு உண்டாகும். வீடு, வாகனம், தங்கம், விலை உயர்ந்த பொருள்கள் வாங்கும் யோகமுண்டாகும். சுப நிகழ்வுகள் நிகழ வாய்ப்புண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். முன்னர் இருந்துவந்த சங்கடமும் துன்பங்களும் விலகி நன்மைகள் நடந்தேறும். வியாபாரம் விருத்தி அடையும். பயம் நீங்கி மனதில் தெளிவு பிறக்கும்.

**வியாபாரிகளுக்கு:**
புதிய முயற்சிகள் வெற்றி வியாபாரத்தை விரிவுபடுத்தி இலாபம் பார்க்கலாம். புது ஏஜென்சி எடுக்கலாம். வெளிநாட்டு தொடர்பால் அதிக இலாபம் கிட்டும். புதிய பங்குதாரர்களை இணைக்கலாம். ஜுன் மாதத்தின் பின் அடக்கி வாசியுங்கள். இலாபம்குறையும் கடன் விடயத்தில் கவனமாய் இருக்கவும்.

**உத்தியோகத்தர்களுக்கு:**
ஜுன்வரை எல்லாம் சுமுகமாய் போகும். பின்னர் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். பதவி உயர்வு, சம்பள உயர்வு தள்ளிப் போகும். சக ஊழியர்களால் சில சிக்கல் கள் வந்து போகும். உழைப்புக்கேற்ற ஊதியம் தாமதமாய் கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:**
கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். பரீட்சையில் சித்தி கிட்டும். போட்டியில் வெற்றியுண்டு. ஜுன் மாதத்தின் பின், ஆசிரியரின் கோபத்துக்கு ஆளாக வேண்டி வரலாம். கல்வியில் ஆர்வம்குறையும். மனதில் வெறுப்பு விரக்தியும் உருவாகலாம். எனினும் கடினமான பயிற்சி செய்து வெற்றி பெற முயலுங்கள்.

**பரிகாரம்:**
வருட ஆரம்பத்தில் குரு வழிபாடு செய்வது நன்மை. தினசரி ஆஞ்சநேயருக்கு நெய்தீபம் ஏற்றவும். பிரதோஷ விரதம் நன்மை தரும். கிருஷ்ணரை வழிபட நன்மைகள் பெருகும். துர்க்கைக்கு தேசிக்காய் தீபம் ஏற்றவும்.

**தானதர்மம்:**
விதவைப் பெண்களுக்கு உதவிடவும். மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கவும். தாயைப் போற்றவும். அவர் பாதம் தொட்டு வணங்கி வரவும். மொத்தத்தில் இவ்வருடம் 60 சதவீதம் நன்மைகளைப் பெறுவீர்கள்.

(14ஆம் பக்கத்திலும் புத்தாண்டு பலன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜய வருட புத்தாண்டு பலன்கள்

## குரு, ராகு, கேது, சனிப்பெயர்ச்சி

## கும்பம் அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 பாதங்கள்



அனுபவ அறிவும் திறமையும் மிக்கவர்கள். எத்தகைய துன்பங்களையும் அசையாமல் தாங்கும் இதயம்கொண்டவர்கள். பிறரின் கஷ்டத்திலும் உதவக் கூடியவர்கள். சற்றே பிடிவாதம் இருக்கும். பேச்சு சாமர்த்தியத்தினால். பிறர்மீது தம் கருத்தை திணிக்கக் கூடியவர்கள். பிறர் கருத்தைப் பற்றி அதிகம் கவலைப்படமாட்டார்கள். பல்வேறு காரியங்களை இரகசியமாகவும், சாமர்த்தியமாகவும் செய்யக்கூடியவர்கள். நினைத்ததை நினைத்த வகையில் சாதிக்க துடிக்கும் கும்பராசி நேயர்களே!

இந்த தமிழ் புத்தாண்டு முதல் 12.06.2014 வரை குருபகவான் உங்கள் இராசிக்கு 5 ஆம் வீட்டில் இருப்பதால் பிள்ளைகளால் நன்மை அடைவீர்கள். பிள்ளைகளின் திருமணம், கல்வி போன்ற விடயத்தில் முன்னேற்றம் காட்டும். பெரியவர்களின் சினேகிதம் கிடைக்கும். குழந்தைச் செல்வத்தை எதிர்பார்த்தோருக்கு அச்செல்வம் கிட்டும். குடும்பத்துடன் கோயில்கள் சென்று வரலாம். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். இனசன ஆதரவு கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாகும். ஆயினும் 13.06.2014 இற்கு பின் 6 ஆம் வீட்டுக்கு செல்வதால், செய்காரியத்தில் தடைகள் ஏற்படும். முயற்சிகள் முடங்கிக் கிடக்கும். சிறு செயல்கள் செய்யவே பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டியதாக இருக்கும்.

ஆரோக்கியம் பாதிப்படையும். தேவையற்ற விமர்சனங்களைப் புறக்கணியுங்கள். மறைமுக எதிரிகளால் வருத்தமும், கவலையும் அடைவீர்கள். உணர்ச்சி வசப்பட்டு அவசரப்பட்டு முடிவுகளை எடுக்காதீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கை உங்களுக்கு கவலை தரும். கடன் தொல்லை கவலை தரும். தேவையற்ற செலவுகளைத் தவிர்க்க முடியாமல் சங்கடப்படுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்க தாமதமாகும். முக்கிய விடயங்களில் தாமதிப்பதே நன்மை தரும். எதையும் பலமுறை யோசித்தே செய்யுங்கள். முக்கிய விடயங்களை, பொறுப்புக்களை யாரிடமும் ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நன்மைதரும். யாரையும் வீணாய் பகைத்துக் கொள்ளாதீர்கள். கடன் வாங்கி வீடு வாங்கலாம். தன்னம்பிக்கையோடு தளராது செயற்படுங்கள். மிக விரைவில் காலம் கனிந்துவரும். பொறுமை உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். கடன்கொடுத்தால் திரும்பி வராது என்பதால் கவனம்.

20.06.2014 வரை 3 இல் கேது இருப்பது ஓரளவு நன்மையே. தனலாபத்தைக் கொடுப்பார், பங்கு வர்த்தகத்தில் இலாபம், திடீர் அதிர்ஷ்டம் காட்டும். பிற மதத்தவர்கள் உதவி கிடைக்கும்.

ராகு 9 இல் இருப்பது தனநாசத்தையும், சிக்கல் சர்ச்சைகளையும் குழப்பத்தையும் தருவார். சேமிப்புக் கரையும். வீண் செலவு, தந்தைக்கு ஆரோக்கிய குறைவு, அவருடன் கருத்து வேறுபாடு என்பன ஏற்படும். வீண் மனக்குழப்பம், பதற்றம் ஏற்படும்.

தந்தை வழி உறவினர்களால் பிரச்சினை, தொல்லை, மனஸ்தாபம் என்பனவற்றால் கவலை அடைவீர்கள். மனம் எப்போது நிம்மதியின்றி சஞ்சலப்படும். அமைதியாய் இருங்கள். பொறுமையாய் இருங்கள். உங்களைக் கோபப்பட வைக்க சிலர் முயற்சிக்கலாம். அதற்கு இடம்கொடுக்காதீர்கள். சமாளித்துப் போங்கள். வீண் விவாதங்களுக்கு இடம் தராதீர்கள்.

21.06.2014 பின் கேது 2 ஆம் இடத்திலும் ராகு 8 ஆம் இடத்திலும் இருப்பது தீமையே. பேசுபவைகளை கவனமாகப் பேசுங்கள். சின்ன விடயம் கூட பெரும் சண்டையாக வர வாய்ப்புண்டு. ஒருமுறைக்கு இருமுறை அல்லது மும்முறை யோசித்தே பேசுங்கள். அவசரத்தையும், பதற்றத்தையும், மனக்குழப்பத்தையும் முடிந்தளவு குறைத்துக் கொள்ளுங்கள். தேவையற்ற விமர்சனத்துக்கும் பலிச்சொல்லுக்கும் ஆளாவீர்கள். ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

கண், பல், காது, தொண்டை போன்ற உறுப்புக்களில் நோய்வர வாய்ப்புண்டு. தோல், நரம்பு சம்பந்தமான நோய்களும் வரலாம். சிறு விபத்துக்கள் கூட நேரலாம். உணவில் கவனம் எடுங்கள். விஷப் பூச்சிகள், கொசுவினால் வரக்கூடிய நோய்கள், தொற்று நோய்கள் தாக்க வாய்ப்புண்டு. பிணை, பொறுப்புக்கு துணை போக வேண்டாம். கடன் கவலைதரும். தன்னம்பிக்கை ஒன்றே உங்களைக் காக்கும்.

வருட ஆரம்பம் முதல் 18.12.2014 வரை சனிபகவான் உங்களுக்கு 9 ஆம் வீட்டில் இருக்கின்றார். அதனால் வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டாகலாம். சொத்து வாங்க முயற்சி செய்வீர்கள். தந்தை வழி உதவிகள் கிடைக்கும். உறவுகள் மேம்படும், மனதில் உறுதி பிறக்கும். எதையும் செய்யும் ஆற்றல் உருவாகும். துணிந்து சில காரியங்களைச் செய்ய ம்ற்படுவீர்கள்.

18.12.2014 பின் சனி 10 ஆம் வீட்டுக்குச் செல்வதால் புது முயற்சி பற்றி சிந்திப்பீர்கள். கடின உழைப்புக்குத் தயாராவீர்கள். தாமதங்களைத் தவிர்த்துக்கொள்ள முயற்சிப்பீர்கள். கஷ்டப்பட்டு வெற்றிபெறுவீர்கள். பல சிக்கல்கள் சங்கடங்கள் மத்தியிலும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

கஷ்டப்பட்டு தொழிலில் வெற்றி அடை வீர்கள். இடமாற்றத்தால் குடும்பத்தை பிரிய நேரிடும். கடமையில் கண்ணாயிருங்கள். தொழில் நிமித்தம் வெளியூர் செல்லும் வாய்ப்பு உருவாகும்.

**வியாபாரிகளுக்கு:**
சுமாரான இலாபம் கிடைக்கும். கவனமாக இருக்கவும். தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளவும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

**உத்தியோகத்தர்களுக்கு:**
தான் உண்டு தன் வேலையுண்டு என இருங்கள். வேலைகளை விரைவாக முடிப்பீர்கள். தேவையற்ற பேச்சைத் தவிர்க்கவும்.

மாணவர்களுக்கு: வகுப்பறையில் முன் வரிசையில் அமருங்கள். பலமுறை பயிற்சி செய்யுங்கள். எதிர்பார்த்த புள்ளி கிடைக்கும்.

பரிகாரம்:
வியாழக்கிழமைகளில் குருவழிபாடு செய்து வரவும். தட்சணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றி நம்பிக்கையுடன் வழிபட்டு வாருங்கள். ஆஞ்சநேயரை அன்புடன் வழிபடுங்கள். ராகுகால பூசையில் கலந்துகொள்ளுங்கள். விநாயகரை வழிபட வினைகள் அகன்றுவிடும்.

தானதர்மம்:
பிராமண உத்தமர்களுக்குக் கடலைதானம் செய்யவும். ஏழை சுமங்கலிகளுக்கு மஞ்சள் வஸ்திரம் வாங்கிக் கொடுங்கள். புற்றுநோயாளர்களுக்கு உதவிடுங்கள். ஆலயத்தில் சிரமதானம் செய்யுங்கள்.

மொத்தத்தில் இவ்வருடம் 50 சதவீதம் நன்மைகளைப் பெறுவீர்கள்.

## மீனம் பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி



பொறுமையும் நிதானமும் நேர்மையும் கொண்டவர்கள். இலாப நஷ்டம் பற்றி கவலைப்படாமல் கண்ணியமாய் கடமையாற்றக் கூடியவர்கள். பிறர் உணர்வுகளை மதித்து நடப்பவர்கள். பிறர் மதிக்கும் செயல்களைச் செய்யக்கூடியவர்கள். கௌரவத்துக்காகப் பாடுபடக் கூடியவர்கள். தன்னைப் பிறர் மத்தியில் தனித்துவமாகக் காட்ட பிரியமுடையவர்கள். எதிர்ப்புகளை எளிதாய் சமாளிக்கக் கூடியவர்கள். உழைக்கும் முயற்சியாலும் உதவும் குணத்தாலும் உயர்ந்த நிலையை அடைய நினைக்கும் மீன ராசி நேயர்களே!

வருடாரம்பம் முதல் 12.06.2014 வரை உங்கள் ராசிநாதன் குருபகவான் 4 ஆம் வீட்டில் இருந்து சில சங்கடங்களைக் கொடுத்திருப்பார். வீடு வாகன விடயத்தில் சில செலவுகள் வரும். பழைய வாகனம் சீர்செய்ய அல்லது அதை விற்று புதிய வாகனம் வாங்கத் தோன்றும். வீட்டில் சில திருத்தங்கள் மாற்றங்கள் செய்ய வேண்டிவரும். தாயாருக்கு சில நோய் நொடிகள், மருத்துவச் செலவுகள் வந்து போகும். தொழிலில் சற்று இறுக்கமான நிலைமை வந்து போகும். தாய்வழி உறவில் சில சிக்கல்கள் தோன்றி மறையும். ஆயினும் இதை எல்லாம் சமாளிப்பீர்கள்.

2014.06.12 இற்குப் பின் இராசிநாதன் குருபகவான் 5 ஆம் இடம் வருவது மிகப்பெரிய நன்மையே. சில காலமாகத் தடைப்பட்ட காரியங்கள் கைகூடி வரும். மனதில் நிம்மதி உருவாகும். மகிழ்ச்சி கூடும். சுப நிகழ்வுகள் நடந்தேறும். புது வீடு, நிலம் வாங்கும் எண்ணம் கைகூடும்.

குழந்தைப் பாக்கியத்தை எதிர் பார்ப்போருக்கு அப்பெரும் பாக்கியம் கிட்டும். பிள்ளைகளால் இருந்துவந்த பிரச்சினைகள் சிக்கல்கள் விலகும். தொழில் வியாபாரம் பற்றியும் அதை முன்னேற்றவும் புதிய முயற்சிகள் பற்றியும் சிந்திப்பீர்கள். முயற்சிகளும் பலிக்கும். பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். சில காலமாக இழந்த கௌரவத்தை, செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். இந்தக் காலம் குருபலன் உங்களுக்கு பூரணமாக உண்டும்.

20.06.2014 வரை 2 இல் இராகுவும் 8 இல் கேதுவும் இருப்பதால் தீமையான பலன்கள்தான் உண்டு. ஆகையால் பேச்சில் நிதானம் தேவை. வாக்குறுதியை, பிணையை, பொறுப்புக்களைத் தவிர்க்கவும். வாகனத்தால் ஆபத்துக்கள் வர வாய்ப்புண்டு. உறவினர்களுடன் பகை தோன்றி மறையும். கண், வாய், காது, தோல், நரம்பு சம்பந்தமான நோய்வர வாய்ப்புண்டாகும்.

21.06.2014 பின் ஜன்மத்தில் ராகுவும் 7 இல் கேதுவும் செல்வதால் குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் சில பிரச்சினைகள் வர வாய்ப்புண்டு. குடும்ப ஒற்றுமை குறையும். சில விடயங்களில் ஏமாற்றங்கள் ஏற்படலாம். யாரையும் நம்பாதீர்கள். ஆயினும் ஆன்மிக ஈடுபாடுகள் அதிகரிக்கும். மனைவிக்கு சில ஆரோக்கிய குறைவுகள் வர வாய்ப்புண்டாகும்.

சித்திரைப் புத்தாண்டு ஆரம்பம் முதல் 18.12.2014 வரை அக்ஷ்டம சனி தங்களுக்கு நடைபெறுவதால் சில அவமானங்களும், கஸ்டங்களும், செய்யாத குற்றத்துக்கு தண்டனைகளும் வரவாய்ப்புண்டு. பேச்சில் நிதானம் தேவை.

வார்த்தைகளைக் கொட்டி விட்டு சங்கடப்படாதீர்கள். கொடுத்த பணமும் திரும்பக் கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்படும். பொருளாதாரத்தில் குழப்பம் காட்டும். யாரையும் நம்பி எந்த முடிவையும் எடுக்கக்கூடாது. ஏமாற்றத்தை நினைத்தும் ஏமாற்றியவர்களை நினைத்தும் கவலைப்பட வேண்டிவரும்.

பயம் மனதில் குடிகொள்ளும். தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும்.

நீங்கள் எடுத்த சில முட்டாள்தனமான முடிவுக்காய் வருத்தப்படுவீர்கள். செல்வாக்கில் சரிவு காட்டும். வேலையாள்களால் பிரச்சினை வரும், கவனம். கடன்வாங்கி, அதிக வட்டிக்கு பணம் வாங்கி முதலீடு செய்வதைக் கண்டிப்பாக தவிர்க்கவும்.

18.12.2014 முதல் அக்ஷ்டம சனி முடிந்து 9 ஆம் வீட்டுக்கு வருவது நன்மை மேல் நன்மைதான் பாருங்கள். எல்லாச் சுமையும் குறையும். மனதில் நிம்மதி உண்டாகும். உறவில் உண்டான பகை நீங்கும்.

இழந்த செல்வாக்கு உயரும். கடன் வசூலாகும். நல்ல செய்தி வீடு தேடிவரும். ஆரோக்கியம் மேம்படும். வெற்றி மேல் வெற்றி கிட்டும். முயற்சித்த காரியங்கள் இழுபறியின்றி முடிவு பெறும். வியாபாரம் பெருகும்.

**வியாபாரிகளுக்கு:**
புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். அகலக் கால் வைக்காதீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்த வேண்டாம். ஜூன்மாதத்தின் பின் எதையும் சமாளிக்கலாம். வியாபாரம் களைகட்டும்.

**உத்தியோகத்தர்களுக்கு:**
அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்காது. உத்தியோகத்தில் சில தொந்தரவுகள் காட்டும். பழிவாங்கப்படுவீர்கள். ஜூன் மாதத்தின் பின் உங்கள் திறமைக்கு தகுந்த மதிப்பு கிடைக்கும். உழைப்புக்குண்டான ஊதியம் கிடைக்கும். பதவி, சம்பள உயர்வு கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:**
கடின முயற்சி எடுத்தால் மட்டுமே வெற்றி உண்டு. திரும்பத் திரும்ப பயிற்சி செய்யுங்கள். ஜூன்மாதத்தின் பின் முயற்சிக்கும், எடுக்கும் பயிற்சிக்கும் வெற்றி உண்டு.

**பரிகாரம்:**
சனிவாரம் சனீஸ்வர வழிபாடு செய்யுங்கள். தினசரி ஆஞ்சநேயரை வழிபடுங்கள். மாதமொருமுறை வரும் தேய்பிறை அக்ஷ்டமி திதியன்று காலபைரவருக்கு நெய்தீபம் ஏற்றுங்கள்.

தானதர்மம்:
கால் இல்லாதவர்கள், நொண்டி முடவர்களுக்குப் பிச்சை இடுங்கள். பாதரட்சை (செருப்பு), வாங்கிக்கொடுங்கள். கைத்தடி வாங்கிக் கொடுங்கள். ஐயப்பனை மனமுருகி பிரார்த்தனை செய்யுங்கள். எள்தானம் செய்யுங்கள்.

மொத்தத்தில் இவ்வருடம் 75 சதவீதம் நன்மைகளைப் பெறுவீர்கள்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மன் இன்ஸ்ரிடியூட்டில் திருமதி பி.கஜேந்தினியிடம் அண்மையில் நடைபெற்ற பயிற்சிப் பரீட்சையில் சித்தியடைந்த இந்த மாணவர்கள் 85 முதல் 65 வரையான புள்ளிகளை எடுத்து சான்றிதழ்களை பெற்றனர். (த)

## ஹட்ச் - மொபிரெல் உடன்படிக்கை தாமதம்

ஹட்ச் நிறுவனத்தின் முழு உரிமையையும் கொள்வனவு செய்யும் மொபிரெல்லின் நடவடிக்கை தற்போது பூர்த்தியாகியுள்ள போதிலும், குறித்த நிறுவனத்தை கொள்வனவு செய்வதற்கு மொபிரெல் வழங்க முன்வந்துள்ள தொகையைக் கருத்தில் கொண்டு, அதற்கான அனுமதியை வழங்க உயர்மட்ட அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் அங்கத்துவத்தை பெற்ற நிறுவனமான மொபிரெல், ஹட்சிசன் ரெலிகொம் நிறுவனத்தை கொள்வனவு செய்வதற்கு முறையான சட்ட ரீதியான நியதிகளை பூர்த்தி செய்துள்ளதாகவும், ஆனாலும் கொள்வனவு செய்வதற்காக 132 மில்லியன் டொலர்கள் பதியப்பட்டுள்ளதாகவும், இதற்கு திறைசேரி அனுமதி வழங்க மறுத்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதே ஹட்சிசன் நிறுவனத்தை கொள்வனவு செய்ய டயலொக் நிறுவனம் 78 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த முன்வந்திருந்ததாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிந்தது. (த)

## பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் ஜனசக்தி

அனைத்து இடங்களிலும் பெண்களுக்கு மன நிம்மதியை அளிக்கும் வகையில் ஜனசக்தி காப்புறுதி நிறுவனம், காப்புறுதிதாரரும் அவரின் வாழ்க்கைத்துணையும் வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பான ஓய்வூதிய அனுகூலங்களை அனுபவிக்கக்கூடிய வகையில் லைஃவ் சேவர் காப்புறுதித் திட்டத்தை வழங்கி வருகின்றது.

ஜனசக்தி லைஃவ்சேவர் என்பது, பிரத்தியேக ஓய்வூதியத் திட்டமாகும்.

ஜனசக்தி லை.ஃ.வ்சேவர்

இந்தத் திட்டமானது ஓய்வூதியம் பெறும் காலப்பகுதியில் கிடைக்கக் கூடிய அனுகூலங்கள், தற்சமயம் எந்த நிறுவனத்தில், எந்தத் தொழில்நிலையில் காப்புறுதிதாரர் உள்ளார் போன்ற விடயங்களில் தங்கியிருப்பதில்லை. காப்புறுதிதாரரின் முன்னுரிமைக்கு அமைய பல்வேறு தெரிவுகளில் அனுகூலங்கள் வழங்கப்படுகின்றன. காப்புறுதிதாரர் முதலீடு செய்யும் தொகை, வருடாந்தம் வளர்ச்சியடையும் வகையில் அமைந்துள்ளது.

காப்புறுதிதாரர் தமது தொழில் வாழ்விலிருந்து ஓய்வுபெறும் போது, தமது ஓய்வூதியத் திட்டத்திலிருந்து வரிவிலக்கழிக்கப்பட்ட தொகைப் பணத்தை அல்லது தவணை முறையில் பெறும் வகையிலான வரி விலக்கழிக்கப்பட்ட வருமானத்தைத் தமது தெரிவுக்கமைய வாழ்நாள் முழுவதும் பெறுவார். காப்புறுதிதாரர் தமது ஓய்வூதியம் பெறும் காலத்தை 10, 15 அல்லது 20 வருடங்கள் அல்லது வாழ்நாள் முழுவதுக்கும் என நிர்ணயித்துக் கொள்ள முடியும். பணவீக்கம் மற்றும் வருமானத் தேவை போன்றவற்றுக்கு அமைய மாதாந்தம் வழங்கப்படும் தொகை ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கிறது.

இந்த லைஃவ்சேவர் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு வயது வரையறைகள் எதுவுமில்லை. ஒவ்வொரு நபரின் தேவைகளுக்கு அமைய, எவ்வேளையிலும் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கக்கூடிய வசதிகள் காணப்படுகின்றன. காப்புறுதிதாரருக்கு மேலதிகமாக வருமானம் கிடைக்கும் தருணங்களில் அந்தத் தொகையையும் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் முதலீடு செய்வதன் மூலம் முதுமைக் காலத்தில் பெற்றுக் கொள்ளும் முதிர்வுத்தொகையும் அதிகரிக்கும்.

ஒவ்வொரு பெண்ணும் தன் ஓய்வு பெறும் காலத்தில் எதிர்பாராத பலநெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஜனசக்தி நிறுவனமாகிய நாம் அவர்களது தேவையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கமைய தமது ஓய்வூதியத் திட்டத்தை அமைத்துக் கொள்வதற்குரிய நெகிழ்ச்சித் தன்மை இந்த ஓய்வூதியத் திட்டத்தில் காணப்படுகிறது. ஆகவே லைஃவ் சேவர் திட்டத்துடன் இணைந்து ஆயுள் காப்பீட்டொன்றை பெற்றுக் கொள்வதற்கான சரியான தருணம் இதுவாகும். ஆகக்குறைந்தது ரூ.1000 தொகையை செலுத்தி இந்த ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பிக்க முடியும் என ஜனசக்தி நிறுவனத்தின் ஸ்தாபகரும், பிரதித் தலைவருமான சந்திரா ஷாஃப்ட்டர் தெரிவித்தார்.

இலங்கைக் காப்புறுதித் துறையின் தந்தையும், ஆசிய காப்புறுதி வாழ்நாள் சாதனையாளருமான அவர், குடும்பங்களின் பாதுகாப்பை வழங்கும் வகையிலான காப்புறுதித் திட்டத்தை அறிமுகம் செய்வதில் தாம் முழுமூச்சுடன் செயற்படுவதாகத் தெரிவித்தார். (த)

# ஏ.எம்.டபிள்யூ காட்சியறை யாழ்ப்பாணத்தில் திறப்பு



காட்சியறையை முகாமைப் பணிப்பாளர் திறக்கிறார்

அசோஷியேட்டட் மோட்டர்வேய்ஸ் பிறைவேட் லிமிட்டட் (ஏ.எம்.டபிள்யூ) தனது புதிய ஏ.எம்.டபிள்யூ மல்ரி பிராண்ட் காட்சியறையைக் கடந்த 07ஆம் திகதி இல.195, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தது. இந்து, பௌத்த, கத்தோலிக்க, இஸ்லாமிய மதத் தலைவர்களின் பங்குபற்றுதலுடனும் ஆசீர்வாதத்துடனும் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஏ.எம்.டபிள்யூ முகாமைப் பணிப்பாளர் சமந்த ராஜபக்ஷ புதிய காட்சியறையைத் திறந்து வைத்தார்.

சமந்த ராஜபக்ஷ அங்கு பேசுகையில், ஏ.எம்.டபிள்யூ நிறுவனம் தனது 65 ஆண்டுகால வரலாற்றில் வாடிக்கையாளர்களின் நலன்களுக்கும் வசதிகளுக்குமே முதலிடம் அளித்து வருகிறது. இதன் காரணமாகவே அவர்களின் வசதியை முன்னிட்டு நாட்டின் சகல பிரதேசங்களிலும் கிளைகளைத் திறப்பதில் நாம் அக்கறை செலுத்துகிறோம். சுசுக்கி, யமஹா மற்றும் பியாகியோ வாகனங்களை இலகுவாகத் தெரிவு செய்து வாங்கும் வசதியை எமது மதிப்பிற்குரிய வடபகுதி மக்களுக்கு வழங்கும் முகமாகவே நாம் எமது காட்சியறையை யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளோம். அது மட்டுமன்றி, எமது தற்போதய வாடிக்கையாளர்களும் இக் காட்சியறைக்கு வந்து பல்வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறினார்.

திறப்பு விழாவுக்கு வந்திருந்தவர்கள் முன்னொருபோதும் வழங்கப்பட்டிருக்காத சில விசேட வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர். தமக்குப் பிடித்தமான வாகனத்தைப் பரீட்சார்த்தமாக ஓட்டிப் பார்த்து, அதன் சிறப்புக்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு அவற்றில் ஒன்றாகும். இதனைத் தவிர, தற்போது பயன்படுத்தும் வாகனத்தின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும் தற்போதைய சுசூக்கி வாகனத்தைக் கையளித்து, அதற்குப் பதிலாக தமக்குப் பிடித்த மற்றுமொரு வாகனத்தைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யவும் வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்தவர்களுக்குப் பெறுமதிமிக்க அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன.

யமஹா மோட்டார் சைக்கிள் வாடிக்கையாளர்களுக்கும் புதிய காட்சியறையின் திறப்புவிழா ஒரு முக்கிய தினமாக அமைந்தது. விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் சாகசக் காட்சியை அனைவரும் கண்டுகளித்தனர். எஸ்.இசற் வகை மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்தவர்களுக்கு ரூ.40,000 வரையான விலைக்கழிவு அல்லது விசேட அன்பளிப்பு வழங்கப்பட்டது. ஜப்பானியத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்படும் யமஹா மோட்டார் சைக்கிள் தற்கால இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது.


புதிதாகத் திறக்கப்பட்ட யாழ்ப்பாணக் காட்சியறையில் வெவ்வேறு வகையான முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இவற்றைத் தவிர, வாகனங்களுக்கான அசல் உதிரிப்பாகங்கள், ஒயில்கள், டயர்கள், பற்றரிகள், நியூ ஹொலண்ட் உழவு இயந்திரங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. (த)

# டாடா நிறுவனத்தின் பல்நோக்கு உபயோக அபிவிருத்தித் திட்டம்

இந்தியாவில் மிக விரைவாக வளர்ச்சிகண்டு வருகின்ற அசைவற்ற ஆதன இருப்பு அபிவிருத்தி நிறுவனமாகவும், டாடா சன்ஸ் கூட்டுநிறுவனங்களின் முற்றுமுழுதான உரிமத்தின் கீழான ஒரு துணை நிறுவனமாகவும் திகழ்கின்ற டாடா ஹவுஸிங், இலங்கையின் கொழும்பு நகரில் பல்நோக்கு பயன்பாட்டுக்கான குடியிருப்புச் செயற்றிட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது. இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்ற இச்செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாகக் கொழும்பு கொம்பனித்தெருவில் குடியிருக்கும் மக்களின் தற்போதைய குடியிருப்புக்களை மேம்படுத்தும் நோக்குடன் குடியிருப்புத் தொகுதிகள் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், பல்நோக்கு பயன்பாட்டுக்கான அபிவிருத்திச் செயற்றிட்டமொன்றும் முன்னெடுக்கப்படவுள்ளது. அசைவற்ற ஆதன இருப்பு துறையைச் சார்ந்த இந்திய நிறுவனமொன்றால் இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற முதலாவது செயற்றிட்டமாக இது அமைந்துள்ளதுடன், இதற்கு 400 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான பாரிய தொகை முதலீடு செய்யப்படவுள்ளது.

இச்செயற்றிட்டம் பூர்த்தியடையும் வரையில் கொம்பனித்தெருவிலுள்ள குடியிருப்பாளர்களின் அடிப்படைக் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்தி அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்துள்ள இலங்கை நகர அபிவிருத்தி அதிகாரசபை, 550 இற்கும் அதிகமான குடியிருப்புக்களில் வாழ்கின்றவர்களுக்கு சிறந்த வசதிகளுடனான குடியிருப்பு வசதிகளை வழங்கி அபிவிருத்தியின்மையை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குடியிருப்பாளர்கள் அடுக்குமனைக் குடியிருப்பு உரிமையாண்மையைப் பெற்றுக்கொள்வதுடன், அவர்கள் அதை உபயோகித்து அடமானம் வைக்கும் வசதியையும் கொண்டுள்ளனர். ஆடம்பர நிர்மாணச் செயற்றிட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 36 தளங்களைக் கொண்ட 4 குடியிருப்பு அடுக்குமனைத் தொகுதிகள் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், ஒன்று, இரண்டு, மூன்று மற்றும் நான்கு படுக்கையறைகளைக் கொண்டுள்ள அடுக்குமனைகள், இரட்டை மனைகள், கூரையுச்சிமனைகள் என அண்ணளவாக 650 மனைகளைக் கொண்டிருக்கும். மேலும் வர்த்தகரீதியிலான விற்பனைப் பிரதேசம், வர்த்தக ரீதியிலான அலுவலகப் பிரதேசம் மற்றும் வர்த்தக ரீதியிலான ஹோட்டல்கள் மற்றும் தளபாடங்கள் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்ட அடுக்குமனைகள் ஆகியவற்றையும் கொண்டிருக்கும். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அத்தனை கஷ்டங்களும் காணாமற்போகும். பணவரவுகள் தாராளமாக இருக்கும். பிரிந்த உறவினர்களும் ஓடிவந்து நட்புக்கரம் நீட்டுவார்கள். எதிரிகளும் நண்பர்களாகும் அளவுக்கு உங்களின் பலமும் வலிமையும் கூடும்.

**இடபம்:** சிலருக்கு நினைத்தவரையே கைப்பிடிக்கும் திருமணயோகமும் உண்டாகும் எதிர்பாராத திடீர் உதவிகளும் கிடைக்கும். வியாபார ரீதியாக புதிய வாய்ப்புகள் தேடிவரும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகளாலும் இலாபம் அமையும்.

**மிதுனம்:** எடுக்கும் காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த உயர்வுகளைப் பெறமுடியும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் தொழிலாளர்களிடமும் வாக்குவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் அபிவிருத்தியைப் பெருக்கிக்கொள்ள முடியும்.

**கடகம்:** வீடு.மனை என்று சொத்து வாங்கும் யோகமும் சிலருக்கு கிடைக்கும். பூர்வீகச் சொத்தில் இருந்துவந்த வில்லங்கம் நீங்கும். வழக்குகள் வெற்றி பெற்று, தீர்ப்பு உங்களுக்கு சாதகமாக வரும்.

**சிங்கம்:** புதிய வாய்ப்புகள் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகி வெளிநாடு செல்வீர்கள். அரசியல்வாதிகளுக்கு ஏற்றம் உண்டாகும். நீங்கள் எடுக்கும் சில முயற்சிகள் தோல்வியைச் சந்திக்கும்.

**கன்னி:** உங்கள் மனதில் இருந்த உளைச்சல் கொஞ்சம் நீங்கும். பணப்புழக்கமும் சீராகும். உங்கள் மதிப்பு, மரியாதை நன்றாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கடந்த காலத்தைவிட சிறப்பாக இருக்கும்.

## நாளை

வைகாசி-05 திங்கட்கிழமை 19.05.2014
திதி: உத்தராடம் பி.இ.01.10 வரை
நட்சத்திரம்: பஞ்சமி பி.ப.03.36 வரை
சுபநேரம்: 11.52- 01.22வரை
இராகுகாலம்: 07.22-08.52 வரை

**துலாம்:** அவ்வப்போது மனக் கசப்பு வரத்தான் செய்யும். ஆனால், அவை உங்கள் அணுகுமுறையால் விலகிவிடும். தடைப்பட்டுவந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் சற்று முயன்றால் கைகூடும்.

**விருச்சிகம்:** உத்தியோகத்தில் முன்னேற்றம் படிப்படியாக அதிகரிக்கும். வேலைப்பளு இருக்கத்தான் செய்யும். ஆனாலும் அதற்குண்டான வருமானமும் கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** சீரான வருமானத்தைக் காணலாம். இலாபம் குறையாது. அதிக அலைச்சலும் அல்லலும் பட்டுத்தான் ஆக வேண்டும். ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை உருவாகும்.

**மகரம்:** எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்காமல் போகலாம். ஆனால் பணப் புழக்கத்துக்கு குறைவிருக்காது. அரசியல்வாதிகள் பொது நல சேவையில் சீரான நிலையில் இருப்பர். ஆனால் எதிர்பார்த்த பதவிகள் கிடைக்காது.

**கும்பம்:** வேலையில்லாமல் இருந்தவர்களுக்கு பிழைப்புக்கு வழி கிடைக்கும் வண்ணம் ஏதாவதொரு வேலை கிடைத்துவிடும். ஏற்கெனவே வேலையில் உள்ளவர்களுக்கும் உத்தியோக உயர்வுகிடைத்து அதன்மூலம்வருமானம்பெருகும்

**மீனம்:** ஏற்கெனவே அடமானத்தில் இருந்த நகை நட்டுக்களையும் மீட்டுக் கொள்வீர்கள். அலங் கார சாதனங்கள், அழகுப் பொருள்கள், நுட்பமான தயாரிப்புகள், முதலியவற்றை வாங்குவீர்கள். புதிய வீடு வாங்கும் யோகம் சிலருக்கு வாய்க்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 8 | | | 5 | 3 | 2 | |
| | 9 | | | | | 8 | | 7 |
| 1 | | 2 | 4 | | | 5 | | |
| | 6 | | | | 7 | | | 8 |
| 2 | 4 | 9 | | | | 6 | 7 | 3 |
| 8 | | | 6 | | | | 9 | |
| | | 4 | | | 3 | 9 | | 6 |
| 9 | | 6 | | | | | 3 | |
| | 8 | 1 | 7 | | | 4 | | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 3 | 5 | 8 | 2 | 1 | 6 | 9 |
| 6 | 2 | 1 | 3 | 4 | 9 | 8 | 5 | 7 |
| 9 | 5 | 8 | 1 | 6 | 7 | 3 | 4 | 2 |
| 3 | 8 | 9 | 7 | 5 | 4 | 2 | 1 | 6 |
| 2 | 1 | 4 | 6 | 3 | 8 | 9 | 7 | 5 |
| 5 | 7 | 6 | 2 | 9 | 1 | 4 | 8 | 3 |
| 4 | 9 | 2 | 8 | 7 | 5 | 6 | 3 | 1 |
| 1 | 6 | 7 | 4 | 2 | 3 | 5 | 9 | 8 |
| 8 | 3 | 5 | 9 | 1 | 6 | 7 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes!

எமது தொழிலதிபரும்,
பிரபல சமூக
சேவையாளரும்,
அகில இலங்கை
சமாதான நீதிவானும்,
கொடை வள்ளலும்
மக்கள்
தொண்டனுமான

கருமத்திருதி லயன் **Dr. வை.தியாகராசா** MJF

அவர்கள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306B1இற்கான உப ஆளுநர் தெரிவில் அமோக வாக்குகளைப்பெற்று வெற்றியீட்டியமைக்காக எங்களுடைய மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, கோப்பாய்ப் பிரதேசம் மட்டுமல்லாமல் யாழ். மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துத் தந்தமைக்காக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மேன்மேலும் சாதனைகள் படைத்து மக்களுக்கு சேவைசெய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

(48113) (4.5.6)

பதவியின் நிமித்தம் பலர் பெருமை அடைகின்றனர் ஆனால்
இந்தப் பதவிக்கு இவரை தெரிவுசெய்ததன் மூலம்
வாக்களித்தோரும் பதவியும் பெருமையடைகிறது.

Congratulation

வாழ்த்துபவர்கள்:
முகாமையாளரும், பணியாளர்களும்,
மெடி எயிட்ஸ் கிளினிக் நல்லூர்,
மெடி எயிட்ஸ் மருந்தகம் நல்லூர்,
எவனி முகவர் தபால் நிலையம் கோப்பாய்.

## விற்பனைக்கு

ஒரே பாவிப்பில் உள்ள
ELECTRIC BICYCLE HONGDV
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 391 2281 (க/7601) (3.6.4)

## வீடு வளவு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு சந்திக்கு மிக அண்மையில் 102 ஆம் இலக்க மூன்று பரப்பில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடும் அதனோடு சேர்ந்து தளபாடங்கள், மின் உபகரணங்கள் உடன் விற்பனைக்குண்டு.(பி.ப. 4-5) (48087) (5.4.3)
தொடர்பு: 021 205 3902, இ.இலங்கநாதன்

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




10.30am Bronze 2.30pm, 6.30pm

## வீடு வாடகைக்குண்டு

82/1, கண்டி வீதி, அரியாலை மேற்கு, கச்சேரிக்கு அருகில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (48003) (12.3.6)
தொடர்பு: 077 804 2848/021 222 3483

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அருகில், சோமசுந்தரம் ஒழுங்கையில் உள்ள வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். (நிறுவனங்களுக்கு ஏற்றதானது).
தொடர்பு: 077 132 6489/021 222 6304 (48034) (12.3.6)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

புத்தூர் சிவன் கோயிலடியில் 4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
(48061) (12.3.6) தொடர்பு: 077 044 9266

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இராசாவின் தோட்ட வீதியில் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்துள்ள புதிய வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. பயன்தரும் மரங்களும் உண்டு. (தரகர் தேவையில்லை) (48130) (3.6.4)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 508 7971, 021 490 4808

## தேவை

சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள வைத்திய நிலையம் ஒன்றிற்கு தாதி வேலை பழகி வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. சாவகச்சேரி நகரிற்கு அருகில் வசிப்பவர்களும், A/L படித்தவர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 918 5730 (48117) (7.6.3)


## சுத்திகரிப்பு மேற்பார்வையாளர் தேவை

வடமாகாணத்திலுள்ள ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம் (Motor Bike and Light Vehicle சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல்) சிங்களம், தமிழ் பேசக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
(43306) (12.3.6) தொடர்பு: 072 719 7199


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலோலி குரும்பைகட்டி கல்வி வட்டம் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களையும், ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் 'ஏ' சித்தி பெற்ற மாணவர்களையும் கௌரவித்தது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பிரதி அதிபர் வி.அருளானந்தன் உரையாற்றுவதையும் அருகில் இளைப்பாறிய ஆசிரியர் தி.துரைராசா, நெல்லியடி மத்திய கல்லூரி பிரதி அதிபர் அ.அரியரத்தினம் கிராம சேவையாளர் எஸ். உமாசங்கர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், கலந்து கொண்ட பார்வையாளர்களையும் மாணவர் ஒருவர் கௌரவிக்கப்படுவதையும் காணலாம். (ஓ-173)





தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய மகோற்சவத்தின் சப்பரம், தேர், தீர்த்தோற்சவ அருட் காட்சிகள். (ஓ)



ஏழாலை மேற்கு அண்ணமகேஸ்வரர் ஆலய அலங்கார உற்சவத்தின் சப்பரத் திருவிழாவின் போது இரவு சுவாமி வெளி வீதியுலா வரும் காட்சியையும் அடியவர்கள் கற்பூரச் சட்டிகள் ஏந்திச் செல்வதையும் காணலாம். (ஓ-86)





கொடிகாமம் எருவன் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் அண்மையில் இடம் பெற்றபோது, பிரதான கும்பங்கள் வீதியுலா வரு வதையும் கர்ப்பக்கிரக தூபிக்கு பிரதான சிவாச்சார்யார் சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள் அபிஷேகம் செய்வதையும் காணலாம். (ஓ)






காரைநகர் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையம் அண்மையில் திறந்து வைக் கப்பட்டது. இந்த நிகழ்வில் இடம்பெற்ற வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாண விகளின் வரவேற்பு நடனத் தையும், சண்டிலிப்பாய் அக் கடமி மாணவிகளின் நடன நிகழ்வையும் காணலாம். (ஓ-250)



வேலணை பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தால் சித் திரைப் புத் தாண்டையொட்டி நடத் தப்பட்ட விளையாட்டுப் போட்டி யில் வெற்றிபெற்ற சிறுவனுக்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் பரிசில் வழங்கு வதைக் காணலாம். (ஓ-7)



சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தில் உலக புத்தக தினத்தையொட்டி நடத்தப்பட்ட புதிய நூல்களின் காட்சிப்படுத்தலின் போது அமரர் கே.கந்தசாமியின் நினைவாக ஒரு தொகுதி நூல்களை அவரது மகன் நூலகரிடம் கையளிக்கின்றார். (வ-9)




யாழ். பாலர் கல்விக் கழகம் ஆண்டு தோறும் நடத்தி வரும் பேச்சுத் திறன்காண் விழாவில் 10 பாலர் பாடசாலைகள் பங்கு கொண்டன. சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிவஸ்ரீ ப.சிவானந்தசர்மா மங்கல விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்தபோது... (ஓ)



அரியாலை புனித யூதாததேயு ஆலய வருடாந்த திருவிழாவில் புனிதரின் திருச்சொரூப பவனி நடைபெற்று பக்தர்களுக்கு ஆசீர் வழங்கப்பட்டது. (ஓ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூட்டுறவாளர் பொ.முத்தையாவின் உருவச் சிலை திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம்பெற்ற போது வடமாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் சிலைக்கு மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (ச-421)



வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு புளியங்குளம் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற்றது. இந்தச் செயலமர்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களைக் காணலாம். (ச-422)



பூந்தோட்டம், ஸ்ரீநகர் முன்பள்ளி மாணவர்களுக்காக வவுனியா நகரசபையின் முன்னாள் உபதலைவர் க.சந்திரகுலசிங்கம் முன்பள்ளி ஆசிரியையிடம் கற்றல் உபகரணங்களைக் கையளித்தார். (ச-402)



கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தால் வருடாந்த மதிய போசன விருந்துபசார நிகழ்வு கல்லூரியின் பொன்சபாபதி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பான்ட் அணிவகுப்பு இடம்பெற்றபோது... (ச-18)



வன்னேரிக்குளம் அறிவுக்கூடம் இலவசக்கல்வி நிறுவனம் பிரான்ஸ் அன்னை திரேசா சமூகநல நற்பணி மன்றத்தின் நிதி உதவியுடன் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதன்போது இலவச மாலை நேரக் கல்வியைப் பெற வந்த மாணவர்களையும், வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு அருட்தந்தை வாழ்வாதார உதவி வழங்குவதையும் படங்களில் காணலாம். (ஐ)



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெற்றது. (ச-18)



செஞ்சிலுவைச் சங்க தினத்தையொட்டி செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் செஞ்சிலுவை சங்கத்தின் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டனர். (ச-421)



முழு நிலா நாள் கலை விழா கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் காணலாம். (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனரமைப்புக் காணுமா? தட்டுவன்கொட்டி கிராம வீதி

கிளிநொச்சி, மே 18

கிளிநொச்சி, தட்டுவன்கொட்டி கிராமத்தின் பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தட்டுவன்கொட்டி கிராமத்தில் தற்போது 94 வரையான குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த நிலையில் இக்கிராமத்துக்கான ஒரே ஒரு பிரதான பாதையாக அமைந்துள்ள ஆனையிறவு-தட்டுவன் கொட்டி பிரதான வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் பெரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் அந்த வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், குறித்த கிராம மக்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். எனவே குறித்த வீதியைப் புனரமைத்துத் தருவதோடு போக்குவரத்து வசதியையும் ஏற்படுத்தித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)



(C/14287)

# உடைந்த நிலையில் புதிய சந்தை நுழைவாயில்

பூநகரி, மே 18

பூநகரி, நாச்சிக்குடா பொதுச் சந்தையின் பிரதான நுழைவாயில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளபோதும், அது உடைந்த நிலையில் காணப்படுகின்றது.

பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட நாச்சிக்குடா பொதுச் சந்தையின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் இதற்கான பிரதான நுழைவாயிலின் பிரதான கதவுகள் பொருத்தப்பட்டிருந்தன.

இந்தநிலையில் கதவுகள் பொருத்தப்பட்டிருந்த தூண்கள் உரிய முறையில் அமைக்கப் படாததால் அவை உடைந்து வீழ்ந்த நிலையில் காணப்படுகின்றன.

எனவே நுழைவாயிலின் தூண்களை உறுதியானதாக அமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)

# பொதுமக்களால் திருத்தப்பட்ட வவுனியா ஸ்கந்தபுரம் வீதி



வவுனியா, மே 18

வவுனியா, ஸ்கந்தபுரம் பிரதான வீதி சிவில் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் அந்தப் பகுதி மக்களால் ஓரளவு புனர மைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த வீதியை முழுமையாகப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அந்தப்பகுதி மக்கள் கூறுகையில்; "வவுனியாவில் இருந்து ஸ்கந்தபுரம் ஊடாக நாகர் இலுப்பைக்குளம், இராசேந்திர குளம், தவசியா குளம் உள் ளீட்ட பல பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள், வர்த்தகர்கள், தோட்டச் செய்கையாளர் எனப் பலரும் தினமும் பயன்ப டுத்தும் பாதையாகும்.

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது காணப்படும் குறித்த வீதியால் மாரி காலங்களில் அந்தப் பகுதிகளுக்கான பஸ் போக்குவரத்தும் இடம்பெறுவது மிகக் குறைவு. அதனால் மருத்துவ மனைக்குச் செல்வோர், சந்தை களுக்குச்செல்வோர், பாடசாலை செல்வோர் எனப் பலரும் பாதிப்புக்களை எதி நோக்கி வந்தனர்.

5கிலோ மீற்றர் நீளமான அந்த வீதியைத் திருத்தித் தருமாறு பிரதேச சபை, பிரதேச செயலகம், கிராம அபிவிருத்திச் சங்கம், அரசியல்வாதிகள் எனப் பலரிடமும் முறையிட்டும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

எனவே எம் மால் முடிந்தளவு சிவில் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் வறுமைப்பட்ட மக்களிடம் சிறுகச் சேர்த்த பணத்தின் மூலம் மண் போட்டு வீதிகளின் புனரமைப்புப் பணி முன்னெடுக்கப்பட்டன.

எனவே, அதிகாரிகள் கவனம் செலுத்தி குறித்த வீதியை முழுமையாகப் புனரமைத்து தருமாறும் அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-421)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.குடாநாட்டில் தற்போது பழசீஸன். தென்மராட்சிப் பகுதியிலிருந்து விற்பனைக்காக தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள பலாப்பழங்கள். (வ-9)


## மஹிந்திரா சென்சூரோ 6 விருதுகளை கைப்பற்றியமைக்கான காரணம் இதோ !

- எரிபொருள் சிக்கனம் மிக்க MCi 5 என்ஜின்
- என்ஜின் செயலிழப்புடன் கூடிய, திருட்டை தடுக்கும் அலாரம்
- ரிமோட் FLIP Key
- Find Me விளக்குகள்
- வழி காட்டும் Guide Me விளக்குகள்
- செல்லக் கூடிய தூரத்தை காட்டும் எரிபொருள் மீட்டர்

Mahindra CENTURO IT'S GREAT TO BE ME

விருதுகள்




www.mahindratwowheelers.com

2 வருடங்கள் அல்லது 30,000 km வரையான உத்தரவாதம்

Authorised Service Centre

விசேட தவணை கொடுப்பனவு முறை | 3 இலவச சேவைகள் | இலவச மேலுறை | இலவச ஹெல்மட்

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 0772 880 555

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பிரதான காட்சியறை கொழும்பு-06 077 281 4193

மத்திய, வட மத்திய மாகாணம் 077 0023974 தென் மாகாணம் 077 0023971

வடக்கு, வட கிழக்கு மாகாணம் 077 0023969 மேல் மாகாணம் 077 0023968

ஐடியல் டூ வீலர்ஸ் பிரைவேட் லிமிடட்

தொலைபேசி 0112 221 222

பெக்ஸ் 0112 221 223

IDEAL 2 Wheelers


## உண்மை விதை வெங்காய செய்கையைத் தீவகத்தில் ஊக்குவிக்க நடவடிக்கை



கோப்புப்படம்

யாழ்ப்பாணம், மே 18

தீவுப்பகுதியில் உண்மை விதை வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தற்போது நிலவும் கடும் வறட்சி மற்றும் தண்ணீர்ப் பற்றாக் குறையால் தீவுப் பகுதியில் விவசாயச் செய்கையை மேற் கொள்ள முடியாது விவசாயிகள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். எனினும் குறித்த பிரதேசத்தில் இந்தப் போகத்துக்கான உண்மை விதை மூலம் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்கு பிரதேச விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக தீவுப் பகுதியில் கடந்த வாரம் பெய்த மழையைப் பயன்படுத்தி அவர்கள் தமது விவசாய நிலங்களை உழுது பண்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (வ-17)

## மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்



வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தால் வவுனியா நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் குலேந்திரகுமார் தலைமையில் அண்மையில் பாட சாலையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் தலைவரும், முன்னாள் நகர சபை உறுப்பினருமான தேசமான்ய சு.குமாரசாமி, வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் செயலாளர் கு.சஜீக்குமார், வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளர் பாரதியானந்தம் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தனர். (வ-421)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கான முன்பள்ளிக் கட்டடத்தை யாழ். பல்கலைக்கழக மனித வள முகாமைத்துவத் துறைத் தலைவர் திருமதி சாந்தகுமாரி மகேந்திரன் திறந்து வைக்கிறார். அருகில் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரன். (ஓ-173)







காரைநகர் புகலி சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெற்ற ஸ்கந்த மகாயாகத்தின் இறுதி நாளான கடந்த வியாழக்கிழமை சிவாச்சாரியார் யாகம் வளர்ப்பதையும் யாக கும்பங்கள் வீதி வலம் வருவதையும் காணலாம். இம்முறை விசேட மயூர பூசைகளுடன் ஸ்கந்த மகாயாகம் இடம்பெற்றது. கடந்த ஆண்டு அஸ்வமேத மகாயாகம் இடம்பெற்றது. மயூர பூசைக்காகக் கொண்டு வரப்பட்ட மயில்களையும் இங்கு காணலாம். (ஓ-250)





காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோயில் மகோற்சவத்தின் தேர்த் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
ஆறுமுகப் பெருமான் பக்தர்கள் புடைசூழ தேருக்கு எழுந்தருளுவதையும் தேரில் ஆரோகணித்து பத்தர்களுக்கு அருட்காட்சி கொடுப்பதையும் காணலாம். (ஓ-250)





பிரிட்டிஷ் பிஸ்னஸ் கல்லூரி முன்பள்ளி சிறார்களின் 11 ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும் சிறார்களின் பாண்ட் வாத்திய நிகழ்வையும் காணலாம். (ஓ-135)

## வவுனியாவில் குகனின் நினைவு தினம்

வவுனியா, மே 18

தமிழீழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளராக இருந்த குகனின் நினைவு தினம் நேற்று முன்தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தினால் தமிழீழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளராக இருந்த இவர் 1999 ஆம் ஆண்டு இனந்தெரியாதவர்களால் கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரின் நினைவு தினம் வவுனியா வைரவப் புளியங்குளத்தில் அமைந்துள்ள அவரது நினைவுச்சின்னம் முன்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்றது. (க-402)


# மரண அறிவித்தல்

## திருமதி நாகராணி துரைச்சாமி



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து(ROER MOND) ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகராணி துரைச்சாமி 15.05.2014 சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம் (செட்டியார்)- கமலாம்பிகை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்புப்பிள்ளை- சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைச்சாமி செட்டியாரின் அன்பு மனைவியும், சிறிகாந்தன் (பாரிஸ்), சிறிரஞ்சன்(நெதர்லாந்து), சிறிரஞ்சனி (லண்டன்), சிறிகுமார்(பாரிஸ்), நாகநந்தினி (நெதர்லாந்து), யோகலதா (நெதர்லாந்து), சந்தானகிருஸ்ணன்(பாரிஸ்), கலைச்செல்வி(நெதர்லாந்து), தர்ஷினி(லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற விஜயராசா(கொழும்பு) மற்றும் புவனேஸ்வரி(திருநெல்வேலி), காலஞ்சென்ற சபாலிங்கம்(திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன்(மானிப்பாய்), விஜயலக்சுமி(கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற திவாகரன்(லண்டன்) மற்றும் கலைச்செல்வி (பாரிஸ்), சிவகாந்தன்(நெதர்லாந்து), போல் (நெதர்லாந்து), சுஜித்தா(பாரிஸ்), சிறிகாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜேந்திரன்(லண்டன்), கவாஸ்கர் (லண்டன்), கபிலேந்திரன்(லண்டன்), கார்த்திக்(லண்டன்), கபினேஸ்(லண்டன்), கெளதனன் (லண்டன்), மயூரி(பாரிஸ்), மணாளன்(பாரிஸ்), மீரா(பாரிஸ்), துர்க்கா (பாரிஸ்), மாயா (பாரிஸ்), அபிராமி(பாரிஸ்), கபிலன்(நெதர்லாந்து), அகிலன் (நெதர்லாந்து), ஆதவன் (நெதர்லாந்து), காயத்திரி(நெதர்லாந்து), கதீசன் (நெதர்லாந்து), கீர்த்தன்(நெதர்லாந்து), மிலானி(லண்டன்), விசாகன்(லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 21.05.2014 புதன்கிழமை நெதர்லாந்தில் நடைபெறும்.

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| சிறிகாந்தன் (மகன்) 0033(0) 753 480 695 | நாகநந்தினி(மகள்)0031(0)475 311 940 |
| சிறிரஞ்சன் (மகன்) 0031 (0)684 061 904 | யோகலதா (மகள்)0031(0)455 252 870 |
| சிறிரஞ்சனி (மகள்) 0044(0)208 518 5011 | சந்தானகிருஸ்ணன்(மகன்)0033(0)617 916 560 |
| சிறிகுமார் (மகன்) 0033(0) 650 709 237 | கலைச்செல்வி (மகள்)[illegible] 275 340 |
| | தர்ஷினி (மகள்)0044[illegible]1496 |

**நெதர்லாந்து** தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



நவாலி ஜெயன் மரக்காலை உரிமையாளர்

## ச.சுப்பிரமணியம்

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு துயரடைவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்
**குகன் மரஅரிவு ஆலை,**
**நவாலி கிழக்கு, மானிப்பாய்.**

(48184) (45.6.3)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 28.05.2013
இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவர்

அமரர்
## செல்லப்பா இராஜேஸ்வரன்
(ராசன்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று (18.05.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு,
021 300 2102.

நகுலாம்பிகை (மனைவி),
தனுசன், அனுசன் (பிள்ளைகள்),
தக்சாயினி (மருமகள்),
கபிஷ்னா (பேரப்பிள்ளை).

(48165)(10.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



18.05.2014 அன்பு அம்மா

**ஜோசேப் அக்னஸ்**

அவர்களின் பிறந்தநாள் அன்று அவரை வாழ்த்துகின்றோம் இவர் இறைவன் அருளில் நீடுழி வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
லண்டனில் இருக்கும் மகள், மகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் மருமகன்.

இல. 15. செபஸ்ரியார் வீதி. குருநகர். யாழ்ப்பாணம்

## மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகள் மாயமாகும் சம்பவங்கள் அதிகரிப்பு

*தென்மராட்சி தெற்குப் பகுதியில்*

தென்மராட்சி, மே 18

தென்மராட்சி தெற்குப் பகுதியில் மேய்ச்சலுக்கு அவிழ்த்துவிடப்படும் மாடுகள் மாயமாக மறையும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அண்மைய மழைக்கு முன்னர் அந்தப் பகுதியில் பெரும் வறட்சி ஏற்பட்டிருந்த வேளையில் நீருக்காக மாடுகள் அலைந்த வேளையில் கண்ணி வைத்து பிடித்ததைக் கண்டு மக்களால் மாடுகளைப் பிடிப்போர் விரட்டியடிக்கப்பட்டனர். அதன்பின்னர் மாடுகள் காணாமற் போனமை குறைந்து தற்போது மீண்டும் அதிகரித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடப்படும் மாடுகளைப் பற்றை மறைவுகளில் குளங்களை நாடி வரும் வழியில் கண்ணிகளை வைத்துப் பிடித்து வாகனங்களில் இரவு வேளைகளில் ஏற்றிச் செல்லலாம் என்றும் மக்கள் கருதுகின்றனர்.

நேற்று முன்தினம் கோவிலாக்கண்டிப் பகுதி நெல் வயல் பகுதிக்கு மேய்ச்சலுக்காக கொண்டு சென்று விடப்பட்ட அந்தப் பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம், சின்னத்தங்கம், தயாழினி ஆகியோரின் மூன்று பசு மாடுகள் காணாமற் போய்விட்டன என்றும் இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஒ-9)


# தொண்டர்கள் தேவை

நீங்கள் உங்கள் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவரா?
நம்பிக்கையின்மை, கவலை, மனச்சோர்வு போன்றவற்றால் பாதிக்கப்பட்டு, வாழ்க்கையின் எல்லையை நோக்கி நகர்வோருக்கு உணர்வு ரீதியான ஆதரவை வழங்க நீங்கள் தயாரா?, வாரத்தில் ஒரு நாள் மட்டும், நான்கு மணித்தியாலயங்கள் சம்பளம் இன்றிச் சேவையாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும். காலை 9.00 - பி.ப. 1.00 இடையில் அழையுங்கள்;
021 222 8117

**கை கொடுக்கும் நண்பர்கள்**
சிறிலங்கா சுமித்திரயோ யாழ்ப்பாணக் கிளை,
104, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
இது ஒரு அரச/மத சார்பற்ற நிறுவனம்.

# டோஹா-கட்டாரில் ஆண்களுக்கான உடனடி வேலை வாய்ப்பு

| தொழில் | எண்ணிக்கை | சம்பளம் |
|---|---|---|
| டிரைவர் (இலகுரக வாகனம்) | 08 | QR. 1500+200 |
| டிரைவர் (கனரக வாகனம்) | 18 | QR. 1800+200 |
| களஞ்சிய காப்பாளர் | 30 | QR. 1300+200 |
| போக் லிப்ட் | | |
| ரிப்ரிஜிரேட்டர் டெக்னிஷன் | 03 | QR.1800+200 |
| மேயின்டனன்ட் உதவியாளர் | 05 | QR. 800+200 |
| டெக்னிஷன் | 03 | QR.1600+200 |
| A/C ரிப்ரிஜிரேசன் டெக்னிஷன் | | |
| கட்டட, வெயார் ஹவுஸ் | 02 | QR.1400+200 |
| ஓட்டோ பெயின்டர் | 02 | QR.1000+200 |
| தொழிலாளி | 10 | QR. 800+200 |
| சுத்திகரிப்பாளர் | 05 | QR. 800+200 |
| சேல்ஸ் எக்ஸகடிவ் | 10 | QR.1800+200 |
| | | கமிஷன், வாகனம் வழங்கப்படும். |
| மேச்சன்டைசர் | 50 | QR.1300+200 |
| வான் சேல்ஸ்மன் | 40 | QR.1500+200 |
| சேல்ஸ் கோடினேட்டர் | 02 | QR.1300+200 |
| சேல்ஸ் சுப்பவைஸர் | 04 | QR.4000+5000 வரை |
| | | கமிஷன், வாகன கூலி வழங்கப்படும். |

(1QR = 36/=) அனுமதி இலக்கம்: 1636-(AL/1636/0001/14)

**பணிப்பெண்களுக்கு சிங்கப்பூரில் உடனடி வேலைவாய்ப்பு**
சம்பளம் = 400SD - 450 SD
(Rs. 50,000 - Rs.60,000)



(அனுமதி இலக்கம்: AL/1636/0002/14)

**தமிழ் பெண்களுக்கு டுபாய், குவைட் நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களுக்கான வேலைவாய்ப்பு. விரைவில் பயணம்**



சம்பளம் = KD 70 - KD 80
(Rs.31,500 - 36,000 வரை)
அனுமதி இலக்கம்: 1636-(AL/1636/E005/13)
சாப்பாடு, வைத்திய வசதி, தங்குமிட வசதி இலவசம்.
பாஸ்போட் சகிதம் நேரில் வரவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**அபிராட் ஜெனரல் சேர்விசஸ்**
399 - 1/1, காலி வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-04.
தொலைபேசி: 0777 628491, 07777 21440, 2591496

# JAAHED Jaffna Alagappa Academy for Higher Education

## அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி, தமிழ்நாடு இந்தியா

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கை நெறிகள் (UGC/IUA/4)

* தமிழ்மொழியில் உயர் பட்டங்கள்
* குறைந்த செலவு
* படிப்புக்கான கைநூல்கள்
* விரைவான பெறுபேறு
* அங்கீகரிக்கப்பட்ட உயர்பட்டங்கள்
* நிபுணத்துவ விரிவுரையாளர்களின் கற்பித்தல்
* பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

**Degree Courses**
BA (Tamil Lit)
BA (English)
BA (History)
BA (Public Administration)
B.Sc (Psychology)
B.Sc (Mathematics)
B.B.A (Administration)
B.C.A (Computer)
B.B.A (Banking)
B.com

**Master Degrees**
M.com
M.com (Finance)
M.S.C (IT)
M.A (English)
M.A (History)
M.Sc (Maths)
M.A (Education)
M.B.A (Education Management)
M.A (Journalism)
M.A (Sociology)

* **Post Graduate Diploma Programmes**
* **P.G. Dip in Sports Management**
* **M.A Education = M.Ed**
* **2014 December இல் பரீட்சை எழுதலாம்**
  விண்ணப்ப முடிவு திகதி 25.05.2014
* **MBA Education Management**

கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் சேவைக்கால ஆலோசகர்களுக்கு பதவி உயர்வுகளுக்கு உதவும் கற்கைநெறி என ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

* M.Phil in Education கற்கைநெறியை தொடர்வதற்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் தங்கள் பெயர்களை பதிவுசெய்யலாம்.

**மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்**

**Prof.M.Sinnathamby**
(ஓய்வுநிலை பேராசிரியர், அழகப்பா பல்கலைக்கழக அங்கீகரிக்கப்பட்ட கல்வியியல் நிபுணத்துவ வழிகாட்டுநர்)

**Mr.A.Panchalingam**
(Emeritus Principal)

தொடர்புகளுக்கு: **P.BALAMUHUNTHAN**
(Co-ordinator Jaffna Alagappa Academy for Higher Education)
Mobile No : 077 386 7458

இல. 20, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு.
(Smart Kids Building)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# இடம் மாற்றம்

இல. 335 ஏ, பலாலி வீதியில் அமைந்திருந்த 'ஈஸ்வா அச்சகம்' தற்போது172/174, இராமநாதன் வீதிக்கு இடமாற்றப் பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர் களுக்கு அறியத்தருகின்றோம்

# சசி திருமண சேவை

புதிய இல. 25/7, பழைய
இல. 5/1 புகையிரத வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
பதிவு முற்பணம் அறவிடப்படமாட்டாது.
தொடர்பு: 0771517552


# 5 ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர்

**சண்முகராசா நல்லநாதன்**

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் வேலணை மேற்கு, வேலணை)

மலர்வு 17.07.1950

உதிர்வு 18.05.2009

எங்கள் அன்புத் தெய்வமே,

உங்களை இழந்து ஆண்டுகள் 5 கடந்துவிட்ட போதிலும் நீங்கள் வாழ்ந்த காலநினைவுகளில் வழி நடத்தலில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ என்ற நியதி இருந்தாலும் உங்களின் நினைவுகளின் வலிகளினால் கண்ணீர் சிந்து வதை தவிர்க்க முடியவில்லையே எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் ஆத் மாத்தமான செயல்கள் சிந்தனைகளே எங்கள் வாழ்வாக இருக்கும், இருப்போம் என்று எண்ணுவதை தவிர வேறு எதுவும் தோன்ற வில்லையே.

ஒடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளில் வாழும்
மனைவி, மக்கள்,
மருமக்கள் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



திருமதி **இரத்தினாம்பாள் மகாதேவன்**

கிளானை,கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கலக்கட்டாவத்தை, மாத்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினாம்பாள் மகாதேவன் நேற்று (17.05.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சி.மகாதேவனின்(சுகாதார திணைக்களம்,ஓய்வூதியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேல்-இளையகுட்டி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கண்மணி, திருச்சபை, பரசுலிங்கம் மற்றும் வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அரியபாலன்,வனிதா,வாசன் (பிரான்ஸ்), வினோதா (C.R.P.A பிரதேச செயலகம்,தெல்லிப்பழை)ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமநாதன் (M.L.T- கனடா), பாக்கியம்(கனடா),காலஞ்சென்ற வரதன்(ஆசிரியர்)ஆகியோரின் மைத்துனியும், சுகந்தி(ஆசிரியர்,யா/அளவெட்டி அருணாச்சலம் வித்தியாலயம்), இரத்தினசிங்கம், ஜெயந்தி, கலைச்செல்வன் (D.O,சிறுவர் நன்னடத்தை திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகி யோரின் பாசமிகு மாமியும், லெளமிகன், பிரியங்கா, தனுஸ்கரன், டர்ஷிகா, கோவர்த்தனன், பிரணவன், தேனுஜென், தரணீபன், பபிஷயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.05.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆர்.சி.ரி.ஓ ஒழுங்கை, கலக்கட்டாவத்தை,
மாத்தனை,தெல்லிப்பழை.

தகவல்: குடும்பத்தினர்.
021 300 7313

(48171)(5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மையப்படுத்தியே தீர்வு வேண்டும்

## அதனை இந்தியாவின் புதிய பிரதமரிடம் கோருவதற்கு மனோ கணேசன் அழைப்பு

கொழும்பு, மே. 18
இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மையப் புள்ளியாகக் கொண்டே இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வைக் காணுவதற்கு இந்தியாவின் புதிய பிரதமரிடம் தமிழ்த் தலைமைகள் ஒன்றாகக் கோரிக்கை விடவேண்டும் என்று தெரிவித்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், இதற்குப் புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் இடையூறு விளைவிக்கக் கூடாதென்று தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் வாரந்தர அரசியல் ஆய்வுக் கூட்டம் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

புதிய மோடி அரசுடனான உறவை வலுப்படுத்தும் முயற்சிகளை இலங்கை அரசு உடனடியாகத் தொடங்கி விட்டது. உண்மையில் நடைபெற்ற தேர்தலுக்கு முன்னரே இந்த முயற்சிகள் ஆரம்பமாகின. இது வரவேற்க கூடியது தான். அண்டை நாடுகள் இரண்டும் நல்லுறவு கொள்வது இரு நாட்டு மக்களுக்கும் நன்மை தரக்கூடியதாகும். ஆனால், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட கடப்பாடுகளை தவிர்த்துவிட்டு, தனது இனவாத அரசியல் நோக்கங்களை நிறைவேற்றி கொள்ளும் முகமாக மாத்திரம் இந்திய உறவைப் பயன்படுத்த இலங்கை அரசு முயற்சிக்கிறது.

இந்த நிலையில், நரேந்திர மோடி நிர்வாகத்துடன் வறட்டுப் பிடிவாதம் பிடித்து அல்லது வறட்டுச் சமிக்ஞையை காட்டி, இலங்கை அரசின் கபட நோக்கத்தை சுலபமாக்கி, அதன் மூலம் இப்போது இருப்பதையும் இழக்கச் செய்யும் முனைப்புகளில் தவறுதலாக கூடத் தமிழர் தரப்புகள் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள கூடாது. இந்த விடயத்தில் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தன்னிச்சையான இடையூறுகளை விளைவிக்கக்கூடாது.

இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இருநாட்டு ஒப்பந்ததை மையப் புள்ளியாகக் கொண்டு இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காணும்படி புதிய நரேந்திர மோடி அரசை நாம் வலியுறுத்தவேண்டும். 13 ஆம் திருத்தத்தின் அடிப்படையிலான முழுமையான அதிகாரங்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கு வழங்கும் சூழல் உருவாக்கப்படவேண்டும். இதற்கு இந்திய மத்திய அரசின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாகும்.

இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எந்தவித அதிகாரப் பகிர்வும் வழங்கப்படக்கூடாது என்று கூக்குரல் இடும் இனவாதிகளை நாம் ராஜதந்திர ரீதியாகவும், ஜனநாயகரீதியாகவும் தோற்கடிக்கவேண்டும். இவர்கள் அடிக்கின்ற தாளங்களுக்கு நாம் ஆட முடியாது. காத்திரமான செயற்பாட்டுக்கான நேரம் இப்போது வந்து விட்டது.

இந்நோக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னெடுப்புகளை எடுக்குமானால், அதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கும். இந்தச் செயற்பாட்டில் இலங்கை வாழ் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் பெருவாரியான வாக்குகளை பெற்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் - என்று தெரிவித்தார். (த-5)

**மணமகள் தேவை U.K. Citizen**

இந்து கௌரவ குடும்பம் U.K சுப்பர் மார்க்கட்டில் வேலை செய்யும். (PR) 1981.07.30 புனர்பூசம் 2 ஆம் பாதம் 2 செவ்வாய் உடையவர். A/L படித்த அழகான மணமகளை எதிர்பார்க்கின்றார்.
தொடர்பு. U.K 00447405647455

**பணியாளர் தேவை**

புத்தக விற்பனை நிலையத்துக்கு பணியாளர் தேவை.
வயது -25 - 40
சுயவிவரக்கோவையுடன் மட்டும் நேரில் வரவும்.
காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை
Book Lab இல.22, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி. தொ.பே.: 0771285749

**வீடு வாடகைக்கு உண்டு**

நல்லூர் அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
0772385894

## தந்தையை இழந்த மாணவருக்கு முள்ளிவாய்க்காலில் உதவிகள்



உதவிப் பொருள்களை வழங்கும் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன்

யாழ்ப்பாணம், மே. 18
போரில் தந்தையரை இழந்த மாணவர்கள் 21 பேருக்கு முள்ளிவாய்க்கால் மேற்கில் வைத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேற்று உதவிப் பொருள்கள் வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வுகளை இடைநிறுத்துமாறு இராணுவத்தினர் தடுத்தபோதும் அதையும் மீறி நிகழ்வு நடைபெற்றுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடந்த 11 ஆம் திகதியிலிருந்து அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்வுகளை வடக்கில் நடத்துவதற்கு படையினர் தடை விதித்துள்ளனர். அதையும் மீறி நடத்துபவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் முள்ளிவாய்க்கால் மேற்கில், இறுதிக் கட்டப் போரில் தந்தையரை இழந்த 21 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அந்தக் குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை அந்தப் பகுதியிலுள்ள முருகன் கோயிலடியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அக வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானவுடனேயே மோட்டார் சைக்கிளில் குறித்த பகுதிக்கு வந்த படையினர், நிகழ்வை நிறுத்துமாறு கோரியுள்ளனர். என்ன நிகழ்வாக இருந்தாலும், இந்த வாரம் அதனைச் செய்யக் கூடாதென்று தெரிவித்துள்ளனர். இதனையும் மீறி நிகழ்வு நடைபெற்றதால், மேலும் பல படையினர் அங்கு குவிக்கப்பட்டனர்.

அகவணக்கம் செலுத்தியமை தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினரிடம் விசாரணை நடத்தினர். நிகழ்வை நிறுத்துமாறு படையினர் கோரினர்.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர், நிகழ்வு நிறுத்தப்பட்டால் வீடு வீடாக இந்தக் கற்றல் உபகரணங்களைக் கொண்டு சென்று கொடுப்பேன் என்று தெரிவித்துள்ளார். இதனையடுத்து, படையினர் நிகழ்வை நடத்த அனுமதித்துள்ளனர்.

இருப்பினும் நிகழ்வு நடந்த இடத்தைச் சூழப் படையினரும், புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 19.04.2014
இறைபதமடைந்த எமது குலவிளக்கு

**அமரர் செல்வி**
**ஜனனி சிங்கராசா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (17.05.2014) சனிக்கிழமை 9.00 மணியவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (19.05.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

*வராகி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு*
குடும்பத்தினர். (48217)

**தவறிவிட்டது**

மானிப்பாயைச் சேர்ந்த கந்தசாமி ராஜ்குமார் ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அ.அட்டை (841384466V) காப்புறுதிப் பத்திரம் 15.05.2014 அன்று யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறி விட்டது. கண்டவர்கள் பின்வரும் T.P மூலம் தொடர்பு கொள்ளவும். T.P.: 0770198196, 0217916010 சன்மா[illegible] வழங்கப்படும். (48223)

**வேலைக்கு ஆள் தேவை**

போட்டோக்கொப்பி பழகிய அல்லது பழக விரும்பும் பெண்பிள்ளை தேவை.
தொடர்பு: 0772096310 (48222)

**தேவை**

சகல விதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.
T.P: 077 77 22215 (48220)

**விற்பனைக்கு**

7 மாதம் நிரம்பிய Doper Man Cross இன பெண் நாய் ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 8052520 (48221)

**வீடு வாடகைக்கு**

சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம், சமுர்த்தி வங்கிக்கு மிக அருகாமையில் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
0766695678, 0778782804, 0776176413

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

German Shepherd நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 0778185543

**இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு**



முதல் தரமான
**BAIHARA**
இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு.
ஒரு குஞ்சின் விலை ரூபா 85/= மற்றும் CIC குஞ்சுகளும் விற்பனைக்குண்டு
[illegible] தோறும்
[illegible]
ஓடருக்கு பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: 077 995 9382 (45550)

## மரண அறிவித்தல்



### வைரவி செல்லையா

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் மணியந்தோட்டம், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாயில் வசித்து வந்தவருமாகிய வைரவி செல்லையா கடந்த (15.05.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா திரேசம்மாவின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புனித சூசையப்பர் சேமக்காலை, கோப்பாயில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆசாரி லேன், கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (48202)
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தினி அருளானந்தம்



அரியாலை, நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தி என்று அன்பாக அழைக்கப்பட்ட திருமதி வசந்தினி அருளானந்தம் நேற்று (17.05.2014) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேயன் - சற்குணவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதி மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் அருளானந்தத்தின் அன்பு மனைவியும் லோகேஸ்வரி (லண்டன்), சோமாஸ் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (சாந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சுமதி (பிரான்ஸ்), யோகலிங்கம், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்வஞானேஸ்வரி, கந்தேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் குணரத்தினம், பாக்கியவதி ஆகியோரின் மருமகளும் யாழினி, தர்சினி ஆகியோரின் சிறிய தாயாரும் கிரிசாந்தியின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 404, நாவலர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

404, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (48229)
தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலராக கடமையாற்றும் திருமதி வினோதா கலைச்செல்வன் அவர்களின் தாயார்
**திருமதி இரத்தினாம்பாள் மகாதேவன்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

பிரதேச செயலாளரும் சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்
*பிரதேச செயலகம் தெல்லிப்பழை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கும் தடை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் விசனம்

முல்லைத்தீவு,மே 18
உடையார்கட்டு பிரதேசத்தில் இனங்காணப்பட்ட, கண் மற்றும் பார்வைக்கோளாறுகள், குறைபாடுடையவர்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்குவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியானது, இராணுவம் மற்றும் பொலிஸின் காட்டு மிராண்டித் தனம் காரணமாக ஒத்தி வைக்கப்படுவதாக வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

குறித்த நிகழ்ச்சியானது, சாதாரண சமூக சுகாதார மேம்பாடு சம்பந்தமான நிகழ்ச்சியாக இருந்தபோதிலும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் என்பதால், அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மே 18 என்றதும் சிங்கள பௌத்த பேரினவாதிகள் கிலி பிடித்துத் தொடை நடுங்குவது ஏனோ என்று புரியவில்லை.

இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதற்கு உடையார் கட்டு மகாவித்தியாலய மண்டபத்தைப் பயன்படுத்துவதற்கு வடமாகாண கல்வி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் முறையாக அனுமதி பெறப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

குறித்த ஏற்பாட்டை நிறுத்திப் பிறிதொரு நாளில் நடத்துமாறு அப்பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிவலியுறுத்தினார். முறையான அனுமதிகள் பெறப்பட்டுள்ளன என்று எம்மால் தெரிவிக்கப்பட்டதற்கு இதனை நடத்தப் பாதுகாப்பு அமைச்சு அனுமதிக்காது என்ற மிரட்டலே பதிலாகக் கூறப்பட்டது.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட பொலிஸார், நிகழ்ச்சிகான அனுமதியை நிறுத்துமாறு வற்புறுத்திக் கோரியுள்ளதோடு, பாடசாலை அதிபரையும் கடுமையாக மிரட்டியுள்ளனர். வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் வடமாகாண கல்வி பணிப்பாளர் ஆகியோரின் எழுத்து மூலமான அனுமதியிருந்தும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் வாய்ச்சொல்லுக்கு முல்லைத்தீவு வலயக் கல்வி பணிப்பாளர் கட்டுப்பட்டு அனுமதி மறுத்ததாலேயே குறித்த நிகழ்ச்சி தடைப்பட்டுள்ளது.

இதுபோதாதென்று, நாளை (இன்று) நடைபெறவிருந்த நிகழ்ச்சிக்கு இன்றே (நேற்று) உடையார்கட்டு மகாவித்தியாலயத்துக்கு முன்பாகவும், மகாவித்தியாலயச் சூழலிலுள்ள வீதிகள் முழுவதும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு நிகழ்ச்சிக்கு மக்களை வரவிடாமல் தடுப்பதற்குக் காலையிலிருந்து தடைகள் இடப்பட்டுள்ளன.

எமது மக்களுக்கான சாதாரண ஒரு மருத்துவப் பணியைக் கூட செய்ய விடாமல் இலங்கைப் பேரினவாத அரசு தடுப்பதானது, அதன் இன வெறியினதும், அதிகார மமதையினதும் வெளிப்பாடாகும்.

இறுதிப்போரில் கொல்லப்பட்ட எமது உறவுகளை நினைவு கூரும் மே 18 என்ற புனித நாள் தனிச்சிங்கள ஆட்சியாளர்களுக்குப் பாகற்காய் போல கசக்கிறது. இந்தக் கசப்பு மனதுடன் ஒரு நாடு ஒற்றுமையான வாழ்வு என்றெல்லாம் இந்த அரசு பேசுவது வெறும் பசப்பு வார்த்தைகளேயாகும்- என்று கூறியுள்ளார். (த-402)

### முற்றவெளியில் சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 18
யாழ்.முற்றவெளிப் பிரதேசத்தில் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் கடந்த இரண்டு நாள்களாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

வெசாக் பண்டிகைக்கான அலங்கார வெளிச்சக்கூடுகள் மற்றும் நிகழ்வுகளைப் பார்வையிட வருகை தருவோரின் சைக்கிள்களே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன.

சன நெரிசலில் முற்றவெளி தனியார் பஸ் தரிப்பு வளாகத்திலேயே சைக்கிள்கள் மற்றும் வாகனங்களை மக்கள் நிறுத்திவிட்டுவெசாக்நிகழ்வைப் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

வாகனத் தரிப்பிடத்துக்கெனப் பாதுகாப்பு வசதி அமைக்கப் படாமையால் மக்களின் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை பூட்டிய நிலையில் இருந்த புதிய சைக்கிள் ஒன்று திருடர்களால் களவாடப்பட்டுள்ளது. (த-17)



ரயில் பாதை அருகே சடலம்

## ரயில் மோதி முதியவர் சாவு

கிளிநொச்சி,மே 18
முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் ரயிலில் மோதுண்டு முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் திருமுறிகண்டி செல்வபுரம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. ரயில் கடவைப் பகுதியில் இவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

திருமுறிகண்டியைச் சேர்ந்த கந்தசாமி மாரியப்பன் (வயது-72) என்னும் முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். முதியவரின் உயிரிழப்பு தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (த-18-55-426)

# குரங்குகளின் அட்டகாசத்தை தென்மராட்சியில் கட்டுப்படுத்துக

## மக்கள் ஒருமித்த கோரிக்கை

தென்மராட்சி, மே 18
எமது வட்டாரத்தை அபிவிருத்தி செய்வதை இடைநிறுத்தி எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் குரங்குகளை இல்லாதொழிக்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.

இவ்வாறு சாவகச்சேரி நகர சபையின் முதலாம் வட்டார (மீசாலை மேற்கு), மக்கள் நகர சபைத் தலைவரிடமும், மாகாண சபை உறுப்பினரிடமும் கோரிக்கை விடுத்தனர்.

சாவகச்சேரி நகர சபையினர் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் தேவைகளை அடையாளப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை மீசாலை விக் னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

நகர சபை உறுப்பினர் அ.பாலமயூரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோரிடம் குரங்குகளை கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரியுள்ளனர்.

எமது பிரிவில் அபிவிருத்தித் தேவைகள் பல காணப்பட்டாலும் எமக்கு அத்தியாவசிய தேவையாகக் காணப்படுவது எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் குரங்குகளை இல்லாமல் செய்வதே எனக் கூட்டத்தில் கலந்து கொண்டோரில் 200 க்கும் மேற்பட்டோர் ஒட்டு மொத்தமாகக் கருத்து தெரிவித்தனர்.


இதற்குப் பதிலளித்த நகர சபைத் தலைவர், நகர சபை எல்லைக்குள் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அனைத்து வட்டாரங்களிலும் குரங்குகளினால் ஏற்படுத்தப்படும் பாதிப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்தப் பகுதியிலிருந்து குரங்குகளை அப்புறப்படுத்துவது தொடர்பாக பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம். கூடிய விரைவில் குரங்குகளைக் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

> இந்தப் பகுதியிலிருந்து குரங்குகளை அப்புறப்படுத்துவது தொடர்பாக பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம். கூடிய விரைவில் குரங்குகளைக் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

அதன் பின்னர் பின்வரும் அபிவிருத்தி தேவைகள் உள்ளதாக பொதுமக்கள் முன்னுரிமைப்படுத்தி தெரிவித்தனர்.

மீசாலை பொதுநூலகம் மற்றும் மீசாலை வயற்கரை சன சமூக நிலையம் ஆகியவற்றின் அருகில் முன்பள்ளிக் கட்டடங்கள் அமைத்தல், மீசாலை மேற்கு பருத்தித்துறை முதலாம் வீதிக்கு மின் இணைப்பு பொருத்துதல், பொருத்தமான இடங்களில் வீதி விளக்கு பொருத்துதல், மீசாலை வயற்கரையில் உள்ள பொதுக் கிணற்றைப் புனரமைப்புச் செய்து பொது மக்களின் பாவனைக்கு விடல் போன்ற விடயங்கள் மக்களால் இனங்காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## பிரான்பற்றில் நேற்று ஆடுகள் வெட்டிச் சரிப்பு



வெட்டிச் சரிக்கப்பட்ட ஆடு ஒன்று

வலி.வடக்கு, மே 18
பண்டத்தரிப்பு பிரான்பற்று கட்டுவரை புளியடி அம்மன் ஆலயத்தில் நேற்றுச் சனிக்கிழமை காலையில் ஆட்டுக் கடாக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டன.

நேற்றுக் காலையில் ஆலயத்தில் இடம்பெற்ற பொங்கல் படையல்களைத் தொடர்ந்து ஆட்டுக் கடாக்களை வெட்டும் நிக்ழ்வும் இடம்பெற்றது.

நேற்று ஆலயத்தில் சுமார் 300 க்கும் மேற்பட்ட கடாக்கள் வெட்டப்பட்டுள்ளதுடன் 75 க்கும் மேற்பட்ட சேவல்களும் வெட்டப்பட்டன.

ஆலயத்தின் கிராமம் உட்பட சுற்றாடல் கிராமங்கள் பலவற்றில் இருந்தும் கடாக்கள் உழவு இயந்திரங்கள், லான்ட்மாஸ்ரர்கள், வாகனங்கள் என்பவற்றில் ஏற்றப்பட்டு மாலைகள் மரியாதைகளுடன் பாண்ட் வாத்தியம் முன்னே முழங்க ஊர்வலமாக ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டுப் பலியிடப்பட்டன.

பெண்கள், ஆண்கள், சிறுவர்கள், சிறுமியர்கள், முதியோர்கள் என வேறுபாடுகள் இன்றி 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டார்கள். (த-86)

## சிற்றூழியர் தரத்தை சேர்ந்தோருக்கு ஓய்வூதியம் கிடைப்பதில் கால தாமதம்

யாழ்ப்பாணம், மே 18
ஓய்வுபெறும் சிற்றூழியர் தரத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் கிடைப்பதில் கால தாமதமேற்படுவதால் ஓய்வு பெற்ற பலர் ஒரு வருடமாக அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச பணியாளர் ஓய்வு பெற்ற அடுத்த மாதமே ஓய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஓய்வூதியத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டும் சில சிற்றூழியர்களுக்கு மாதங்கள் பல கடந்தும் ஓய்வூதியம் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தந்த திணைக்கள அலுவலகங்களில் ஓய்வூதியம் தொடர்பான பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களால் ஓய்வு பெறுபவர்களின் விண்ணப்பங்கள் தயாரித்து அனுப்பப்படுகின்ற போதிலும் பலரது விண்ணப்பங்களில் குறைபாடுகள் உள்ளதாக ஓய்வூதியத் திணைக்களத்தால் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரியைச் சேர்ந்த ஓய்வூதியர் ஒருவரின் விண்ணப்பம் பத்து தடவைகள் ஓய்வூதியத் திணைக்களத்தால் குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டித் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

> சாவகச்சேரியைச் சேர்ந்த ஓய்வூதியர் ஒருவரின் விண் ணப்பம் பத்து தடவைகள் ஓய்வூதியத் திணைக்களத்தால் குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டித் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

அந்த ஊழியர் ஓய்வு பெற்று 11 மாதங்கள் கடந்தும் இதுவரை ஓய்வூதியம் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கும் வரை தற்காலிக ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஓய்வூதியத்தைத் துரிதமாக வழங்குவதற்காக அரசினால் நிறுத்தப்பட்டதால் தற்காலிக ஓய்வூதியம் கிடைக்காத நிலையில் குடும்ப ஜீவனோபாயத்தை நடத்துவதில் அவர்கள் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் தெரிவித்தனர்.

ஓய்வு பெறுவோர் தொடர்பில உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-9)

### மன்னாரில் இளைஞன் சடலமாக மீட்பு

மன்னார் பேசாலை கரிசல் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த ஜெமிஸ் சர்பபீன் (வயது- 21) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் வீட்டில் இருந்து வியாழக்கிழமை புறப்பட்டுச் சென்றார் எனவும் அவர் இரண்டு நாள்களாகியும் வீடு திரும்பாத நிலையில் தேடிய போதே அவர் மரத்தில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டார் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர். சம்பவம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து பொலிஸார் அங்கு வந்து சடலத்தை மீட்டனர். தொடர்ந்து மன்னார் மாவட்ட பதில் நீதிவான் இம்மானுவேல் கயஸ் சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்டபின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திர சாதனையை தவறவிட்டார் மோடி

புதுடில்லி,மே 18

வதோதரா தொகுதியில் அபார வெற்றி பெற்ற பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி 22,374 வாக்குகளில் தேர்தல் சாதனையைத் தவறவிட்டுள்ளார்.

மக்களவைத் தேர்தல் சரித்திரத்தில், ராம்விலாஸ் பஸ்வான், சி.பி.எம் கட்சியின் அனில் பாசுவுக்கு அடுத்தபடியாக மோடி அதிகபட்ச வாக்குகள் பெற்று வெற்றி பெற்ற வேட்பாளராகத் திகழ்கிறார்.

5 லட்சம் வாக்குகளுக்கும் மேல் பெற்று வென்ற 3ஆவது வேட்பாளர் நரேந்திர மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக சி.பி.எம். வேட்பாளர் அனில் பாசு மேற்குவங்கத்தின் ஆரம்பாக் தொகுதியில் 2004ஆம் ஆண்டு தேர்தலில் 5,92,502 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதே இந்தியச் சாதனையாக இருந்து வருகிறது.

இந்தத் தேர்தலில் நரேந்திர மோடி வதோதராவில் 5,70,128 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். ஆனால் சாதனையை முறியடிக்கத் தவறிவிட்டார். இவருக்கும் அனில் பாசுவுக்கும் இடையிலான வித்தியாசம் சுமார் 22,374 வாக்குகள்.

ஆகவே 1989ஆம் ஆண்டு தேர்தலில் பஸ்வான், 2004ஆம் ஆண்டு தேர்தலில் அவரை முறியடித்த சி.பி.எம்மின் அனில் பாசு, தற்போது மோடி அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளராகத் திகழ்கிறார். (த)

# கூட்டணி ஆட்சியே மத்தியில் அமையும்

## நிர்மலா சீதாராமன் தெரிவிப்பு

புதுடில்லி,மே 17

நடந்து முடிந்திருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்குத் தனியாகவே அறுதிப் பெரும்பான்மை கிடைத்தாலும் நரேந்திர மோடி தலைமையில் அமையவிருக்கும் ஆட்சியில் தேர்தலுக்கு முன்னரே அமைத்த பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாக, தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாக அதை அமைக்கவே பா.ஜ.க தன்னால் இயன்ற அளவு முயலும் என்றும் பா.ஜ.கவின் பேச்சாளர் நிர்மலா சீதாராமன் பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமையுமா, அ.தி.மு.கவை பா.ஜ.க கூட்டணி அரசில் சேர்த்துக்கொள்வீர்களா என்கிற கேள்விக்கு, அது பற்றி இப்போதைக்கு ஒன்றும் கூறமுடியாது என்றும் அப்படி ஒரு சூழல் உருவானால், அப்போது அதுகுறித்து முடிவெடுக்கப்படும் என்றும், இன்றைய நிலையில் பா.ஜ.கவுடன் தேர்தலுக்கு முன்பே கூட்டணி அமைத்தவர்களை அரவணைத்துச் செல்வதிலேயே பா.ஜ.கவின் முதன்மையான கவனம் இருக்கும் என்றும் அவர் கூறினார். (த)

# மீண்டும் எழுவோம்; காங்கிரஸ் அறிவிப்பு

புதுடில்லி,மே 18

நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்துள்ள காங்கிரஸ் கட்சி தனது தவறுகளைத் திருத்திக் கொண்டு மீண்டும் எழுவோம் என அறிவித்துள்ளது.

இந்தத் தோல்வி வருத்தத்தை அளிக்கக் கூடியது என்றும் அதற்கான அடிப்படைக் காரணங்கள் ஆராயப்படும் எனவும் அக்கட்சியின் பேச்சாளர் டாம் வடக்கன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மோடிக்கே அதிக முக்கியத்தும் அளித்தன என்றும் பெரு நிறுவனங்களின் ஆதரவும் அவருக்கு இருந்தன என்றும் டாம் வடக்கன் கூறுகிறார்.

காங்கிரஸ் கட்சி தமது சாதனைகளை மக்களிடம் சரியாக எடுத்துச் செல்லவில்லை என்றும் அவர் கூறுகிறார்.

இதனிடையே வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மிசோரம், மேகாலயா போன்ற மாநிலங்களில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க வெற்றியைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

ஹிமாச்சல பிரதேசத்தில் முன்னாள் முதல்வர் சாந்த குமார், காங்ரா தொகுதியில் பா.ஜ.க வேட்பாளராக வெற்றி பெற்றுள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் நிதின் கட்கரி நாக்பூர் தொகுதியிலும், பாராமதி தொகுதியில் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரும் மத்திய அமைச்சர் சரத் பவாரின் மகளுமான சுப்ரியா சூலேயும் வென்றுள்ளனர்.

ஆம் ஆத்மி கட்சியின் சார்பில் மும்பை தெற்கில் போட்டியிட்ட முன்னாள் வங்கி உயரதிகாரியான மீரா சன்யால், வடகிழக்கு மும்பை தொகுதியில் போட்டியிட்ட சுற்றுச்சூழல் செயற்பாட்டாளருமான மேதா பட்கர் ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர். (பி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பல இடங்களிலும்

ளாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு இந்த ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது. பொது இடங்களில் பொதுத் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டால் அவ்வாறு செய்பவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவர் என்று இராணுவத்தினர் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலும் வவுனியா மாவட்டத்தில் சிவில் குழுக்கள் ஏற்பாடு செய்துள்ள நினைவேந்தல் நிகழ்வுகள் பிரத்தியேக இடம் ஒன்றில் இடம்பெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபையில் மு.ப 11 மணிக்குப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் மாலை 6.30 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வுகள் சுடரேற்றலுடன் இடம்பெறவுள்ளன. வேறு பல இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள், தடைகளையும் மீறி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, பொதுமக்களை இன்று மாலை 6.30 மணிக்கு வீடுகளில் தீபமேற்றி நினைவேந்தலை அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. வீட்டில் அஞ்சலி செலுத்த முடியாதவர்கள், வசதியில்லாதவர்கள் இன்று கீரிமலைக்கு வந்து அஞ்சலி செலுத்துமாறு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:- உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கீரிமலை சிவன் கோயிலில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அங்கு சென்று வரக்கூடியதாக ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே அனைவரையும் அங்கு சென்று பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்று கூறியுள்ளது.

இதேவேளை,

முள்ளிவாய்க்காலில் மூச்சடங்கிப் போன உறவுகளுக்காக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் பிதிர்க்கடன் செலுத்தும் நிகழ்வு இன்று காலை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இன - மதபேதமின்றி சகலரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் நினைவாகப் பிதிர்கடன் நிறைவேற்றுவதும், அந்தணர்களுக்கு தானம் வழங்குவதும் இந்துக்களின் மரபாகும். அதன்டிப்படையிலேயே இந்த நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக, கீரிமலையில் சிவாச்சாரியார்கள் தலைமையில் யாகம் இடம்பெறவுள்ளது. அத்துடன் உயிரிழந்தவர்கள் தமது பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்கும், அந்தணர்களுக்கு வழங்க வேண்டிய தானமும் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும்.

அத்துடன் ஆயிரம் பேருக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது. இதில் எந்த அரசியல் கலப்பும் இல்லை என்று தெரிவித்துள்ள ஏற்பாட்டாளர்கள் சகலரையும் பங்குபெறுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை நேற்று மாலை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்ற படையினர் பிரார்த்தனையை நடத்தக் கூடாது என்று ஆலய பிரதம குருக்களிடம் கோரியுள்ளனர். ஆயினும் அதற்கு மறுப்புத் தெரிவித்த குருக்கள், இது இந்துக்களின் ஆகமக் கிரியை என்பதால் அதனை நிறுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

இதனையடுத்து நேற்று மாலை முதல் ஆலயச் சுற்றாடலில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஆலயங்களிலும் இன்று முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தோருக்காக விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. குறிப்பாகக் கத்தோலிக்க ஆலயங்களில் இன்று காலை நடைபெறும் ஞாயிறு ஆராதனையின்போது உயிரிழந்தோருக்காக விசேடமாக செபிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்து ஆலயங்களிலும் விசேட பூசைகள் இன்று இடம்பெறவுள்ளன. (த-4-5)

### பிரபாகரனுக்கு

கடித்தற்காகவே கொண்டாடப்படுகின்றது. மாறாக ஒரு மக்கள் பிரிவினரை மற்றுமொரு மக்கள் பிரிவினர் தோற்கடித்தார்கள் என்று அதற்கு அர்த்தமல்ல. பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததன் மூலமாக வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு நல்ல திட்டங்கள் கிடைத்துள்ளன.

வடக்கு, கிழக்கு மக்களின் வெற்றியைத் தான் நாங்கள் கொண்டாடுகின்றோம். நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினருக்கும் அழைப்பிதழ்கள் கொடுத்துள்ளோம். இதன் காரணமாக அரசியல் ரீதியில் கட்சி அடிப்படையில் அழைப்பிதழ் கொடுப்பதில்லை. அப்படியான செயற்பாடுகளுக்கு இடமில்லை.

அழைப்பிதழ் பத்திரம் என்பது பிடியாணை அல்ல. அழைப்பது எமது கடமை. வருவது அவர்களது பொறுப்பு. பயங்கரவாதிகளைக் கொண்டாடுவதற்கு இடமில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரபாகரனின் உறவினர்கள் இருந்தால் அவர்களது வீட்டில் தானம் கொடுக்க முடியும். அது எங்களது பிரச்சினை இல்லை. அது உறவினர்களின் கொண்டாட்டம். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியை ஏற்றி கொண்டாடுவதற்கு இடமில்லை. அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றால் நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் பிரிவினர் செயற்படுவார்கள் - என்றார். (த-5)

### போர்

வெளிநாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலானோர் இந்த வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் பங்கெடுக்கின்றனர்.

முதல்தர அணிவகுப்பு மரியாதையில் 335 இராணுவத்தினரும், 124 கடற்படையினரும், 62 விமானப் படையினரும், 41 பொலிஸாரும், மேலும் 25 சிவில் பாதுகாப்பு படையினரும் பங்கெடுக்கவுள்ளனர். இதற்கு மேலதிகமாக 3 ஆயிரத்து 534 இராணுவத்தினரும், ஆயிரத்து 189 கடற்படையினரும், ஆயிரத்து நூறு விமானப் படையினரும், 643 பொலிஸாரும், 578 சிவில் பாதுகாப்பு படையினரும் அணிவகுப்பில் பங்கெடுக்கவுள்ளனர்.

வாகனங்களுடனான அணிவகுப்பில் 116 இராணுவ வாகனங்களும், 40 கடற்படைக் கப்பல்களும், 35 விமானங்களும் பங்கெடுக்கவுள்ளன. (த-5)

### உயிர் நீத்த

உறிஞ்சினாலும் பாலில்லை என்பதை அறியாத பிஞ்சுக் கொழுந்துகளுக்கான நினைவு கூரல். உண்டுறங்கிய வீடிழந்து நின்று சிரித்த முற்றமிழந்து கண்டு கழித்த உறவிழந்து எல்லாமும் எல்லாமே இழப்பதற்கு இனியேது என்ற நிலையிலே தம்மையும் பறிகொடுத்த அப்பாவி மக்களுக்கான நினைவு கூரல். பிறகு எதற்காக இதில் தேவையில்லாத சாயங்களைப் பூசுகிறீர்கள். முழு உலகுமே கண்வெட்டாமல் பார்த்திருக்க, எண்ணற்ற மனித ஆன்மாக்கள் காவு கொள்ளப்பட்ட சிவப்புக்கறை படிந்த மே மாதம் என்பது தமிழ் மக்களினைப் பொறுத்தவரை உயிரோடு ஒன்றித்த துயரம்மிக்க நாளாகும்.

மறைந்த மானுடன் நினைவு கூரப்படுவது சக மானுடனின் மனிதப் பண்பாகும். இந்தவிதியை மீறுபவன் பந்தம், பாசம் என்ற பிணைப்பிலிருந்து மீண்டவனாய் மனிதம் என்ற கட்டுக் கோப்பிலிருந்து ஒதுங்கப்பட்டவனாகவே இருக்கமுடியும். தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பதுபோல் இறந்தவரைப் பிரிந்தவர் அழுவதற்குத் தடை விதிப்பினும் அவர்தம் உயிரான்மா அழுதுகொண்டேயிருக்கும். அதனைத் தடுப்பது யாராலும் முடியாததொன்றே. இலங்கையிலும் முள்ளிவாய்க்கால் மண்ணிலே அப்பாவித் தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் காவுகொள்ளப்பட்ட நாள்கள் என்பது அவர்களின் இறப்புநாள்களே. இறந்தநாளை ஆண்டுதோறும் நினைவு கூருவது தமிழ் மக்களின் பாரம்பரியம் மட்டுமல்ல உலகில் மனிதன் என்ற அடையாளமுடைய அனைத்து மக்களினதும் வழமையாகும். இந்தவழமைக்குத்தான் இலங்கையில் சிறைப்பூட்டு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைக் குரலாகவும் உலகத் தமிழ் மக்களின் உன்னதப் பேசுபொருளாகவுமே காலாதிகாலமாக விளங்குகின்றது. தமிழ் மக்கள் சார்பில் எந்தவொரு மாற்றம் நிகழினும் சர்வதேசம் காதுகொடுத்துக் கேட்கும் அபிப்பிராயத் தளமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே. ஆசிரியர் சங்கமாயினும், மாணவர் ஒன்றியமாயினும் ஊழியர் சங்கமாயினும் அனைவரதும் ஒருமித்த பார்வை என்பது தமிழ் மக்களினைப் பொறுத்தவரை கிளையாறுகள் சேர்ந்த தலையாறு தான்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்பது எப்பொழுதுமே எம் மக்களின் குரலாகவே ஒலித்துக் கொண்டிருக்கும். இந்தக் குரலின் தொனிப்பிலே யாருக்குமே கெடுதல் நேராது. நாம் உலகத்தை நேசிக்கக் கற்றவர்கள். மானுடம் தழைக்கவேண்டும் என விரும்புபவர்கள். 'ஜனநாயகத்தில் நாம் எல்லோரும் மன்னர்களே' எனப் பேரறிஞர் அண்ணா கூறியதைப் போல் இனவொற்றுமையை மதிப்பவர்கள். நாகரிகம் மிக்க கல்விப் புலம்கொண்ட எம்மீது நீங்கள் கூறுகின்ற அந்த பயங்கரவாதச் சேற்றினைப் பூசாதீர்கள் - என்றுள்ளது. (த-4)

### இலங்கையுடன்

கிறது. இலங்கை - இந்திய உறவு சுமுகமாக இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் என்று பதிவிட்டுள்ளார். (த)

### இலங்கை

பாதுகாப்பு அமைச்சின் சீன ஜெனரல் சூ கியூலியாங்கு[illegible] கும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக் ஷவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போதே இந்த உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட ஜெனரல் சூ கியூயிலியாங், எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் பொதுவான [illegible] உள்ள சவால்களை [illegible] கொள்வதற்குச் சீனாவும் [illegible] இலங்கைக்கும் இடையில் உள்ள நீண்ட வரலாற்று [illegible] யான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தியப் பெருங் கடலில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் இலங்கை அமைந்துள்ளது. இதுவே இலங்கை, சில சவால்களை எதிர்கொள்வதற்கு காரணமாயுள்ளது. குறிப்பாக மனித உரிமைகள் நிலை என்பதைவிட மேலைத்தேய நாடுகளின் மூலோபாய [illegible] சனைகளே உண்மையான காரணம் என்று கூறியுள்ளார். ஒவ்வொரு நாடுகளும் தனித்துவமானவை. அவற்றின் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் உள்நாட்டிலேயே தீர்வு காணப்படவேண்டுமே தவிர, வெளியில் இருந்து தீர்வு திணிக்கப்படக்கூடாது. பொருளாதார அபிவிருத்தி, பாதுகாப்பு ஒருமைப்பாடு, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பிற விடயங்களில் முழுமையான ஒத்துழைப்பை சீனா வழங்கும் - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்டக் கபடிப் போட்டியில் தெல்லிப்பழை, பருத்தித்துறை சம்பியன்



கபடி இறுதியாட்டத்தில் பெண்கள் அணி



கபடி இறுதியாட்டத்தில் ஆண்கள் அணி

யாழ்ப்பாணம், மே 18

யாழ்.மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களின் ஆண், பெண் இருபாலாருக்குமான மாவட்ட மட்டக் கபடிப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழகசம்மேளன அணியை எதிர்த்து யாழ். பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி மோதிக் கொண்டது.

இதில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 20:9 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர்கழகசம்மேளன அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி மோதிக் கொண்டது.

இதில் பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி 50:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன்ஆனது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், மே 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 9பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த - 23)

## உருத்திரபுரம் நீலம் வென்றது



யாழ்ப்பாணம், மே 18

கிளிநொச்சி உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் கந்தையா முருகேசு, முருகேசு முருகவேல் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடத்திய 9 பேர் பங்கு பற்றிய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் பச்சை அணியை எதிர்த்து உருத்திரபுரம் நீல அணி மோதிக்கொண்டது.

இதில் உருத்திரபுரம் நீல அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (த-23)

## யாழ்.பல்கலை - அரியாலை ஐக்கியம் வலைப்பந்து இறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், மே 18

அரியாலை சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்றன.

முதல் அரையிறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழகஅணியை எதிர்த்து அராலி களுவத்துறை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 23:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 28:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த -23)

## கனகராயன்குளம் ம.வி. மாகாண மட்டப் போட்டிக்கு

மாங்குளம், மே 18

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுக்களில் கனகராயன்குளம் 19 வயது பெண்கள் அணி 5 போட்டிகளில் வெற்றி பெற்று வடமாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

கனகராயன்குளம் மகா வித்தியாலய 19 வயதுப் பெண்கள் அணி வவுனியா மாவட்ட பெரு விளையாட்டுக்களில் உதைபந்து, வலைப்பந்து போட்டிகளில் முதலாம் இடத்தையும், எறிபந்துப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், கிரிக்கெட், கரப்பந்து போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்று வட மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. (த-422)

## வெற்றி பெற்ற அணிகள்

**புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.**

யாழ்ப்பாணம், மே 18

தீவக உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணிக்கும் மண்டைதீவு சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த- 23)

## பருத்தித்துறை, தெல்லிப்பழை அணிகள் கபடியில் வெற்றி

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண் - பெண் இருபாலாருக்குமான கபடிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

இதில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 57:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதிக் கொண்டன.

இதில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 42:36 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (த-23)

# உதயன் புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்று கணினிக் கற்கை நெறியை தொடரவுள்ளோர்

யாழ்ப்பாணம், மே 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட புதிர் போட்டியில் பங்குபற்றி கணினி கற்கை நெறியைத் தொடர்வதற்கு 50 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்கள் பிரதான வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள உதயன் பணிமனையில் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் விவரம் வருமாறு :-

சி.ஜெயமஞ்சுளா (கண்டிவீதி, கரவெட்டி மேற்கு), த.அகிலன் (அத்தாய், ரா.தன்சிகா (அல்வாய் தெற்கு), வி.கௌசிராஞ்சலி(ராணி மஹால் அல்வாய் தெற்கு), ம.பிரநிதுஷன், ப்.மயூரன் (அல்வாய் வடக்கு), பி.தனுஸ் (தும்பளை), விஜயசோதி (அல்வாய், மனோகரா), நா.திருபரன் (கரணவாய் வடக்கு), வி.மிதுலாகினி (தும்பளை மேற்கு), கு.ராகுலன் (குரும்பைகட்டி, புலோலி), அ.டில்க்குஷா (சக்கோட்டை), ச.சாரங்கா (நெல்லியடி மத்திய கல்லூரி), பூ.ஆதிகன் (நெல்லியடி மத்திய கல்லூரி), கி.ரவீந்திரன் (ஈஸ்வரன் றேடர்ஸ் பருத்தித்துறை), ம.கவிப்பிரியா (கொட்டடி, பருத்தித்துறை), வே.ராஜமோகன்(வதனி இல்லம், [illegible] (4 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை), ஈ.மோசஷ் (தும்பளை) பா.பவித்திரா(இலகடி, உடுப்பிட்டி), போ.புஸ்பநேடிஸ் ( நாகலிங்க முதலியார் வீதி, பருத்தித்துறை), க.வினோஜன்(மாசார், பளை), தி.யக்ஸன் (புனித நகர், கற்கோவளம்), நா.விதுசன் (பருத்தித்துறை), பு.தயாபரன் (நா.மு.தெரு, பருத்தித்துறை), த.தனுசன்(சிவன் வீதி), சு.ஜோதிகா (கல்லூரி வீதி, பருத்தித்துறை), கு.நிமல் (2 ஆம் குறுக்குத் [illegible]), க.கஜன் ராஜ்(தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), த.தமிழினியன்(நெல்லியடி மத்திய கல்லூரி), வ.பிரேமச்சந்திரன் (புலோலி வடகிழக்கு), ம.ராகவி (புலோலி மேற்கு), பா.புவீந்திரன் (நெல்லியடி மத்திய கல்லூரி), க.உதயநாயகம் (கல்லூரி வீதி, பருத்தித்துறை), த.வாசுகி(தல்லையப்புலம், துன்னாலை தெற்கு), க.விமல்ராஜ் (கெருடாவில் தெற்கு தொண்டமானாறு), ர.நிலோஜன்( தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), ஞானதாசன் சரூபி (சுப்பர்மடம், பருத்தித்துறை).

பி.வசந்தி (மாலி சந்தி), ம.அருள்மொழி(நாவலடி, உடுப்பிட்டி), நி.நிதர்சன் (வல்வெட்டி), எஸ்.கோபிகா (புலோலி மேற்கு), கு.மோகன்ராஜ்(சிவரியோடை, கரணவாய் மேற்கு), ம.சுபா(எல்லை ஒழுங்கை, கற்கோவளம்), ஜெ.பிரதாபன்(நொத்தாரிஸ் தோட்டம் கரணவாய் மேற்கு), இ.வைஷ்ணவி(நவிண்டில்), மே.போல் கனிஸ்ரன் (தும்பளை சிவப்பிரகாசம் ம.வி), இ.ஜெயசுதா (புலோலி மேற்கு), ம.ஜஸ்மிதா (நெல்லியடி மத்திய கல்லூரி), அ.பானுஜா (சக்கோட்டை). (த-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் மாறுமா ஐ.பி.எல். இறுதிப்போட்டி?

இந்திய கிரிக்கெட் சபையின் 14 நிபந்தனைகளையும் மும்பை கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டதால் ஐ.பி.எல். இறுதிப்போட்டி மீண்டும் இடம் மாறுமா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

7ஆவது ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் மும்பையில் ஜூன் முதலாம் திகதி நடைபெறும் என்று முதலில் அறிவிக்கப்பட்டு இருந்தது. இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபைக்கும், மும்பை கிரிக்கெட் சங்கத்துக்கும் இடையே நடந்த பேச்சு தோல்வி அடைந்ததால் இறுதிப்போட்டி பெங்களூரில் அதே திகதியில் நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்தது.

இதற்கிடையில் இறுதிப்போட்டியை திட்டமிட்டபடி மும்பையில் நடத்த வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபைக்கு, மும்பை கிரிக்கெட் சங்கம் வேண்டுகோள் விடுத்தது. முடிவு எடுத்த பின்னர் மாற்ற முடியாது என்று ஐ.பி.எல். நிர்வாகிகள் கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில் மும்பை கிரிக்கெட் சங்க துணைத்தலைவர் ரவி சவாந்த் அளித்த ஒரு பேட்டியில், ஐ.பி.எல். சேர்மன் ரஞ்சிப் பிஸ்வாலிடம் இருந்து வந்த கடிதத்தில் 14 நிபந்தனைகள் விதிக்கப்பட்டு இருந்தன.

இறுதிப்போட்டி மும்பையில் நடைபெற வேண்டும் என்று எங்கள் சங்கத் தலைவர் சரத்பவார் விரும்புகிறார். இதனால் இந்திய கிரிக்கெட் சபையின் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்க நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம்.

எங்கள் முடிவு ஐ.பி.எல். நிர்வாக கவுன்சிலின் மனதை மாற்றும் என்று நம்புகிறோம். ஐ.பி.எல். நிர்வாகக் குழுவில் உள்ள மும்பை வீரர்கள் நிச்சயம் எங்களுக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று நினைக்கிறோம். 5 ஆண்டு நுழைய தடை விதிக்கப்பட்ட கொல்கத்தா நைட் ரைடர்ஸ் உரிமையாளர் நடிகர் ஷாருக்கான் இறுதிப்போட்டியை நேரில் பார்க்க அனுமதி உட்பட எல்லா நிபந்தனைகளையும் ஏற்பதாக நாங்கள் கடிதம் கொடுக்க இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவர் (ஐ.பி.எல். நிர்வாகம்) கவாஸ்கரிடம் கேட்டபோது, இறுதிப்போட்டி குறித்து நாங்கள் இன்னும் முடிவு செய்யவில்லை, மும்பை கிரிக்கெட் சங்கத்தின் பதிலுக்காக காத்து இருக்கிறோம் என்றும் அவர்களின் கடிதம் கிடைத்ததும், ஐ.பி.எல். நிர்வாகக் குழு கூடி இறுதி முடிவு எடுக்கும் எனவும் கூறியுள்ளார். (த)

# வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உடற்தகுதியே மிக முக்கியம்


கோர்ட்னி வால்ஷ்

வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உடற்தகுதி முக்கியம் என்று மேற்கிந்தியத் தீவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கோர்ட்னி வால்ஷ் கூறியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களுக்கான தேர்வு முகாமில் வோல்ஷ் கலந்து கொண்டு, இளம் வீரர்களுக்குப் பல நுணுக்கங்களைத் தெரிவித்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களைச் சில ஆண்டுகளுக்கு முன் இந்தியா பெற்றிருந்தது. ஆனால், காயம் காரணமாக அவர்கள் தங்களது உடற்தகுதியை இழந்தனர்.

உடற்தகுதி விவகாரத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் சவால் மிகுந்த சர்வதேச தொடர்களில் ஜொலிக்க முடியும்.

வீரர்கள், அதிக அளவிலான பணியை ஏற்க முடியாததன் விளைவே, காயம் ஏற்படக் காரணம் என்று நான் கருதுகிறேன்.

ஒரு துடுப்பாட்டக்காரர் பயிற்சி மேற்கொள்வதைவிட, வேகப்பந்து வீச்சாளர்கள் 2 மடங்கு அதிகமாகப் பயிற்சி எடுக்க வேண்டும். இதனை எத்தனை வேகப்பந்து வீச்சாளர்கள் உணர்ந்திருப்பர் என்று தெரியவில்லை. இவ்வாறு பயிற்சி இல்லாமல் சிறப்பாகச் செயற்பட எத்தனிக்கும்போது வீரர்களுக்கு காயம் ஏற்படுகிறது என்று வோல்ஷ் தெரிவித்துள்ளார். (த)

# களை கட்டுகிறதாம் கிரிக்கெட் சூதாட்டம்


வின்சென்ட்

கிரிக்கெட் சூதாட்டம் பல நாடுகளின் போட்டிகளில் நடைபெறுகிறது என்று நியூசிலாந்து முன்னாள் வீரர் வின்சென்ட் திடுக்கிடும் தகவலை த் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடந்த வங்காளதேச பிரிமியர் லீக் 20 ஓவர் போட்டியில் சூதாட்டம் நடந்ததாக சர்ச்சை கிளம்பியது. இது தொடர்பாக இந்த போட்டியில் விளையாடிய நியூசிலாந்து முன்னாள் வீரர் லூ வின்சென்ட்டிடம் சர்வதேச கிரிக்கெட் சபை ஊழல் தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தினார்கள்.

ஐ.சி.சி. ஊழல் தடுப்பு அதிகாரிகள் விசாரணையின் போது சூதாட்டத் தரகர் ஆட்ட நிர்ணயம் தொடர்பாகத் தன்னை அணுகியதாகவும், அதற்கு தான் சம்மதிக்கவில்லை என்று லூ வின்சென்ட் தெரிவித்து இருந்தார்.

இதனை அடுத்து ஐ.சி.சி. ஊழல் தடுப்பு அதிகாரிகளின் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பு நல்கிய லூ வின்சென்ட், இங்கிலாந்து கவுண்டி போட்டி உட்பட 5 நாடுகளில் நடைபெறும் உள்ளூர் போட்டிகளில் சூதாட்டம் பரவலாக நடைபெறுகிறது என்ற திடுக்கிடும் தகவலைத் தெரிவித்து இருக்கிறார்.

கிரிக்கெட்டில் சூதாட்டம் ஆலமரம் போல் படர்ந்து கிடக்கும் விவரங்களையும் லூ வின்சென்ட் விசாரணையின்போது தெரிவித்து இருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் கசிந்துள்ளன.

இந்த விவகாரம் குறித்து நியூசிலாந்து கிரிக்கெட் சபைத் தலைமை செயல் அதிகாரி டேவிட் வைட் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் விசாரணை நடத்திய எந்தவொரு போட்டியும் நியூசிலாந்தில் நடந்தது கிடையாது. தற்போதைய நியூசிலாந்து அணியில் இடம் பெற்ற எந்த வீரரிடம் விசாரணை நடக்கவில்லை. இதேபோல் நடப்பு நியூசிலாந்து அணியின் ஆட்டம் எதுவும் விசாரணைக்கு ஆளாகவில்லை என்று விளக்கம் அளித்துள்ளார். (த)

# முக்கிய பதவிகளில் கறை படிந்த வீரர்கள்



கறைபடிந்த வீரர்களை முக்கிய பதவிகளுக்குப் பாகிஸ்தான் கிரிக்கெட் நியமிப்பதாக அந்தச் சபையின் முன்னாள் தலைவர் ஸாகா அஷ்ரப் குற்றம் சுமத்தியுள்ளார்.

2000 ஆம் ஆண்டு ஆட்டநிர்ணயச் சதி தொடர்பாக விசாரணை நடத்திய நீதியரசர் கயூமினால் குற்றவாளியாகக் காணப்பட்ட மற்றும் கறை படிந்த முன்னாள் டெஸ்ட் வீரர்கள் பலரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை புதிதாக நியமித்தது ஏன் என ஸாகா அஷ்ரப் கேள்வி எழுப்பியுள்ளார்.

'இவ்வாறான கறைபடிந்த வீரர்களுக்கு எவ்வித பதவியும் வழங்கப்படக்கூடாது என நீதியரசர் கயூமினால் தெளிவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைவர் நஜாம் சேத்தியினால் புதிதாக நியமிக்கப்பட்டவர்களில் ஏறத்தாழ அனைவரும் குற்றவாளியாக காணப்பட்டவர்களாகவோ அல்லது கறை படிந்தவர்களாகவோ இருப்பது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது' என ஸாகா அஷ்ரப் கூறினார்.

பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக வக்கார் யூனிஸ் நியமிக்கப்பட்டமை மற்றும் சுழற்பந்துவீச்சுப் பயிற்சி ஆலோசகராக முஸ்டாக் அஹமட் நியமிக்கப்பட்டமை ஆகியன இத்றகு உதாரணங்கள் எனவும் ஸாகா அஷ்ரப் குற்றம் சுமத்தினார்.

இங்கிலாந்து அணியின் சுழற்பந்துவீச்சு பயிற்றுநராக முஸ்டாக் அஹமட் சிறப்பாகச் செயற்பட்டிருந்தார். எனினும் இங்கிலாந்து, வேல்ஸ் கிரிக்கெட் சபை அவரை ஒதுக்கிய நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவருக்கு புதிய பதவியை வழங்கியது.

இது தொடர்பாக ஸாகா அஷ்ரப் கூறுகையில்; இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கெட் சபையில் முஸ்தாக் சிறப்பாக செயற்பட்டிருந்தால், அவரின் அனுபவத்தின் மூலம் மேலும் பயன்களை பெறாமல் அவரை விடுவித்தது ஏன் எனக் கேள்வி எழுப்பினார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியை மீண்டும் பெறுவதற்கு தான் முயற்சித்து வரும் நிலையில், தனக்கு எதிராக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவதூறான பரப்புரைகளை மேற்கொண்டுவருவதாகவும் ஸாகா அஷ்ரப் குற்றம் சுமத்தியுள்ளார். (த)

# பொறுமையில் சிறந்தவர் டோனி


டோனி

இந்திய அணியின் தலைவர் டோனியின் வெற்றிக்கு அவரது பொறுமையே காரணம் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் லட்சுமண் கூறியுள்ளார்.

இந்திய அணியின் வெற்றி பங்கு அணித் தலைவரைப் பொறுத்தே அமைகிறது. அந்த வகையில் இந்திய அணியின் அணித் தலைவராக விளங்கும் டோனி தனது சிறப்பான பங்கை இந்திய அணிக்காக அளித்து வருகிறார்.

தற்போது ஐ.பி.எல். அணிக்காகவும் விளையாடும் இவரது சிறப்பான ஆட்டம் குறித்து லட்சுமண் கூறுகையில், டோனியின் வெற்றிக்குக்காரணம் அவரது பொறுமை மற்றும் சூழ்நிலை குறித்த அவரது விழிப்புணர்வு முக்கியமாக விளங்குகிறது.

ஒரு துடுப்பாட்டக்காரர், அணித்தலைவர் என்ற குறிப்பிட்ட சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதை சிறப்பாகச் செய்து வருகிறார். டோனி ஆரம்பத்தில் களமிறங்கும்போது ஒருமாதிரியாகவும், பின்னால் நெருக்கடியில் களமிறங்கும்போது வேறுமாதிரியாகவும் ஆடுகிறார். இதுவே சூழ்நிலை குறித்த [illegible] கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## German Institute

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் A1 exam க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. இம்முறை பரீட்சையில் 15 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். 86 வரை புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.
கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் 8 வருடங்களாக நடைபெறுகிறது. போலியானவர்களை நம்பி ஏமாறாமல் சரியான இடத்தை தெரிவு செய்யுங்கள். இம்முறை எம்மிடம் கல்வி கற்று சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை பத்திரிகை செய்திகளில் காணலாம்.

ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

Mrs .P. Kajenthini T.P. 077 1604823

## M & M FASHIONS

கவரிங் நகைகள்

தங்கத் திருமகள் தங்க மாளிகை அருகில் ராஜாத் தியேட்டர் கட்டடம்
205/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மணப்பெண் அலங்காரத்திற்குத் தேவையான நவீன டிசைன்களில் ஆன காப்புகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு கவரிங் நகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



(48120) (7.6.3)

## KU's London English School

Learn British English in the best English School

- IELTS -Personal and Group Classes
- ESOL-L1/L2/L3 -For School Students
- i-Spoken -Express English Speaking Course
- Business English - for Employees and Job Seekers

(All international English courses are delivered by local lecturers worked overseas)

Visit : http://edu.kugroup.info
Knowledge Universe
College of Professional Studies
No 626,1/1,K.K.S Rd,Jaffna.
Tel: 021-3208342/ 0777302882
16 years in international education delivery services.

UEC
Lectures by MBA Professionals

## நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு இயக்கச்சி சந்தியில் சிரமதானம்

பளை, மே 18

முள்ளிவாய்க்காலில் இன்னுயிர்களை நீத்த உறவுகளின் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னிட்டு இயக்கச்சிப் பகுதி மக்களால் நேற்று சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தப் பகுதி கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஏற்பாட்டில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு இயக்கச்சி சந்தியில் உள்ள அனைத்து வீதிகளின் இரு மருங்கையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

முள்ளிவாய்க்காலில் உறவுகளை இழந்த பலர் அவர்களின் நினைவாக சிரமதானத்தில் ஈடுபட்டவர்களுக்கு சிற்றுண்டிகளை வழங்கினர். (ஒ-9)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

(இலங்கை சுங்கத் திணைக்களம்)
1.சுங்க உதவி அத்தியட்சகர்
2.சுங்கப் பரிசோதகர்
3.சுங்கக் காவலர்

வெகுவிரைவில் ஆரம்பம் !
பதிவுகளுக்கு முந்துங்கள் !!

SUCCES
MOTIVATION CENTRE & LANGUAGE CENTRE
11,கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம்.
077 6408622

## பணிநிலை வெற்றிடம்

### கிராபிக்ஸ் டிசைனர்

பக்க வடிவமைப்பாளர் (Books Layout)
(CoralDRAW, Typing ,Photoshop)
(குறைந்தது 3 வருட அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

சம்பளம் 25000/=
(தகைமைகளுக்கு ஏற்றவாறு வழங்கப்படும்)

நேர்முகத்தேர்வு :
19.05.2014 திங்கட்கிழமை
மு.ப 10.00 மணி - பி.ப 01.00 மணி வரை

ANDRA PRINTERS
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0776622981, 021 221 7279

## NORTH LEAD

Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

ALL LAPTOPS, DESKTOP REPAIRS ONE DAY SERVICE

QUICK REPAIR & SERVICE
QUICK PICK-UP AND DELEVERY
Laptop & Desktop Accessories Available




LED, LCD TV & Monitor, Printer, UPS, Subwoofer etc

கணனிகளின் அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் சம்பிடர் பெற்றுக்கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவில்)

No: 328, Stanley Road, Jaffna.
(Near to Ariyakulam Junction)
Tel: 021-222 4459, 0774192275

Branch: No:12, Kanagapuram Road,
Kilinochchi (Near to Barathi Hotel)
Tel/Fax: 021-206 0909, 0772533390

## பாராட்டி வாழ்த்துகிறோம்



### Dr வை. தியாகராஜா MJF

எமது லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், பிதாமகனும், பிரபல சமூக சேவையாளருமான லயன் DRவை.தியாகராஜா MJF கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 B1 இற்கான உப ஆளுநர் தெரிவில் அமோக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியமைக்காக கோப்பாய் லயன்ஸ் கழகம் மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு பெருமையும் அடைகின்றது. இந்த வெற்றி கோப்பாய் பிரதேசத்திற்கு மட்டுமல்லாமல் யாழ். மாவட்டத்திற்கும் பெருமை தேடித்தந்த வெற்றியாகக் கணிக்கின்றோம்.

லயன்ஸ் கழகம்
கோப்பாய்.

LIONS CLUB OF KOPAY

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

## GERMAN LANGUAGE ACADEMY

கோணேஸ்வரனின் புகழ்பெற்ற ஜேர்மன் கல்லூரியில் கடந்த 02.04.2014 அன்று நடந்த A1 பரீட்சையில் எமது நிறுவனத்தினூடாக தோற்றி பெருந்தொகையான மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். இவர்களை German Language Academy பாராட்டி வாழ்த்துகின்றது. எமது கல்லூரி மாணவர்கள் முதற் தடவையிலே சித்தியடைந்தது குறிப்பிடத்தக்கது. பணத்தையும், நேரத்தையும் வீண் விரயம் செய்யாமல் சரியான தெரிவின் மூலம் எமது நிறுவனத்தினூடாக உங்கள் இலக்கை அடைந்து கொள்ளலாம்.

Best Wishes

German A1 Examination passed students



German Language Acadamy

எமது தமிழ் மாணவர்களுக்கு எமது நிறுவனத்தில் வேறு எங்கும் இல்லாதவாறு குறைந்த கட்டணத்தில் சிறந்த கல்வி...

முக்கிய அறிவிப்பு:
பரீட்சையில் தோற்றிய அத்தனை மாணவர்களிலும் எத்தனை மாணவர்கள் சித்தியடைந்தவர்கள் என்பது தான் முக்கியமான விடயம்.
எமது நிறுவனத்தினூடாக 90% மாணவர்கள் முதற் தடவையிலேயே சித்தியடைவது குறிப்பிடத்தக்கது .

போலியான விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்.

ஆசிரியர் : S. கோணேஸ்வரன்
தொடர்புகளுக்கு: 077 970 7322

GERMAN LANGUAGE ACADEMY
Palaly Road, Jaffna.

## 1 Ticket Free

சென்னை ,மலேசியா, மாலைதீவு போன்ற நாடுகளுக்கு செல்வதற்கான விமான பயணப் பற்றுச்சீட்டு ஒன்று இலவசம்.

5A Package (நிபந்தனைக்குட்பட்டது)

லண்டன், பிரான்ஸ், கனடா

SriLankan Emirates QATAR

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128,Brown Road, Jaffna
128,பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

## Personal Classes

தரம் 6-11 வரை அனைத்துப் பாடங்களும் வீட்டுக்கு வந்து கற்பிக்க ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்பு: 077 911 6820
(Jaffna circle)

(48135) (7.6.3)

## வேலை வாய்ப்பு

- யாழ். கச்சேரியடியில் உள்ள பணிமனையில் பணியாற்றக் கூடிய மூவர் தேவை.
- எமது கிளிநொச்சிக் கிளையில் பணியாற்றக் கூடிய கிளிநொச்சியைச் சேர்ந்தவர் தேவை.

பெயர், வயது, முகவரியை
SMS மட்டும் செய்யவும்.
Don't take call 077 217 4741

(48104) (7.6.3)

## அறை வாடகைக்கு

பல்கலைக்கழக மாணவிகளுக்கு/பெண்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு : 077 670 7854, 077 076 4027

## வீடு வாடகைக்குத் தேவை

ஆலய பிரதம குருக்கள் ஐயா ஒருவர் தங்குவதற்கு யாழ் நகரப்பகுதியில் அமைதி யான சூழலில் வீடு வாடகைக்குத் தேவை.
திருநெல்வேலி, கொக்குவில், நல்லூர், இராசாவின் தோட்டம், பிறவுண்றோட், கலட்டி, கே.கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, அத்தியடி ஆகிய பகுதிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 366 4420

## காணி விற்பனை கிளிநொச்சி

கென்னடி றோட், மூன்றாம் வாய்க்கால்,வயல்
20 ஏக்கர் உடன் விற்பனைக்குண்டு.
முற்பகல் 11.30 க்கு பின்னர் தொடர்பு கொள்ளவும்.
0777238300

## வங்கியியற் கற்கை நெறி

CBF /IABF DBF/ DABF

*இற்கான அனைத்து பாடங்களும் ஒரே இடத்தில்
*எமது வழமையான ஆசிரியர் குழாம்.
இன்று (18.5.2014) புதிய பிரிவுகள் ஆரம்பம்
தொடர்பு: K. ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை அருகில்
T.P. 077 4598430

ஆரவாரமாக, அனைவரினதும் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில்

## UK குடும்ப விசா

100% தூய சட்டமுறையான ஆலோசனை PR உம் இலகுவாகப் பெறலாம்.
கணவன்/ மனைவி 3 வருட ஆங்கில மொழி மூல பட்டப்படிப்பு-
பட்டம் பெறாதவர்கள் IELTS General 4.0 போதுமானது.

வென்று வந்த விசாவை ஆய்வு செய்த பின் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.

இன்றும்,
சகல நாடுகளுக்குமான Visit, Sponsor,Refusal விசாக்கள்,UK - Student Visa
நியூசிலாந்து Student Visa - IELTS இல்லாமலே

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016, 0215989090




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன்

18.05.2014


## முள்ளிவாய்க்கால் துயர் மலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYK

# மானிடப் பேரவலம்



## அவலங்களை அனுபவித்தவேளை...




"இடம்பெயர்வதே எங்கள் வாழ்வாகிவிட்டது"



அழுதழுதே கண்ணீர் வற்றிவிட்டது






வாழ்வும் சாவும் இதுக்குள்ளேதான்



இறுதிக் கணத்தில் முள்ளிவாய்க்கால்



"நாங்கள் என்ன பாவம் செய்தோம்?"





இலைக் கஞ்சிக்கும் வரிசையில் நின்ற எம் உறவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடப் பேரவலம்



## நெஞ்சை உருக்கிய இறுதித் தருணம்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடப் பேரவலம்

## 5 வருடங்களின் பின் முள்ளிவாய்க்கால்



2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஜோர்தான் நாட்டுக்குச் சொந்தமான கப்பல் இன்று இரும்புக்காக வெட்டி எடுக்கப்பட்டு மிஞ்சிய கப்பலின் நிலை





5 வருடங்களாகியும் மேற்கொள்ளப்படாத அபிவிருத்தி



முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட யுத்தம் முடிவடைந்த பின்னர் அப்பகுதியில் தமிழ் கொலைகளுடன் தமிழே இல்லாமல் படையினரால் அமைக்கப்பட்ட பெயர்ப்பலகை இது



முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை. 2011.




முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை. 2014





முள்ளிவாய்க்கால் மக்களின் பட்டுப்போன வாழ்க்கை



போர் முடிந்து 5 வருடங்கள் கடந்தும் முள்ளிவாய்க்காலில் போரை நினைவுபடுத்தும் எச்சம்





கொத்துக் குண்டுகள் பாயும்போது பாதுகாப்புக்காக வெட்டிய பதுங்குகுழி



மக்கள் விட்டுச்சென்ற உடைமைகள்

படங்கள்: தர்சன்

CMYK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி இருக்கிறது முள்ளிவாய்க்கால் ?

தர்சன்

முள்ளிவாய்க்கால் எதிரியின் மனதில் கூட இடம் பிடித்திருக்கும் ஓலம். 5 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் ஒவ்வொரு ஊடகமும் அவ்வப்போது உலக ஊடகங்களும் முணுமுணுத்த இடத்தின் பெயர். இப்போது எப்படியிருக்கிறது அந்த மண்?

கடற்கரை காற்று பலமாக அடிக்க ஒரு வெட்டை வெளியில் எனது மோட்டார் வண்டியை மெதுவாகச் செலுத்துகிறேன். எத்தனை ஆயிரம் மக்கள் நெருக்கி அடைபட்டு, கூடாரங்களின் கீழ் தங்கள் உயிரைக் கையில் பிடித்தபடி அவலத்தைச் சுமந்து திரிந்த வீதிகள், காணிகள் என்று நினைக்கையில் உச்சந்தலையில் பாய்ந்த மின்சாரம் உள்ளங்கால்கள் வரை சிலிர்த்துப் பரவுகிறது.

எல்லாவற்றையும் தன்னுள்ளே புதைத்துவிட்டு வெள்ளை மணல் மேலும் வெளிறிக் கிடக்கிறது. என்ன ஆச்சர்யம்! இங்கே பங்கர்கள் இருந்தன, அதன் மீது ஐ.நா. கொடுத்த கூடாரங்கள் இருந்தன என்று அடையாளம் காட்டும் எச்சங்கள் ஐந்து ஆண்டுகளின் பின்னரும் ஆங்காங்கே கண்சிமிட்டுகின்றன. சில பங்கர்களின் மேல் போடப்பட்டிருந்த மரக்குற்றிகள் மணலால் மூடப்பட்ட நிலையிலும் வெளியே துருத்திக் கொண்டு நிற்கின்றன.

ஒரு உடைந்த, நொருங்கிப்போன வீடு அதற்கு மேலே சிறிய கொட்டில்போட்டு மீளவும் தங்களது வாழ்க்கையை ஆரம்பித்திருக்கிறார்கள் முள்ளி வாய்க்கால் மக்கள். அந்த வீட்டில் வயோதிபத் தம்பதியினர் இருக்கின்றனர். அவர்களை நெருங்கிச் சென்று, "என்னம்மா! பங்கறுக்க ஆமி இல்லயோ? எல்லாம் மூடிப்போய் கிடக்கு. போட்டாங்களோ ?" என்று கேட்டேன் அதற்கு அந்த அம்மா "ஆர் தம்பி நீ..? நிலமை தெரியாமல் கதைகிறாய் அதுகள் எங்கட சனம் வெட்டி இருந்த பங்கருகள். உப்பிடி இருக்கப் போய்த் தானே எல்லாம் ஒட்டு மொத்தமா செத்ததுகள்" என்று பழைய நினைவுகளுக்குள் மூழ்கிப் போகிறார். அவரின் கண்கள் கலங்கின என்னால் மீண்டும் விசாரிக்க முடியவில்லை. சுதாரிச்சுக் கொண்டேன். குனிந்து குடிசையின் உள்ளே பார்த்தால் இரண்டு நபர்களின் உருவப்படத்துக்கு மாலைகள் போடப்பட்டிருந்தன.

ஆம்! அந்த பங்கருக்குள் இறந்தவர்களில் இந்தத் தாயின் இரு மகன்களும் இருந்திருக்கின்றனர்.

கண்களை துடைத்து விட்டு "உள்ளுக்கு வா தம்பி!" என்று ஒரு கதிரையும் தந்தார். கதிரையில் அமரந்து மீண்டும் கதைக்க ஆரம்பித்தோம்.

முள்ளிவாய்க்காலில் போரின் வடுக்கள் இன்னமும் மாறிவிடவில்லை. ஆயுதங்களின் வேட்டொலிகள் நின்றுவிட்டன. சாவுகள் குறைந்துவிட்டன. ஆனால் கண்முன்னே நிகழ்ந்த ஆயிரம் ஆயிரம் சாவுகளையும் கொடுமைகளையும் அவலங்களையும் பார்த்த முள்ளிவாய்க்கால் மக்களின் மனங்கள் அவற்றைவிட்டு இன்னும் வெளியே வந்துவிடவில்லை.

சிறிது தூரத்திலிருந்த மற்றுமொரு வீட்டுக்குச் சென்றேன். அங்கும் இதே பிரச்சினை தான். அந்த குடுக்பத்தில் தனது மனைவி, இரு பெண் குழந்தைகளை பறிகொடுத்துவிட்டு, எஞ்சிய ஒரு மகனை கண்ணை இமை காப்பது போல் காத்து வரும் ஓர் அப்பா இருந்தார். அவருடன் கதைத்துக்கொண்டிருக்கும் போது, "போர் முடிஞ்சு போச்சு" என்று சொல்லப்போக, "யார் சொன்னது போர் முடிஞ்சு போச்சுதெண்டு. அது நடந்து கொண்டே தான் இருக்கு.

அதுக்குப் பேர் சத்தமில்லாத போர். எங்கட இனத்த நாங்களே கொல்லுறம் இந்தப் போரில. ஆமில சேருகினம் பிறகு கழத்தறுத்து கொல்லுறாங்கள். கொண்டு போட்டு அவனும் சாகிறன். இப்பிடித்தான் நடக்குது. எதிர்கால சந்ததிதான் பாவம்" என்றார்.

அப்போது உள்ளே இருந்து வேகமாக வெளியே வந்த ஒருவர், "ஒரு முகத்தோட வாழவேணும். உப்பிடி பல முகங்களோட வாழக்கூடாது. ஆலமரத்த போல நின்டா நிலையா நிக்கோணும் சாய்ஞ்சா சாயோணும். தம்பி நீ ஆமியா இருக்கலாம், இயக்கமா இருக்கலாம், ஏன் றோவாக்கூட இருக்கலாம் எனக்குப் பயமில்ல. இண்டைக்கு என்ன தம்பி நடக்குது நாட்டில? சண்ட முடிஞ்சு 5 வருசம் ஆச்சு ஆனா என்னத் கண்டம், காட்டிக்குடுக்கிறதும் அள்ளிக்கொண்டு போறதும் தானே நடக்குது.

இயக்கம் இருக்கேக்க இயக் கம் போல பவுசு காட்டிக்கொண்டு திரிஞ்சது கள் எல்லாம் ஆமி வந்த பிறகு ஆமிக்கு வால் பிடிக்கிறாங்கள். தமிழனுக்கு காட்டிக்குடுக் கிற பழக்கம் எண்டைக்கு இல்லாம போகுதோ அண்டைக்குதான் எங்கட உரிமைக்கு போரா டலாம்" என்று பொரிந்து கொட்டத் தொடங்கினார்.

"அண்டக்கும் இந்த ஒருசாண் வயித்துக்காக ஓடி ஓடி உழைச்சம் இண்டைக்கும் இதே வயித்துக்காகத்தான் உழைக்கிறம். என்ன அண்டைக்குக் குடும்பத்தோட சந்தோசமாச் சாப்பிட்டம். இண்டக்கு குடும்பம் இல்லாம தனிய சாப்பிடுறம். இதுதான் 5 வருசமா நாங்க கண்ட அபிவிருத்தி" என்று ஆவேசமானார் அவர்.

அவருடைய பிள்ளைகள் போர் முடிந்த பின்னர் காட்டிக்கொடுப்புகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்களாம்.

படுகொலைகள் அரங்கேறி இன்றைக்கு 5வருடங்கள் அகியும் முள்ளிவாய்க்காலில் எம்மினம் அழிக்கப்பட்டமைக்கான சான்றுகளை ஏராளமாகத் தாங்கிக் கொண்டு இன்னும் ஆழ்ந்த அமைதியுடன் கிடக்கிறது முள்ளி வாய்க்கால். கிடக்கும் எச்சங்களைப் பார்க்கும்போது மக்கள் பட்ட அவலங்களின் நினைவுகள் நெஞ்சில் ஈர நிழலாடுகின்றன. சிறுவர்கள் குழந்தைகளின் ஆடைகள் திக்கு திக்காக சிதறடியபடியும் சமையல் பாத்திரங்கள் கறள் பிடித்தும், நெளிந்தும் முள்ளிவாய்க்காலின் வீதி ஓரங்களிலும் பங்கர் கிடங்குகளிலும் முழித்துக் கொண்டு கிடந்து போரின் நினைவுகளை விழிக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

றங்குப்பெட்டிக்குள் கிடக்கும் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளது பெயர் பதிக்கப்பட்டு கிளீன்கட் அடிக்கப்பட்ட தாள்கள், அங்கே அருகருகே கிடக்கும் ரவுண்ஸ்சுகள் எல்லாம் அவற்றை விட்டுச் சென்றவர்கள் திரும்பி வரப் போவதில்லை என்பதைச் சொல்லுகின்றன. முள்ளிவாய்க்கால் மக்கள் மட்டும் அவற்றோடு வாழக் கற்றுக்கொண்டார்கள்.

## மாண்டோருக்கு அஞ்சலி

மாண்டோருக்கஞ்சலி ஆன்றோர் செலுத்துகையில்
பூண்டோடு தடையறிவித்தது படைக்கூட்டம்
ஒன்றன்று பலர்கூடி தொழ ஒருபோதும் விடோம்
என்று இழுத்துமூடிற்று பல்கலையை

முடிவுப் போரதனில் படுகொலை புரிந்து எம்
உரிமை முழுவதையும் விழுங்கிய படை
எம்மூர்களில் குந்தியிருந்து விரட்டுகிறது
ஏதுமில்லையிங்கே ஓடிவிடு என்று

அண்ணன் தொலைந்தான்! புன்னகைதந்த
புருஷன் தொலைந்தான்! செல்வகுழந்தைகள்
தொலைந்தன! எம்துயர் கேளென்று புலம்புகையில்
பயங்கரவாதத்தின் மீள் எழுச்சி என்கிறது பகை


கொஞ்சிக்குலாவிய வஞ்சமற்ற உயிர்கள்
பிஞ்சு வயதினில் கொலைக்கருவிகளுக்காளபட
நெஞ்சுபொறுக்கா நினைவுகள் சுமந்து நாமழுதோம்
பிரபஞ்சமழிந்திடினும் ஆறாதெம்துயரம்!

கூடவிருந்து கதைபேசிய அன்பு நண்பன் மாண்டான்
அப்பா! அம்மா! அக்கா! அண்ணன்! தம்பி! தங்கை!
என்று கூண்டோடு பலர் மாண்டுபோயினர்
மறந்திடுமோ எம் மனங்கள் இத்தனையும்?

உயிர் நீத்தோர் நினைவேந்த எம்மூரில
எமக்கனுமதி மறுக்கிறான் மாற்றான்
தன் வெறி தீர தமிழ் மண்ணில் நின்று
வேண்டாக் கேளிக்கை காட்டுகிறான்

போதி மாதவன் புத்தர் துணைகொண்டு
படுகொலை தேசத்தில் படைக்கு மாலைசூடி
எம்மினமழிக்க சிங்கள தேசம் இன்று
கங்கணம் கட்டி நிற்கிறது

எத்தனை இடர் வ(ந்)தினும்
அத்தனை மனங்களும் புசிக்கும்
சொத்தன்றி சுகமுமன்றி எம்
தேச உறவுகளுக்காய்!



வி.கே.எம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருந்துகளும் ஒரு ஆயுதமாக...

தி.அமுதன்

30 ஆண்டுகள் தொடர்ந்தகள முனைப் போரில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அந்த இழப்புக்கள் பல்வேறு வகையானவை. மருத்துவ உதவிகள், மருந்துப் பொருள்களை போர் நடைபெற்ற பகுதிக்கு தேவையான அளவுக்கு அனுப்பாமல் விட்டும்கூட சாவுகள் நிகழ்த்தப்பட்டன.

"போகப் போக இடம் சின்னன். சனம்கூட. அப்ப அவன் அடிக்கிற செல்லில காயப்படுற வீதமும் கூட. இருந்த மருந்துகளைத்தான் பயன்படுத்தினது. போகப் போக மருந்துகளும் முடிஞ்சு போட்டுது" என்று தனது இறுதிப் போர் மருத்துவ அனுபவங்களைப் பகிர்கின்றார் திலீபன்.

மட்டக்களப்பைச் சொந்த இடமாகக் கொண்ட திலீபன் இறுதிப் போரின் போது வன்னியில் இருந்தவர். மருத்துவர்களுக்கும் மருத்துவ உதவியாளர்களுக்கும் பெரும் பற்றாக்குறை இருந்த போர்க் காலத்தில் மருத்துவர்களுக்கு உதவியாக இருந்தவர்களில் ஒருவர்.

வடபகுதியை நோக்கியதான போர் 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கின்றது. மன்னார் மாவட்டத்திலிருந்து தாக்குதல்கள் தொடங்குகின்றது. 2007 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி மீதான தாக்குதல் உக்கிரமடைகின்றது. இதனால் அங்கு காயப்படும் பொதுமக்கள், போராளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக, அரச வைத்தியர்கள் மற்றும் மருத்துவப் போராளிகள் மன்னார் பள்ளமடு வைத்தியசாலைக்குச் செல்கின்றனர்.

"மன்னார் பள்ளமடு வைத்தியசாலை சண்டை நடக்கிற எல்லைப் பகுதியிலதான் இருந்தது. இதால வைத்தியசாலைப் பக்கம் செல்லுகள் பெரிசா விழேல்லை. போராளிகளும், சனங்களும் சரிசமனான அளவில காயப்பட்டு வைத்தியசாலைக்கு வந்தவை. அங்க ஓரளவு மருத்துவ வசதி இருந்தது. காயங்கள், சின்ன மருத்துவ வேலைகள் மட்டும்தான் அங்க நடந்தது. பெரிய கேஸ் எல்லாத்தையும் முழங்காவிலுக்கும், கிளிநொச்சிக்கும் அனுப்பிடுவம்."

மன்னார் பள்ளமடுத் தாக்குதல் உக்கிரமடைகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் பின்வாங்க, வைத்தியசாலையும் பின்நகர்கின்றது. முழங்காவில் அடுத்த வைத்தியசாலையாக மாறுகின்றது. அந்தக் காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - இராணுவத்தினருக்கும் இடையில் உச்சக்கட்ட மோதல் நடக்கின்றது. இரண்டு மாதங்களில் அந்தப் பகுதிகளும் இராணுவத்தினர் வசமாகின்றது. இதனால் வைத்தியசாலை அக்கராயனுக்கு மாற்றப்படுகின்றது. அக்கராயன் பிரதேசத்திலும் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. ஒரு மாத காலப் பகுதியிலேயே கிளிநொச்சிக்கு மாற்றமடைகின்றது.

கிளிநொச்சியில் புதிய வைத்தியசாலை. பழைய வைத்தியசாலை எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. அங்கு ஓரளவுக்கு மருத்துவ வசதிகள், மருந்துகள் என்பன இருந்தமையால் சிக்கல் எழாமல் பார்த்துக் கொள்ளப்படுகின்றது. போராளிகள், மக்கள் என்று ஆயிரக்கணக்கானவர்களுக்கு தினந்தோறும் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

"கிபிர் மற்றது ஆட்டி செல் அடிச்சதெண்டு காயப்பட்டு நிறையப் பேர் வருவினம். இந்த ரெண்டாலையும்தான் காயக்காரர் கூடுதலாக வந்தவை. மருத்துகள் கைவசம் இருந்ததால எல்லோருக்கும் சிகிச்சையளிச்சம்."

2008ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கிளிநொச்சியும் இராணுவத்தினர் வசம் வீழ்கின்றது. அதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கி யாவும் நகர்த்தப்படுகின்றன. கிளிநொச்சியின் வீழ்ச்சியுடன் மருத்துவப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆனால் 3 லட்சம் மக்கள் சண்டைக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பாதிப்பேரளவிலானோர் காயமடைந்து வைத்தியசாலைகளை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

முல்லைத்தீவு வீழ்ச்சியின் பின்னர் வைத்தியசாலைகள் பிரிகின்றன. ஒவ்வொரு வைத்தியருக்கு சில மருத்துவ உதவியாளர்கள், மருத்துவ ஊழியர்கள் என்று பிரிக்கப்படுகின்றது. முடிந்தவரைக்கும் மருத்துவ சேவை சகல இடங்களுக்கும் பரவலாக்கப்படுகின்றது. ஆனால் அந்த ஏற்பாட்டால் தாக்குதலின் வேகத்துக்கும் அது காயப்படுத்தித் தள்ளும் எண்ணிக்கைக்கும் ஈடுகொடுக்க முடியவில்லை. மருத்துவப் பொருள்களுக்குக் குறிப்பாகச் சத்திர சிகிச்சை மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை மருத்துவப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு தொடர்கின்றது. இதனால் மக்களுக்கு முழுமையான மருத்துவ சிகிச்சை வழங்க முடியாதிருக்கிறது.

"வட்டக்கச்சியில வைத்தியசாலை வச்சிருந்தனாங்கள். அங்க வசதி சுத்தமா இல்லை. பெரும்பாலும் சின்ன காயத்துக்கு மருந்து கட்டுறது மட்டும்தான் அங்க நடந்தது. மற்றது எல்லாத்தையும் தர்மபுரம் வைத்தியசாலைக்கு மாத்திடுவம்."

வட்டக்கச்சியிலிருந்தும் மெதுவாக பின்நகர்கின்றது வைத்தியசாலை. விசுவமடுவில் பாடசாலை ஒன்றை வைத்தியசாலையாக மாற்றுகின்றனர். ஓரளவு இடவசதி மட்டும் கிடைக்கிறது. ஆனால் நோயாளர்கள் எண்ணிக்கையோ அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இங்கே புதியதொரு சவாலும் தோன்றுகின்றது. செல் காயங்களுக்கு அப்பால், தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. அவர்களைக் கவனிப்பதற்கும் பெருமளவு நேரம் மருத்துவர்களுக்குத் தேவையாக இருக்கிறது. ஆனால் ஆளணி கிடை[illegible] முற்றுகின்றது. வைத்தியசாலையில் மருந்துகள் இல்லாத சூழல், நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு என்பன வைத்தியத்துறையினரை திணறடிக்கின்றது.

இந்தச் சமயத்தில் வைத்தியசாலை மீது செல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன. புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீதும் செல் அடிக்கப்படுகின்றது. நோயாளர்கள் வைத்தியர்கள் பாதிக்கப்படுகின்றனர். அத்தோடு வைத்தியசாலைகளின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகின்றது. மருத்துவம் அடியோடு ஈடாட்டம் காண்கிறது.

ஐ.சி.ஆர்.சி. ஓரளவுக்கு உதவிக்கு வருகிறது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் அரச கட்டுப்பாட்டு பகுதிக்குக் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றனர். வெளியே கொண்டு செல்லப்படுபவர்களைவிட மிக மிக அதிகமானோர் புதிதாகக் காயமடைந்து வந்து கொண்டிருந்தார்கள். வைத்தியத் தேவையை நிறைவு செய்ய முடியாத நிலையில், மருத்துவர்கள் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

சிகிச்சையளித்தால் காப்பாற்ற முடியும் என்று மருத்துவர்கள் நம்பியவர்களுக்கு மட்டுமே மருத்துவக் கவனிப்பு என்றாகிறது நிலைமை. ஏனையவர்கள் சாக விடப்படுகின்றனர்.

புதுகுடியிருப்பும் இராணுவத்தினரின் கைக்குள் வீழ்கின்றது. இதன் பின்னர் ஆனந்தபுரம் பாடசாலை ஒன்றே வைத்தியசாலையாகிறது.

"ஆனந்தபுரம் பள்ளிக்கூடத்தில வைச்சு சிகிச்சையளிச்சம். அங்க காயக்காரருக்கு முடிஞ்ச வரை சிகிச்சை செஞ்சம். ஒரு நாள் பின்னேரம் எங்களுக்குத் தகவல் வந்தது, கிபிர் அடிக்கப் போறான் என்று. நாங்கள் இரவோட இரவா அங்க இருந்த நோயாளர்கள், காயப்பட்டாக்கள் எல்லாரையும் வெளியால கொண்டு போட்டம். அடுத்த நாள் காலம வெள்ளன கிபிர் அடிச்சவன். ஆனா எல்லாம் முதலே எடுத்ததால சேதமில்லை." திலீபனின் அனுபவங்கள் தொடர்கின்றன.

போரும் இறுதிக் கட்டத்தை நெருங்குகின்றது. தாக்குதல்கள் தீவிரமாகின்றன. உயிரிழப்பு கிரிக்கெட் ஸ்கோராக மாறுகிறது. மாத்தளனில் தற்காலிக வீடொன்றில் வைத்து வைத்திய சேவைகள் தொடர்கின்றன. இதுவரையில் செல் தாக்குதல், கிபிர் தாக்குதலில் காயமடைந்தவர்களே அதிகமாக இருந்த நிலைமை மாற்றமடைகின்றது. துப்பாக்கிச் சன்னங்களால் காயப்பட்டும் சிகிச்சைக்காக வருவோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஆனால் மருந்துகளின் வரத்து மிக மிகக் குறைந்து போய்க் கொண்டே இருக்கிறது. உயிர் காக்கும் மருந்துகள் அறவே இல்லை என்ற நிலை ஏற்படுகின்றது.

"ஏப்ரல் மாத தொடக்கத்தில மாத்தளனில வைச்சு சிகிச்சையளிச்சம். காயக்காரர் என்றா சொல்லி வேலையில்லை. அந்தளவுக்கு கொண்டு வருவாங்கள். வந்து முற்றத்தில இருத்துவாங்கள். [illegible] நானுறு காயக்காரர் வருவாங்கள். அதில கொஞ்சம் ஏலுமானவன் கத்துவான். தனக்கு வைத்தியத்தை செய்யச் சொல்லி அவன் கத்துவான். ஏலாததுகள் அப்பிடியே கிடந்து செத்துப் போகுங்கள். பார்க்க வயிறு பத்திக் கொண்டு எரியும். ஆனா என்ன செய்யிறது? என்ன செய்ய ஏலும் எங்களால?"

"ஒரு நாளைக்கு இரு நூறு பொடியாவது வரும். எங்களால சமாளிக்க முடியேல்லை. ஒவ்வொருவரும் கொண்டு வந்து வச்சுக் கொண்டு எங்களுக்கு மருத்துவம் செய்யுங்கோ, எங்களுக்கு மருத்துவம் செய்யுங்கோ என்று கத்திக் குளறுவின. நாங்கள் என்ன செய்ய? எங்களிட்ட மருந்தும் இல்லை மருத்துவம் செய்ய வசதியும் இல்லை. 10 வயதுக்குள்ள சின்னப் பிள்ளையள் வந்தா அதுகளுக்குத்தான் சிகிச்சையளிக்க முக்கியத்துவம் குடுத்தம். ஏதோ ஒரு தலைமுறைத் தமிழனாவது மிஞ்சட்டும் எண்றதுதான் நோக்கம்" திலீபனின் கண்கள் குளமாகின்றன.

"ஒரு 8 வயசு பொம்பிளப் பிள்ளை. ஆட்டி செல் அடிச்சதில முழங்காலுக்கு கீழ அப்பிடியே சிதைஞ்சு போச்சுது. தூக்கிக் கொண்டு ஓடி வந்தாங்கள். என்ன செய்யேலும். உயிரைக் காப்பதிறது எண்டால் காலை எடுக்க வேணும். உடன செய்தம். காலை வெட்டி பன்டேஜ் போட்டுக் கொண்டிருக்கேக்கையே அந்தப் பிள்ளை செத்துப் போட்டுது. அந்தப் பிள்ளையை கொண்டரேக்கயே நிறைய ரத்தம் போட்டுது. ஏத்துறத்துக்கு எங்களிட்ட ஒரு சொட்டு ரத்தம் இல்லை. எல்லாம் அந்த உப்பு மண்ணிலையே ஓடிக் காஞ்சு போச்சுது."

முள்ளிவாய்க்காலில், சுனாமி வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் சில வைத்தியசாலையாக மாறுகின்றன. ஆனால் அங்க மயக்க மருந்து இல்லை, சேலைன் இல்லை. அன்டிபயட்டிக்கூட இல்லை. ஆனால் காயக்காரர்கள் மட்டும் வந்து குமிஞ்சுகொண்டே இருப்பினம். ஆஸ்த்திரியா இருந்த வீட்டுக்கு நாலைஞ்சு வீடு தள்ளி ஒரு செல் விழுந்தது. அந்தப் பகுதியில குறிப்பிட்ட சுற்றளவில இருந்த எல்லாம் எரிஞ்சு கரிக்ப் போச்சுது. முழு இடமும் கரித்துண்டுகள்தான். செல் விழுந்த வீட்டிக்குள்ள இருந்த ஒருத்தரும் கரியாப் போயிருந்தார். ஒரு குண்டில இருந்து பல குண்டுகள் விழுந்து வெடிச்சதையும் கண்டிருக்கிறனம். அப்படி நடந்தா அன்டைக்கு காயக்காரர்கள் இன்னும் இன்னும் கனக்க வருவினம்."

"எங்களிட்ட இருந்த மருந்துகள் சரி எல்லாம் மே 13 ஆம் திகதியோட முடிஞ்சு போச்சுது. எல்லாச் சனமும் சின்ன இடத்து[illegible]தால வைத்தியம் செய்யிறதுக்கு இ[illegible] வழியில்லாமல் காயக்கா[illegible] துணிய கிழிச்சு ரத்தம் [illegible] ஒரு கட்டு போட்டம். அவ்வளவுதான் செய்ய [illegible]. இது தான் கடைசியாய் நாங்கள் செய்த வைத்தியம். நி[illegible] பேர் செத்ததுக்கும் இதுவும் காரணம்" என்று சொல்லி முடித்தார் திலீபன். அவரது வாய் [illegible]தைப்பதை முடித்துவிட்டது. ஆனால் மனம் இன்னும் முள்ளி வாய்க்காலை விட்டு மீண்டு வரவில்லை.

CMY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர்...

## முள்ளிவாய்க்கால் துயர் தந்த பரிசுகளில் ஒன்று

● தி.ராஜ்

காணாமற்போனோர் என்றதொரு சமூகம் தமிழினத்தில் இருப்பதை உலகம் கண்டுகொள்வதற்கு காரணமாக இருந்த நாள் இன்று. இராணுவத்தினரிடம் தாங்கள் உறவுகளை கையளித்து அவர்களைத் தேடிக் கொண்டிருப்பதற்கு காரணமான நாள் இன்று. முள்ளிவாய்க்கால் தந்த துயர் பரிசுகளில் இதுவுமொன்று. உயிரிழப்புக்கள், காயங்கள் அவை எல்லாம் கால ஓட்டத்தில் மாற்றம் கண்டாலும் விடையே தெரியாமல் தேடிக் கொண்டிருக்கும் மன உளைச்சலைத் தந்த காணாமற்போனோர் விவகாரத்துக்கு அத்திவாரமிட்ட நாள் இன்று.

இறுதிக் கட்டப் போர் தமிழ் மக்களுக்கு எல்லா வகையான இழப்புக்களையும் தந்து விட்டுப் போயிருக்கின்றது. சொத்திழப்புக்கள் தொடங்கி சொந்தங்களின் இழப்புக்கள் வரையில் எல்லாவற்றையும் தமிழினம் இழந்து நிற்கின்றது. அவை எல்லாம் முடிந்து போய்விட்டன என்றால், காணாமற்போனோர் விடயம் தொடர் கதையாகி இருக்கிறது.

இலங்கையில் போர் நடந்த மூன்று தசாப்த காலத்திலும் ஒவ்வொரு கட்டங்களிலும் தமிழர்கள் பலர் காணாமற்போயினர். இறுதிப் போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு காணாமற்போனோரின் விவகாரத்துக்கு இன்னும் முடிவு கிட்டவில்லை.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு மக்கள் வரத் தொடங்கினர். அப்போது மக்களிடமிருந்து காயப்பட்டவர்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் இராணுவத்தினர் பிரித்தெடுத்தனர்.

இந்தப் பிரித்தெடுப்புக்களின்போதே பலர் தமது கைகளால் இராணுவத்தினிடம் தமது உறவுகளை கையளித்தனர். எல்லோருக்கும் புனர்வாழ்வு வழங்கி விடுவதாகத் தெரிவித்து கொண்டு சென்ற இராணுவத்தினர், ஐந்தாண்டுகள் கடந்த பின்னர் அப்படி ஒரு சம்பவம் நடக்கவேயில்லை என்கின்றனர். இராணுவத்தினரின் புனர்வாழ்வை நம்பிக் கூட மக்கள், தமது பிள்ளைகள் புலியில் இருந்தனர் என்று சொல்லி அனுப்பத் தயாராக இருக்கவில்லை. இருப்பினும் அந்தத் தருணத்தில் காட்டிக் கொடுப்புக்களின் ஆபத்தினால் தமது உறவுகளை இராணுவத்தினரிடம் நேரடியாகக் கையளித்தனர். சரணடைந்த போராளிகளுக்குச் சாட்சியாக, அவர்களின் பாதுகாப்புக்காகவும், உறவுகளின் நம்பிக்கைக்காகவும், தேவனின் தூதனான மதகுருவும் போராளிகளுடன் சென்றார்.

பேருந்தில் ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டவர்கள் இன்று வரையில் திரும்பவே இல்லை. அந்த மதகுருவுக்கும் என்ன ஆனது என்று இதுவரையில் தெரியவில்லை. கண்முன்னே இராணுவத்தினரிடம் கையளித்த தமது உறவுகள் விடுவிக்கப்படவில்லை என்பதற்காக அவர்களின் உறவுகள் ஒவ்வொரு உலகத் தலைவர்களின் முன்பாகவும் ஒவ்வொரு நகரங்களிலும் தொடர்ந்து போராடிக் கொண்டே



இருக்கிறார்கள்.

### மாலாவின் கதை

யாழ்ப்பாணத்தில் கைதடியை சொந்த இடமாகக் கொண்டவர் மாலா. 1995 ஆம் ஆண்டு இராணுவத்தினரின் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கான போரின்போது கைதடியிலிருந்து இடம்பெயர்ந்து ஒட்டுசுட்டான் சென்றார். பத்து வயதில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய அவர் ஒட்டுசுட்டானிலும் நீண்டகாலம் தங்கியிருக்க முடியவில்லை. அடுத்த போர் தொடங்கவே, கிளிநொச்சி வட்டக்கச்சிக்கு இடம்பெயர்ந்தார்.

அதன் பின்னர் அவரின் வாழிடமாக வட்டக்கச்சியே மாறியது. புளியங்குளத்திலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயப் பகுதியிலேயே அவர் பணிபுரிந்தார். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் வடபோர் முனை பணியகத்தின் கீழ் பணியாற்றியவரை காதலித்தார். அவர் போராளியாக இருந்தபோது தொடங்கிய காதல் போர் தொடங்கி உச்சத்தை அடைந்த போது கைகூடியது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விசுவமடுவில் வைத்து தைப்பொங்கல் தினத்தன்று இருவரும் திருமணம் செய்கின்றனர்.

"சரியான செல்லடி. பிரச்சினைக்கேதான் என்ர கலியாணம் நடந்தது. அதுக்குப் பிறகு மாமியாக்களோட இருந்து இடம்பெயர்ந்தம். சனத்தோட சனமாக நாங்களும் இடம்பெயர்ந்து கொண்டு வந்தம். முள்ளிவாய்க்காலுக்கு கிட்ட வேட்டைகாடு என்ற இடத்தில பங்கர் வெட்டி நாங்கள் இருந்தனாங்கள். மே 12 ஆம் திகதி ஆமி அடிச்ச செல்லில அவருக்கு நெஞ்சில காயம். இருந்தாலும் பங்கருக்குள்ள நாங்கள் தொடர்ந்து இருந்தனாங்கள்.

கடைசியில வெளியில ரென்ற் அடிச்சிருந்த சனமெல்லாம் ஆமி கட்டுப்பாட்டுக்க போயிட்டுது. எங்களுக்குத் தெரியேல்ல. மே 17ஆம் திகதி காலம ஆமிக்காரர் வந்து எங்களை பங்கருக்கால வெளியில வரச் சொன்னதுக்குப் பிறகு தான் தெரியும் அந்த இடத்தை ஆமி பிடிச்சிட்டான்.

அதுக்குப் பிறகு நானும் அவரும் அவற்ற சொந்தக்காரர் 20 பேர் வரையில் வட்டுவாகல் பாலத்தால இராணுவத்தின்ர கட்டுப்பாட்டுக்குள்ள வந்தம். இவரை காயத்தோட கொண்டு வந்ததால ஆமி இவரை எங்களிட்ட இருந்து பிரிச்சிட்டாங்கள். காயக்காரரை தாங்கள் வைத்தியசாலைக்கு கொண்டுபோய் சிகிச்சையளிச்சுப் போட்டு முகாமுக்கு அனுப்புறம் என்று சொன்னாங்கள்.

நாங்களும் வாறம் என்று சொல்ல அவை விடேல்ல. இவரோட இவற்ற சொந்தக்காரர் இரண்டு பேரையும் காயம் எண்டதால அங்க விட்டிட்டு வந்தனாங்கள். எங்களுக்கு அந்த இடத்தில வேற வழி தெரியாததால விட்டிட்டு வந்தம். அதுக்கு இஞ்சால கொஞ்சம் தள்ளி ஐ.சி.ஆர்.சி. காயக்காரரை பதிஞ்சு ஏத்தினது. அது எங்களுக்கு தெரியாது. அதால ஆமியிட்ட மே 17ஆம் திகதி காலமை ஒரு 9.30 மணிக்கு குடுத்தனாங்கள்.

அதுகுப் பிறகு இன்டை வரைக்கும் நான் அவரைக் காணேல்லை."

இராணுவம் என்றாலே பயம். முதன் முதலாக அன்றுதான் இராணுவத்தைக் கண்டதாகச் சொல்லும் அவர், இராணுவத்தினருடன் திருப்பிக் கதைக்கவோ, அல்லது விடுமாறு கேட்கவோ மொழியும் வழியும் தெரியாது கணவரைக் கைவிட்டு வந்தார்.

"செட்டிக்குளம் முகாமில் இருந்தம். அப்ப அவரோட போன அவர்ர மருமோன் பெடியன் மற்ற சொந்தக்காரரும் வந்தவை. அவையிட்ட கேட்க, அவரை பொலன்னறுவை ஆஸ்பத்திரியில வைச்சிருந்ததை கண்டதென்றும், அவரிட்ட சி.ஐ.டியும் அவரோட இருந்த போராளிகளும் நிண்டு விசாரணை செய்தவை என்றும் மே 20ஆம் திகதி வார்டில இருக்கேக்க கண்டதென்றும், அடுத்த நாள் பார்க்க அவர் அங்க இல்லை எண்டும் சொல்லிச்சினம்.

அதுக்குப் பிறகு, பொலன்னறுவை ஆஸ்பத்திரியோட முகாமில இருந்து தொடர்பு கொண்டு கதைச்சம். அங்க பதிவுப் புத்தகத்தில அவற்ற பெயரே இல்லை எண்டு சொல்லிப் போட்டினம். இரண்டு மூன்று தரம் முயற்சி செய்தம். பதில் ஒரே மாதிரித்தான் வந்தது. அதுக்குப் பிறகு முகாமால வந்து இங்க வந்திட்டம். இஞ்ச வந்து மனித உரிமைகள் ஆணைக்குழு, உள்ள எல்லாத் தடுப்பு முகாமுக்கும் கடிதம் எழுதிப் போட்டனாங்கள். ஆனால் ஓரிடமும் இல்லை என்றுதான் பதில் வந்திச்சு. நேர போய் பார்க்கிறதுக்கு அங்கால இடமும் தெரியாது. அவ்வளவு வசதியும் இல்லை." மாலாவின் கண்கள் கண்ணீரை மாலையாக்குகின்றன.

அவரது ஐந்து வயதான மகனும் தன் தந்தையக் கண்ணால் பார்த்து விடுவேன் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றான். "அப்பாவ ஆமி பிடிச்சுக் கொண்டு போட்டுது. அப்பா எப்ப வருவார்?" என்கிறான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடப் பேரவலம்



## உன்னைத்தேடி

[illegible]

ஏன் என்றால் உன் மரணம்
இயற்கையானது அல்ல.
இயற்கை அரக்கர்களால்
செயற்கை ஆயுதத்தால் நடந்தவை...

ஒரு நாடு ஒரே மக்கள் என்கிறார்கள்
[illegible]

எம். கே. பிரசாந்

## உயிருள்ள பிணங்கள்

நான் கண்ட கனவு முடிந்துவிட்டது
நேற்றோடு-இன்று வெறுமையாக
புலம்பித்திரிகின்றேன். தினமும்
கூடவே இறந்துகிடக்கும் தென்னை
மரமும் இடையில் நசிந்த
உடல்களும் சாலையில்
தேங்கிக்கிடக்கின்றன.

பருத்த யானைகளையும் நாற்
படை வீரர்களையும் தள்ளிக்கொண்டு
குருதி ஆறுகள் புறப்பட்டன-பரணியில்.
இன்று தமிழனின் வரலாற்றைத்
தள்ளிக்கொண்டு வருகின்றன
சர்வதேச சேற்று ஆறுகள்-

இதுவரை கனவு கண்ட எதிரி
கண்களைத்துடைத்தபடி
நிழல்களின்பின் நடக்கின்றான்
முறிந்த பனையும் எரிந்த வயலும் அவனை
அழைக்கின்றன அழிவின் வழிநோக்கி
உயிருள்ள பிணங்கள் ஊருக்குள் இப்போ

கொம்புகளைப் பெற்றுவிட்டன.
குதிரைகள் மண்ணை ஏந்தியபடி
சார்க் நாடுகள் விலகின்
குதிரைகளுக்கு கொம்பேது
கொம்பில் மண்ஏது!தமிழ்குருதி:
ஆறாக்கப்பட்டுவிட்டன அதில்
அடித்துச்செல்லப்படுபவை
அயல்நாட்டு கறுப்புமுகங்கள்!

இன்றும் கனவு வரும் அது
நனவாகும் என்றெ[illegible]த் தூங்கினேன்.
மனித வாழ்வும் மரணச் சடங்குகளும்
மரண ஓலங்களும் வீதியில்
நடப்பதை எண்ணியபடியே!
வெறுமையாக்கப்பட்ட மனதில்
காலையில் ஏதோ ஒரு
கதை சேர்க்கப்பட்டதை உணர்ந்தேன்.
இரும்பு மழைகளி:ல் நனைந்தபடி
வெகு தூரம் நடந்து சென்று
வேளை உணவருந்தியபின்
விசாரணைக் கலைஞர்களின் சந்திப்புக்கள்
நிகழ்ந்தன. விடியவே நீதிபதியும் அவர்களே!

தாயின் கண்முன் வேடிக்கையாக
அழைத்துச்செல்லப்பட்ட மகள்
பல மிருகங்கள் மத்தியில்
காட்சிக்கு வைக்கப்பட்டாள் பல
கைகள் மாறியபின் முகாமிற்குள்
தாயின் கண்முன் வெற்றுடலாக

இரும்பை ஏந்தியே பழகிய கைகள்
போலி முகங்கள் என்றபின்னும்
வாலை ஒடுக்கியபடி அதற்குள்
மண்டியிடவேண்டுமா? இன்னும்கனவுகள்
எனக்குள் வரத்தான் செய்கிறது.
தேக்கிவைக்க இடமில்லை மனதில்.

அழிக்கப்படும் அடையாளங்களும்
அழிந்த உறவுகளும் மனதில்
கனவை முடித்துக்கொண்டு நான்
போகவேண்டி[illegible]
ஆலோசனைக்[illegible]

[illegible] (2009.05.12)

# நீ(தி)தீ

என்ன
குறை வைத்தோம்
உன்னில்,
ஏது குறை சொன்னோம்,
பல பண்பாட்டுத் திருவிழாக்களை
ஆடிக்களித்திருந்த
ஊர்களில் இருந்தல்லவா
காவடிகள் தூக்கி வந்தோம்.
தீச்சட்டி ஏந்தி வந்தோம்.
பாற்குடம் எடுத்து வந்தோம்.

எப்படித்தகும்?
கிரக பலன்கள் அவர்க்கும்
கிரக பாவங்கள் நமக்கும்
தோஷங்கள் நமக்கும்
பரிகாரங்கள் அவர்க்கும்.
நீதி கேட்டு
மதுரை மாநகரை எரித்த
சோழ நாட்டாளே,
எதை எரித்து நீதி கேட்பாள்
ஈழ நாட்டாள்?
உனைப்போல முடியாதம்மா,
எரிப்பதற்கு உனக்காவது
மதுரை மாநகர் இருந்தது
நாடே இல்லா ஏதிலையாள்
என் ஈழ நாட்டாள்.

யுத்தம் சுடுகாடு ஆக்கிய
ஊர்களுக்குள் நின்று கொண்டு
நீதி கேட்கிறாள்.
யுத்தம் சப்பித்துப்பிய
மனிதர்களுக்குள்
இருந்துகொண்டே
நீதி கேட்கிறாள்.
மரண ஓலமும் பிணவாடையும்
சுமந்து வரும் காற்றை
சுவாசித்தவாறு நீதி கேட்கிறாள்.
அம்மா! தாயே! என
வாயெடுத்துப்பாடிய
அதே வாய்கள்தானே
அன்றும்,
ஐயோ! அம்மா! என
ஓலமிட்டன.
என் தாயே! ஏன் தாயே!
நீ இரங்கி வரவில்லையே.
ஆயிரம் கண்ணுடையாளே
உந்தன் ஒற்றைக்கண் கூட
திறக்கவில்லையே.

பனிச்சங்காயில் படை
விரட்டியவளே!
கந்தகவெடி அதிர்வில்
எங்கள் தாய்க்குலத்துக்கு
மடி கிழிந்து
குறைப் பிரசவம் நிகழ்ந்தபோது,
உந்தன் பனிச்சங்காய்களில்
ஒன்றுதானும் அவர்க்கு
சிராய்ப்புக்காயமேனும்
கொடுக்கவில்லையே.
களப்புக்குள் எம் ஆடை களைந்து
களங்கப்படுத்தி
கலவரப்படுத்தியபோது
ஒட்டுத்துணி கூடத்தந்து
நம் மானம் காக்கவில்லையே.

உப்பு நீரில் விளக்கெரியும்
அதிசயம் காட்டியவளே!
[illegible]

உன்னிடமிருந்தல்லவா
பெறப்பட்டது.
நான்கு வானோடிகளின் பறப்பில்
நாற்பது லட்சம் தமிழனும்
உச்சி கிறங்கிக் கிடக்கையில்,
தலைக்கு மேலே எழுந்தவர்
தலைக்கனமே இல்லாது
உன்னிடம் பணிந்து
விடைபெற்றுத்தானே போயினர்.
உந்தன் கோபுர கலசத்துக்கு
பூத்தூவும் பறப்புதானே
வான்படை கண்ட
முதல் தமிழனின் முதல் பறப்பு!

ஏன் தாயே?
எமைக்கைவிட்டு விட்டாய்.
ஏன் தாயே?
எமைக்கைதுசெய்யவிட்டாய்.

உண்மைக்குள் வாழ்தல்
எத்தனை அர்த்தம்.
வாழ்ந்துதான் பார்த்தல்
எத்தனை அழகு.
என்றும் புதிரான
மௌனத்தை ஏன் தாயே
எங்கும் பரப்பிக் கிடக்கிறாய்.

[illegible]
முள்ளிவாய்க்கால் என நீளும்
எங்கள்
[illegible]
[illegible]
நெஞ்சுக்கு நீதியா?

தேரோடும் வீதியில்
கொலு இருந்தவர்க்கே
கொள்ளி வைத்தார்
புத்தரின் பெயரால்,
போர்தான் வாழ்வென்று
வந்தெம் உறவுகளைத் தின்று
ஏப்பமிட்டவர்கள்.
நெஞ்சில் ஆயிரம் தீயை வைத்தார்.
நடுநிசி நித்திரையை
மாற்றி வைத்தார்.
கண் கலங்க கதி கலங்க
ஊரெல்லாம் மரண ஓலம்
கேட்க வைத்தார்.
இந்தக் கருமமெல்லாம்
யார் தலைக்கு?
எல்லாம் எல்லாமே

வரலாறு மாறும்!
வண்டியும் ஓடத்தில்
ஏறும் என்று எதுவரை
சொல்லிக்கொண்டிருப்பேன்.
தருமத்தின் வாழ்வுதனை
சூது கவ்வும் தருமம்
மறுபடியும் வெல்லும் என்று
எதுவரை நம்பிக்கொண்டிருப்பேன்
இன்று போய் நாளை வரும்.
நெஞ்சறைக்கூட்டுக்குள்
அப்புழுக்கில்லாமல்
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org